# ஜீவநதி

கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

202
வைகாசி 2023
20.05.2023

ஆளுமைச் சிறப்பிதழ்

100/-

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

ஈழக்கவி
அஷ்ரஃப் சிஹாப்தீன்
சி.ரமேஷ்
அ.யேசுராசா
இ.சு.முரளிதரன்
பரணீ
அல் அஸூமத்
ஜவாத் மரைக்கார்
கந்தர்மடம் அ. அஜந்தன்
ஜெயபிரசாந்தி ஜெயபாலசேகரம்



## அல் அஸூமத் சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2023 - வைகாசி - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

கட்டுரைகள்

**ஒரு தனி அநுபவ முத்திரை பெற்றிருக்கும் அல் அஸூமத் சிறுகதைகள்**
ஈழக்கவி........................................ 03

**அல்.அஸூமத் - எழுதிய இஸ்லாமிய நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் எனது பார்வை**
அஷ்ரஃப் சிஹாப்தீன்............................ 10

**அல் அஸூமத் கவிதைகளில் சமூகம்**
சி.ரமேஷ்............................................ 14

**அல் அஸூமத்தின் "வெள்ளைமரம்" சிறுகதைத்தொகுப்பு**
அ.யேசுராசா........................................ 24


**யாப்புக்குறித்த அறிவை நல்கும் அற்புதமான நூல்; "யாப்பியலுரை ஆய்வுடனான ஒரு விளக்கம்"**
இ.சு.முரளிதரன் ....... ........................... 26

**அல் அஸூமத்தின் வெளியீட்டு முயற்சிகள்**
ஜவாத் மரைக்கார்................................ 35

**"ஆயன்னையம்மாதாய்" கசப்பான பல உண்மைகளின் கூட்டு விம்பம்**
கந்தர்மடம் அ.அஜந்தன்..........................37

**அல் அஸூமத்தின் இரு நெடுஞ்சிறுகதைகள்**
ஜெயபிராசாந்தி ஜெயபாலசேகரம்............ 40

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



**சிறுகதை**
அல் அஸூமத் - 18



**நேர்காணல்**
அல் அஸூமத் - 28



**கவிதை**
அல் அஸூமத் - 27, 42, 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2023 வைகாசி இதழ் - 202**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/-
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K.Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


## ஆற்றல் மிகு படைப்பாளி அல் அஸூமத்

திக்கிரியா என்னும் இடத்தில் 1942 ஆம் ஆண்டு பிறந்தவர் அல் அஸூமத். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் வேலாயுதம். காலவோட்டத்தில் இவரது பெயர் அல் அஸூமத் ஆகியது. இலக்கியத்தின் பல் வகைமைகளிலும் தன் தீராத இலக்கிய மோகம் காரணமாக கால் பதித்தவர். இவரது படைப்பு வல்லபம் காரணம் இவர் படைக்கின்ற படைப்புகள் யாவும் முக்கியமான படைப்புகளாக கொள்ளத்தக்கன. பூபாளம் என்ற கவிதைச் சஞ்சிகையையும் பௌர்ணமி என்ற சஞ்சிகையையும் வெளியிட்டவர். மரபுக்கவிதைப் பாரம்பரியத்தில் வளர்ந்த இவர் நவீன கவிதைகளையும் விரும்பினார். மரபுக்கவிதைகளின் இலக்கணம் தவறாது வகையில் சிறப்பான பல கவிதைகளை இலக்கிய உலகிற்கு தந்துள்ளார்.

நசுக்கப்படுகின்ற மக்களுக்கான குரலாக இவரது பல படைப்புகள் வெளிப்பட்டன. 1964 ஆம் ஆண்டு வீரகேசரியில் இவரது முதற்சிறுகதை யான "பூவின் காதல்" பிரசுரமானது. 60 ஆண்டுகளுக்கு மேலாக இலக்கிய உலகில் உலா வருகின்றார். அமைதியான சுறுசுறுப்பான இலக்கியத் தெளிவுள்ள படைப்பாளியாக விளங்குவதோடு, தமிழ் மொழியை சரியாக அனைவரும் பிரயோகிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அற்புதமான மனிதர். இவரது படைப்புகளில் தமிழ் மொழியை கையாளும் விதம் தனித்துவமானது.

வானொலியிலும் கவிதைச் சரம் என்ற நிகழ்ச்சியை நடாத்தி பெயர்பெற்றவர். 100 இற்குமேற்பட்ட கவிஞரங்குகளில் பங்கு கொண்டவர். இவரது சிறுகதைகள் வாசிப்பதற்கு மிகவும் இனிமையானவையாகவும் சில கதைகள் எள்ளல் பாங்கில் இலக்கிய சீர்கேடுகளை எடுத்து இயம்புவன வாகவும் காணப்படுகின்றன.

கலாபூஷணம், இலக்கிய சாகரம் விருது, தமிழ்மாமணி விருது, கொடகே வாழ்நாள் சாதனையாளர்விருது, ஆரா விருது என பல்வேறு விருதுகளை பெற்றுள்ள இவர் அமைதியான செயற்பாட்டாளர். 18 சிறந்த நூல்களை இலக்கிய உலகில் பிரசவித்துள்ளார். இவரது கவிதைகள், சிறுகதைகள் பெருந்தொகுப்பாக தொகுக்கப்பட வேண்டும்.

இலக்கியத்தின் விசுவாசியாக சிறந்த படைப்பாளியாக திகழும் அல் அஸூமத் அவர்களுக்கு சிறப்பிதழ் வெளியிடுவதையிட்டு ஜீவநதி பெருமையும் மகிழ்வு அடைகின்றது.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழக்கவி

# ஒரு தனி அநுபவ முத்திரை பெற்றிருக்கும் அல் அஸூமத் சிறுகதைகள்


சிறுகதை மர்மங்களை நன்கறிந்துள்ள; புதுமைப் பித்தனின் கதைகளுக்கிடையே திரியும்பொழுது ஒரு கவி-யுலகிலே திரிகிற உணர்ச்சி எனக்கு வருகிறது.

இவருடைய கதை ஒவ்வொன்றும் ஒரு தனி அநுபவ முத்திரை பெற்றிருக்கிறது.

ஒவ்வொன்றிலும் உண்மையின் நாதம் தொனிக்கிறது. இவருடைய சில கதைகளை ரஸம் ததும்புகிற பாடல்கள் என்றே சொல்லிவிடலாம்.

ஒரு கவியுள்ளம்- சோகத்தினால் சாம்பிய கவியுள்ளம்- வாழ்க்கை முட்களில் விழுந்து இரத்தம் கக்குகின்ற உள்ளம்- கதைகள் மூலம் பேசுகிறது.

"புதுமைப்பித்தன் கதைகள்" (1940) நூலுக்கு ரா.ஸ்ரீ.தேசிகன் எழுதிய இந்த முன்னுரை ("புதுமைப்பித்தன் கதைகள் முழுத்தொகுப்பு" 2001: 787, 791) வரிகளைப் படிக்கையில். அல் அஸூமத் (1942) இன் "முதுகச் சொறியுங்கோ" சிறுகதை என் மனவெளியில் மின்னிற்று. ஒரு நாள் கழிந்தது, துன்பக்கேணி, காலனும் கிழவியும், பொன்னகரம், மனக்குகை ஓவியங்கள், ஞானக் குகை, முதலான பிரதிகளை வாசித்ததன் உந்தலே ஆங்கிலப் பேராசிரியர் ரா.ஸ்ரீ.தேசிகன் அவர்களை இவ்வாறு எழுதத் தூண்டியிருக்கலாம். இன்னும் புதுமைப் பித்தனின் செல்லம்மாள், சாப விமோசனம் போன்ற பல கதைகளுக்கும் தேசிகனின் வாக்கியங்கள் பொருந்துகிறது. நேரம்கைக் கூடி வருகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் புதுமைப்பித்தனின் சிறுகதை ஒன்றினை வாசிப்பது என் வழமை. புதுமைப்பித்தனின் ஒரு நாள் கழிந்தது, சாப விமோசனம் போன்ற கதைகளை கற்பித்தல் தேவைகளுக்காக பல தடவை வாசித்திருக்கிறேன். இக்கதைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுகின்ற சந்தர்ப்பங்களில் மேல் குறித்த ரா.ஸ்ரீ.தேசிகனின் வரிகளை சுட்டியிருக்கிறேன். புதுமைப்பித்தனின் "ஒரு நாள் கழிந்தது" கதையை வாசித்தலின் போது ஏற்பட்ட உணர்வு "முதுகச் சொறியுங்கோ" கதையை வாசித்த போதும் ஏற்பட்டமையினால், தேசிகனின் வரிகள் என் மனசுக்குள் வட்டமிட்டிருக்கலாம். அல் அஸூமத்தின் "முதுகச் சொறியுங்கோ" கதையிடையே திரியும் பொழுது ஒரு கவி-யுலகிலே திரிகிற உணர்ச்சி எனக்கு வருகிறது;. அதனால்தான் கதையின் சில பகுதிகள் எனக்கு நெட்டுருவாக இருந்தது. எடுத்துக்காட்டாக சில வாக்கியங்கள்,

(நெ) எது நல்ல தீம்?... ஈழப்பிரச்சினை? அது மார்க்கட்டில் மலிந்துபோன பொருளாக இருக்கிறது! அகில உலகமும் அதில்தான் ட்றேட் ஸோன் நடத்து கிறது.... இலக்கியப் பிரச்சினைதான் இனிப்பாக்கி. அதுவும் வேண்டாம்! யாராவது ஒருவன் நான்தான் கைலாசின் ஆவி, கானாசூவின் ஆவி என்று கிளம்பப் போகிறான்!

(ட்) யாவும் கற்பனை அல்ல? அப்படி ஒன்றைப் போடப்போய், அலையில் யேசுராசா பிரம்போடு நிற்கப் போகிறார்! கற்பனை அல்ல என்றால் அதை ஏன் போட்டுக் காட்ட வேண்டும்? என் கவிதை நெருப்புக் கவிதை என்று தப்படித்த மாதிரி ஆகாதா அது?

(டு) பஸ்ஸில் போகும் போதெல்லாம் என்னென்ன வகையாக வருகிறது! கக்கூஸில் இருக்கும் போதுதான் அருமையாக வந்து தொலைக்கும்! வெளியில், "இந்த ஷேவிங் செட்ட இங்ஙின வச்சனே, எங்க?" என்பதைப் போல் ஒன்றால் மனைவியோடு கொளுவுவதோடு அதுவும் பறந்து விடும்! கக்கூஸுக்குப் போனால் நோட் புக்கோடு போகும்படியாகவா அது பொறுமையாக வந்து தொலைக்கிறது? வெள்ளைக் காரன் தான் சரி, அங்கேயே தாள் இருக்கும்! எனக்குக் கதை எழுதவே தாள் இல்லை. கக்கூஸில்தான் வைக்கப் போகிறேனா?

(ரு) பாவம், இன்று "டினஸ்ட்டி" போகும் போதே இவளுடைய பார்வை சரியில்லாமல் இருந்தது! பாவந்தான் இவள்! இலக்கியம் செய்வதை விட இல்லறம் செய்வது லாபமாகத் தெரிகிறது!

எண்பதுகளின் ஈற்றில் (14.011.1989-25.05.1990) யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "திசை" என்ற வாரப்பத்திரிகை நடாத்திய சிறுகதைப்போட்டியில் இக்கதை மூன்றாம் பரிசு பெற்றிருந்தது. "திசை"யின் 22.09.1989, 29.09.1989 இதழ்களில் இப்பிரதி பிரசுரமானது. இதனை வாசித்தபோது இதற்கு மூன்றாம் பரிசு அல்ல, முதற்பரிசு கொடுத்திருக்கலாம் என்று, அன்றைய நாட்களில் நான் நினைத்ததுண்டு (ஆனால் பின்னர் "கோசலை", "மையத்துக்கள் துயில்கின்றன" போன்ற கதைகள் பற்றிய "திசை"யின் கணிப்பு சரியானதே என்பதை உணர்ந்துகொண்டேன்). "முதுகச் சொறியுங்கோ" என்ற உரைபடைப்பு புதிய வெளிப்பாட்டு முறையில் பெரும் பாய்ச்சலை காட்டிநிற்கிறது. த.அஜந்தகுமார் குறிப்பது போல, "பரிசோதனை முயற்சி கள் இக்கதையில் துளிர்விட்டுள்ளதைக் காணலாம்". தீவிர வாசிப்பின் வாசற்படியில் நின்ற என்னைப்போன்ற பலரும் இப்பிரதியை ஆர்வத்துடன் வாசித்திருக்கிறார் கள் என்பதை அஷ்ரப் சிஹாப்தீனின் பின்வரும் கருத்துக்கள் நிரூபணமாக்குகின்றன. "மிக அண்மை யில் நண்பர் மேமன் கவி முகப்புத்தகத்தில் முதுகு சொறியும் தடி பற்றிய ஒரு கவிதையை பதிவிட்டிருந்தார். அதுபற்றி இடம் பெற்ற இரண்டு பின்னூட்டல்கள் என் கவனத்தைக் கவர்ந்தன. அதில் ஒன்று தேவராசா முகுந்தனுடையது. "அல் அஸூமத் "முதுகைக் கொஞ்சம் சொறிந்து விடுங்கோ" என்ற சிறுகதையை எழுதி "திசை" சிறுகதைப் போட்டியில் (1989) இரண்டாம் பரிசு பெற்றதாக இலேசான ஞாபகம்" என்று சொல் கிறார். "திசையில் 22.09.89 மற்றும் 29.09.89 ஆகிய திகதிகளில் வெளியான அல் அஸூமத் அவர்களின் சிறுகதையின் சரியான பெயர் "முதுகச் சொறியுங்கோ" என்பதாகும். இருப்பினும் உங்கள் நினைவாற்றலைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை" என்று சின்னராசா விமலன் தகவலைத் தெளிவு படுத்தி மற்றொரு குறிப்பிட்டிருந்தார். இந்தப் பின்னூட்டங்களை இட்ட முகுந்தனும் விமலனும் இக்கதை வெளிவந்த காலத்தில் சற்றேறக் குறைய 20 வயதுக்குட்பட்டவர்களாக இருந்திருக்கக் கூடும். அவர்களது நினைவாற்றலை நாம் பாராட்டும் அதே சமயம் இளவயதில் அவர்களால் படிக்கப்பட்ட ஒரு கதை இன்னும் இவர்களின் மனதில் பதிந்திருக்கிறது என்றால் அதற்கு அல் அஸூமத் அவர்களின் எழுத்தின் வலிமையும் ஒரு காரணம் என்பதை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்" (இணையம்). பல்கலைக்கழக குறிப்புகளை வைத்திருக்கும் என் கோவைகளுக்குள் "முதுகச் சொறியுங்கோ" கதை தாங்கிய திசை பத்திரிகையின் தாள்கள் இருந்தன. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் (1991) என் நண்பர்கள் பலர் இக்கதையை படித்திருக் கிறார்கள். இக்கதைப்பற்றி நிறைவே உரையாடியிருக் கிறோம். புதுமைப்பித்தனின் "சாப விமோசனம்" என்ற புனைவைப் பற்றி ஒரு ஆய்வுக்கட்டுரை (பார்க்க, "புதுமைப்பித்தனின் சிகரசாதனை: சாப விமோசனம்"; ஆறு சிறுகதைகள் ஒரு பகுப்பாய்வு; 2015) எழுதியது போலவே, இப்பிரதியைப் பற்றியும் எழுத எண்ணி யிருந்தேன்; ஆனால் முடியாமற் போயிற்று.

"முதுகச் சொறியுங்கோ" என்ற புனைவின் கதைச்சொல்லி ஒரு எழுத்தாளன். போட்டி ஒன்றிற்காக கதை எழுத முனையும் விபரிப்புகளே புனைவின் சித்திரிப்பாகியுள்ளது. புறமெய்மையில் இச்சித்திரிப்பு அமைந்துள்ளது. கதைசொல்லின் எழுத்துலக சங்கதி கள்; எழுத்தாள பிரம்மாக்கள் ஒரு பக்கமும், மனைவி யின் இருப்பின் பிரதிபிம்பங்கள் இன்னொரு பக்கமுமாக சித்திரிப்புக்குள்ளாகி, "உண்மையின் நாதம் தொனிக் கிறது". "ஒரு சாக்கா, மௌனி, சுந்தர ராமஸ்வாமி, மாமல்லன் மாதிரி இருக்க வேண்டும். நம் நாட்டு பாஷையில் சொன்னால், ஒரு தளையசிங்கம், தெளிவத்தை, உமா, ரஞ்சகுமார், கொத்தன் மாதிரி இருக்க வேண்டும். பிற நாட்டு பாஷையில் சொல்லும் போது, குமுதத்துக்கு வந்து கெட்டுப் போகாமல் இருந் திருந்தால் பிரபஞ்சனையும் சொல்லலாம்தான். வேண்டாமப்பா, ஒன்று வேண்டாம்! நான் நானாக இருந்தால் போதும்! புதுமைப் பித்தனின் அந்த முட்டாள் வேணு மாதிரி நானும் போய்விடக் கூடாது!" என்பதே கதைசொல்லியான இந்த எழுத்தாளனின் இயங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளம்.

கதைசொல்லி தன் புனைவுக்கு இட்டுள்ள தலைப்பு "முதுகச் சொறியுங்கோ" என்பதாகும். புனைவின் ஆரம்பவரிகள் தலைப்பை முன்னிறுத்தியுள்ளது. "போட்டிக்குச் சிறுகதை கேட்டிருக்கிறர்கள். என் எழுத்துக்களைப் பற்றிச்சில விமர்சகர்கள் கூறியிருப்பது வெறும் முகஸ்துதிதானா, முதுகுச் சொறிதல்தானா என்று நானே பரிசோதித்துக் கொள்ள ஒரு நவீன சந்தர்ப்பம்!". புனைவின் முடிவு இவ்வாறு மொழிகிறது. "முதுகக் கொஞ்சம் சொறிஞ்சி விடுங்களேன்," என்று இவள் பின் புறமாக நச்சரித்து நெருங்குகிறாள்! இலக்கியம் படைக்கு முன்னர் மனைவிக்கு முதுகு சொறிவது கூடப் பிள்ளையார் சுழி போலத்தானா?" புனைவே குறிப்பிடுவது போல, "ஒரு படிமமாக, ஒரு குறியீடாக, முழுக் கதையையும் பிழிந்தெடுத்துப் பில்ஸ் செய்தது போல, நல்ல தலைப்பாக" அமைந்துள்ளது.

புதுமைப்பித்தனுக்குப் போலவே, அல் அஸூமத்துக்கும் எள்ளலும் விமர்சனமும் புனைவின் ஆளுகைக்குள் அரியாசனமிட்டு அமர்ந்துவிடுகின்றன. புனைவுகளுக்கு தலைப்பு வைத்தல் பற்றிய அல் அஸூமத்தின் எள்ளல் கலந்த விமர்சனம் இவ்வாறு எகிறியுள்ளது: "துள்ளல், எள்ளல், கொள்ளல், என்று தனித் தலைப்பு நன்றாயிருக்குமா? அல்லது அரசத் துள்ளல், மக்கள் எள்ளல், மாட்டிக் கொள்ளல் மாதிரியாக இரட்டைத் தலையங்கம் நன்றாயிருக்குமா? அல்லது ஈப்பா மாதிரியோ நெல்லை மாதிரியோ நீண்டவை? காலங்காலமாக நினைத்தெண்ணிய காரிய வினை? ஒரே ஓர் வான் கோழிப் பறவைப் பட்சி கானவான் மயிலாக ஆகிறது? அல்லது வினாக் குறி? ஆச்சரியக்குறி?... இந்தக்கதையின் தலைப்பைப் புதுமையாக வைக்க வேண்டும்! புதுமை! புதுமை! கலியாணக் கதையானால் சாவு வீடு என்று வைக்கலாமே! ஹா! பிரமாதம்! தலையங்கத்தை வைத்தே நடுவர்களும் விமர்சகர்களும் பத்துப் பதினைந்து மணித்தியாலம் பேசி விடுவார்கள்! ஹப்பாடா ஒரு மாதிரியாகத் தலையங்கம் வந்துவிட்டது!"

இந்த புனைவுவின் சித்திரிப்பில் இலக்கிய உலகின் ஏமாற்றுவித்தைகள் பற்றிய விமர்சனம் அங்கதச் சுவையுடன் வியாபித்திருக்கிறது. "அட பே பயலே! முப்பது வருஷமா எழுதிறியே; இது வரைக்கும் எவனாவது ஒருத்தன் ஒன்னப் பத்தி மேடை யிலயோ பேப்பர்லயோ குசினிக்குள்ளயோவாவது சொல்லியிருப்பானா? ரெண்டே வருஷத்ல ஏம் பேரு இந்தப் பக்கம் ரஷ்யா வரைக்கும் அந்தப் பக்கம் அமெரிக்கா வரைக்கும் போயிருக்கு! இப்ப நாஞ சொல்லற மாதிரி செய்! ஏதாவது ஒரு வட்டத்ல சந்தா தாரனா சேந்துக்க! விடியல், புஷ்பம், ரத்தப்புரட்சி, ஜன ஸூன்யம், சிவப்புன்னு அடிக்கடி எழுது. சிகப்புன்னு எழுதினா இன்னும் விசேஷம்! அதுக்குப் பொறகு பாரு, ஆஹாம்பான்; இல்லேன்னா ஓஹோம்பான்! எத எழுதணும், எப்படி எழுதணும்னு நீ ஒண்ணுக்கும் யோசிக்க வேண்டியதில்லை! கன்னா பின்னாவுக்குக் கருத்துச் சொன்ன மாதிரி ஒன்ட ஒவ்வொரு பேத்தலயும் காத்திரம்பான்! யாருக்கும் எதுவும் வெளங்கணுமேங்கிற பிரக்ஞையும் வேண்டியதில்ல! எம்ஜியார் பேசுற மாதிரி எழுதிட்டா அதுதாண்டா புதிய இலக்கியம்! கொஞ்சக் காலத்துக்குப் பொறகு நீ எழுத வேண்டியது கூட அவசியமல்ல! சும்மா ஒளறிக்கிட்டே இருக்க வேண்டியது; அவனவன் அத டேப் பண்ணிக்கிட்டுப போய்றுவான்! அப்புறம் வெள்ளி விழா, பொன்னு விழா, வைர விழா, சாம்பல் விழா எல்லாமே வரும்! அந்த வட்டத்தில் ஒருத்தன் காத்து விட்டாக் கூட, "ஆஹா, ஸுகந்தம!" னு வட மொழியில சொல்லக் கத்துக்க! அந்த முன் பல் ரெண்டையும் புதுசாக் கட்டிக்க!..."

கதைசொல்லி எழுத்துலகோடு ஒன்றித்து நிற்பதால், "இலக்கியம் என் முதல் மனைவி என்று பீத்திக் கொள்பவன்". மனையோடு இருத்தலின் அன்னியோன்னியம் பற்றிய உணர்வுகளை/ உணர்ச்சிகளை நெகிழ்வோடு அசைபோடுபவன். அவர்களிக்கிடையே ஏற்படுகின்ற இடைவெளிகள், ஆற்றாமைகள், தாபங்கள் கலைநயம் ததும்ப உரைசித்திரமாக்கப்பட்டுள்ளன. புனைவில் தனித்தொளிரும் சித்திரமாக சித்திரிக்கப் பட்டுள்ள மனைவியின் மனக்கிலேசங்கள் மிக அற்புதமாக விவரித்துச் சொல்லப்பட்டுள்ளன.

(ம) சில நேரங்களில் என் மனைவிக்கு நல்ல தீம்கள். யோசனைகள் வரும். "சுற்றிவரப் பிணங்களாகக் கிடக்கும் போது உங்களுக்கு இலக்கியம்"! என்ற மாதிரி ஒரு ராத்திரி இரண்டு மணிக்கு முணுமுணுக்கிறாள்! நான் கூடக் கனவில்தான் பிதற்றுகிறாள் என்றுதான் நினைத்தேன்... இவள் ஒன்றையும் தீவிரமாக யோசித்துப் பேசுபவளும் இல்லை. இரவான பின் என் வாசிப்பும் எழுத்தும் இவளுக்குச் சில வர்மங்களில் பிடிப்பதில்லை! அதிலும் டீவி நிகழ்ச்சி முடிந்த பிறகு படு மோசம்! நான்வேறு பாவி, கட்டிலில் இருந்து கொண்டுதான் எழுதுவேன், வாசிப்பேன், நெருப்பில் சீனி போட்ட மாதிரி! இதனால் தெறிக்கும் ஏமாற்றமோ ஆத்திரமோ தான் இப்படி உருவம் கொள்ளும்!

(னை) "என்னாப்பா இது. இன்னும் தூங்கலியா?" "ம்!" "இந்த மனுசன் இப்படி ராத்திரி பகலா யோசிச்சி யோசிச்சிப் பைத்தியந்தாம் புடிக்கப் போகுது...." திரும்பிப் படுக்கிறாள். படுக்கட்டும்! பகல் முழுக்க மாரடிக்கும் மனைவிக்கு இரவிலாவது நல்ல தூக்கம் அவசியம்!... விழித்து வேதாளமாகப் பார்க்கிறாள்! எழுத வேண்டாம், யோசிக்க வேண்டாம் என்று

**அல் அஸூமத் ஒரு கவிஞர். கவிதைக்கான நுட்பங்களை துல்லியமாக தெரிந்திருப்பவர். ஆனால் அவரது கவிதைகளை விட அவரது உரைப்படைப்புகளிலேயே எனக்கு பிடிப்பு அதிகம். கவிதைகளில் வெளிப்படாத அவரது படைப்பாக்க மொழி அதாவது "உணர்வு மொழி" அவரது சிறுகதைகளிலேயே "உயிர்" பெற்றுள்ளது என்பது என் கணிப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கோலமாகத் தூங்கினால், நானென்ன வசிஷ்டரா -என் எழுத்துத் தவத்தைக் குலைத்துக்கொள்ள? என் தவறை நானும் ஒத்துக்கொள்ள வேண்டும்தான். அவளை நிம்மதியாக உறங்க வைத்துவிட்டு நான் பின் தூங்கிப் பின்னெழ வேண்டும். இலக்கியம் வந்துவிட்டது என்பதற்காக இல்ல ஐக்கியம் கெட்டுப்போக விடக் கூடாது!"

(வி) ஆறேழு வருஷத்துக்கு முதல் இப்படித் தான், இரவிரவாகக் கண்விழித்து, பிரமச்சரிய விரதமும் பூண்டு, மூன்று - நான்கு வாரங்களாகத் தனி வெண்பா வில் ஒரு நெடுங் கவிதை எழுதினேன்... அதைப் புத்தகமாகவும் போட்டேன். நகையைப் பிறகு செய்ய லாம் என்று தள்ளியும் வைத்தேன். ஐந்து வருஷமாகக் கொஞ்சமாகவா ஊடினாள்? புத்தகம் போடும் பிரச்சினை வள்ளுவருக்கு இருக்கவில்லை. இருந்திருந்தால் அந்தக் குறளைப் பிடுங்கி எறிந்து விட்டு, "ஆடுதல் காமத்துக் கின்பம் அதற்கின்பம் போடுதல் பொன்னா பரண்!" என்றல்லவா பாடியிருப்பார்!..... இப்போது அவசரங் களுக்கு ஈடு வைக்கக் கேட்டாலும்கூடக் கழுத்தைத் திருப்பிப் படுக்க மாட்டேன் என்கிறாள்!...

நவீனத்துவத்தின் கூறுகளை வெளிப்படுத்தி, மிக நுணுக்கமான பின்னல்களையும் கதைக்களத்தை யும் நிகழ்த்தி, ஒரு தனி அநுபவ முத்திரையை இப்பிரதி பெற்றிருக்கின்றது. வெவ்வேறான தளங்களில் இயக்க முறும் இப்புனைவின் அர்த்தம் ஆழத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. அல் அஸூமத்தின் பெரும்தொகை யான உரைபடைப்புக்கள் இத்தகைய அணுகுமுறை யிலேயே உயிர்ப்படைந்துள்ளன.

"திசை"(01.04.1989) இல் வெளிவந்த அல் அஸூமத்தின் இன்னுமொரு பிரதி "வம்சத்து வம்சம்" என்பதாகும். இப்பிரதி ஆக்கப்படும் காலங்களில் மிகக் கொடூர நோயாக/ நோய் காவியாக மக்களை அச் சுறுத்திக்கொண்டிருந்தது "எயிட்ஸ்"! அதனை மைய மாக கொண்டு ஒரு புதுப்பாணியில் மிக நேர்த்தியாக இப்பிரதி பின்னப்பட்டுள்ளது. எயிட்ஸ் நோய் தாக்கத் திற்கு உள்ளான தன்னினச் சேர்க்கையாளன் (ஹோமோ) ஒருவன் தற்கொலை செய்துக் கொள் கின்றான். "பேயாகி" அலையும் அவனது பேச்சே பிரதியாகியிருக்கின்றது. "நிச்சயமாக நீங்கள் அச்சப் பட்டே ஆக வேண்டும்! நீங்கள் ஒரு ஹோமோவாக இல்லாவிட்டாலும், உங்கள் உடம்பில் எயிட்ஸ் கிருமிகள் இல்லாவிட்டாலும், நீங்கள் அச்சப்படவே வேண்டும். எதிர் காலத்துக்காக. நீங்கள் ஒரு ஹோமோ வாக இருந்தாலும், அச்சப்பட்டே ஆக வேண்டும். ஏனென்றால், எயிட்ஸால் நீங்களும் இறக்குமுன், நானே உங்களைக் கொல்லப்போகிறேன்! ஹோமோக்களைப் பழி வாங்கத்தான் கடந்த ஒரு மாதமாகப் பேயாய் அலைகிறேன்!" இவ்வாறு உரத்த தொனியில் கதையின் துவக்கம் அமைந்துள்ளது. பிரதி முழுமையும் இந்த தொனியே தொனிக்கின்றது. ஒரு யுத்த அதிர்வு போல படுபயங்கரமாய் எயிட்ஸ் நோயின் கொடூரங்கள் சமூகத் துக்குள் எவ்வாறான விகற்பங்களை விதைக்கின்றது என்பதை பிரதி துல்லியமாக்கியுள்ளது. "மாலைக் கருக்கலில் தனிப்பாதையில் வந்த அந்தச் சிறு மயிலிடம் நானே இறகு கேட்டுக் கொண்டு நிற்கவில்லை... நான் இறகு பிடுங்கிய அந்த மயிலின் பிருஷ்டப் பகுதியில் சிவப்புக் கோடொன்று எனக்காக என் விதியை எழுதி வடிந்தது. திரும்பிப் பார்த்தபோது, சட்ட விலங்குகள் எனக்காகத் திறந்து நின்றன. என் கிருமிகளிலிருந்து அவனை விடுவிக்கப் பெரிய போராட்டம் ஆஸ்பத்திரியில் - ஏற்கனவே அவை இருப்பன தெரியாமல். ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்த அவனது குடும்பத்தவர்களைக் கண்ட போதுதான் என் குண்டலி குளிர்ந்தது; இறுகியது. என் மனைவி! "மகனே!" என்று அலறுகிறாள்...." தன்னின சேர்க்கையாளன் தானும் தறிகெட்டு தன் பிள்ளையையே வன்புணர்வுக்குள்ளாக்கிய கொடுமையை அல் அஸூமத் மனதை தைக்கின்ற மொழியில் சொல்லியிருக்கிறார். சமூகங்களுக் கிடையிலான அதாவது உறவுகளுக்கிடையிலான மாறு பட்ட அனுபவங்கள் யதார்த்தப்பூர்வமாக படம்பிடிக்கப் பட்டுள்ளன. தன்னினச் சேர்க்கையாளர்களின் தூய்மைத்துவ பொய்மைகள், வியாக்கியானங்கள் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றன.


"புறமெய்ம்மையில் நடைபெறும் நிகழ்சிகளைத் தளமாகக் கொண்டு அவற்றை உந்துபீடமாகக் கொண்டு தான் எடுத்துக்கொண்ட பொருளை முனைப்புற சித்தரிப்பதற்கான படிம உலகையும் சிறுகதையாளன் நிர்மாணிக்கவேண்டும். இந்தக் கட்டத்திலேயே அவன் புறமெய்மையை படிமங்களாக்கி நிஜ உலகின் உணர்ச்சி கொந்தளிப்புகளை வன்மையுடன் இரத்தத்துடனும் சதையுடனும் தருகின்றான். உண்மை சொட்டும் படிம ஒழுங்கமைப்பிலேயேதான் படைப்பின் வெற்றி தங்கியிருக்கிறது. இத்தன்மையை நிறைந்த சாத்தியங்களுடன் முதுகச் சொறியுங்கோ, சம்சத்து வம்சம்.... ஆகிய சிறுகதைகளில் அதிகம் தரிசிக்க முடிகிறது" என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் வரிகளை (உயிர்ப்புகள்: 1986)) கடனாகப் பெற்று த.அஜந்தகுமார் "தனித்துத் தெரியும் திசை" - திசை இதழின் சிறுகதைப் பங்களிப்பு - ஒரு மதிப்பீடு என்னும் ஆய்வு நூலில் (2009: 76) குறித்துள்ளமை அவதானிக்கத்தக்கது.

அல் அஸூமத் ஒரு கவிஞர். கவிதைக்கான நுட்பங்களை துல்லியமாக தெரிந்திருப்பவர். ஆனால் அவரது கவிதைகளை விட அவரது உரைப்படைப்பு களிலேயே எனக்கு பிடிப்பு அதிகம். கவிதைகளில் வெளிப்படாத அவரது படைப்பாக்க மொழி அதாவது "உணர்வு மொழி" அவரது சிறுகதைகளிலேயே "உயிர்" பெற்றுள்ளது என்பது என் கணிப்பு. "பூவின் காதல்" (வீரகேசரி; 1964) அவரெழுதிய முதல் சிறுகதையாகும். "தெளிவத்தை ஜோசப் அவர்களை நான் என் சிறுகதை ஆசானாக வரித்திருக்கிறேன்; எனக்குறிப்பிடும் அல் அஸூமத் "வெள்ளை மரம்" நூலின் என்னுரையில் பின்வருமாறு எழுதுகின்றார். "1966லிருந்து எழுபது வரையும் பிறகு 1974 லிருந்து எண்பது வரையிலும் ஓர் அஞ்ஞாதவாசமும் மேற்கொண்டிருந்தேன்! 1980க்குப் பிறகு தெளிவத்தை ஜோசப் அவர்களைக் கண்டபோது அவர் என்னைச் சிறுகதைகள் எழுதுமாறு தூண்டினார்... அறுபதுகளிலும் எழுபதுகளிலும் நான் பங்கு பற்றி யிருந்த சில சிறுகதைப் போட்டிகளை சுட்டிக்காட்டி, அவற்றுள் சிலவற்றுக்குத் தான் நடுவராக இருந்தமை யும், நான் பரிசு பெறாது போனாலும் என் கதைகள் பாராட்டப்பட்டன என்பதையும் வலியுறுத்தி, நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து போயிருந்த சில போட்டிக் கதைகளின் தலைப்பையும் சில முக்கியமான வரிகளையும் அவர் எனக்கு நினைவூட்டிய பொழுது நான் வியந்து போனேன்." வெள்ளை மரம் (2001), ஆயன்னையம்மா தாய் (2012) ஆகியன அவரது சிறுகதைத் தொகுப்பு களாகும். 1964 – 2023 வரையில் எழுதிய சிறுகதைகளில் தேர்ந்தெடுத்த 56 பிரதிகளைத் தொகுத்து "அல் அஸூமத் சிறுகதைகள்" என்னும் நாமத்தில் ஒரு பெருந் தொகை தொகுப்பொன்றினை உருவாக்கியுள்ளார். அது இன்னும் அச்சாக்கம் பெறவில்லை. அப்படி ஒரு நூல் வெளிவரும்போது அது பெரும் அதிர்வலைகளை உருவாக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஏனெனில், அல் அஸூமத்தின் சிறுகதைகள் கலைநயம் குன்றாத நவீன படைப்பாக்கங்களாக பிரகாசித்து நிற்கின்றன.



முதுகச் சொறியுங்கோ, வேஷங்களின் தூய்மை, குடும்பப் பொய், விரக்தி, 34 –58, 77, 83! – நாளை?..., இருட்டு, புதுமைப்பித்தனின் அந்தராத்மா, நிலத்தாய், ஆலங்குடி வங்கனாரும் மல்லிகை சி.குமாரும், யாதும் ஊரே, யாவரும் கொரோனர்! முதலான பிரதிகள் போட்டிகளுக்காக எழுதப்பட்டவை. அவற்றில் பல பரிசில்களையும் பெற்றுள்ளன. போட்டி களுக்காக எழுதப்படும் படைப்புகளின் கலைத்தரம் பற்றிய ஐயவினாக்கள் எப்போதும் எனக்குள் சுழல் கின்றன. சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனமும் தேசியக் கலைகள் மன்றமும் இணைந்து நடத்திய "கோல்டன் பாயிண்ட்" சிறுகதைப் போட்டியின் 1992ஆம் ஆண்டுக்கான நடுவராக இருந்து மார்ச் 26, 1993 அன்று சுந்தர ராமசாமி தெரிவித்த தேர்வு முடிக்கான குறிப்புகள் அவதானத்திற்குரியது. "சிறந்த சிறுகதைகளின் அமைப்பு சார்ந்து எந்த இறுக்கமான முன்முடிவுகளை யும் நான் வைத்துக் கொள்ளவில்லை. இந்தியத் தளத்தி லும் சர்வதேசத் தளத்திலும் சிறுகதைகளின் உருவ உள்ளடக்கங்களில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை என்னளவில் அறிவேன். ஒரு சிறு கதை, மரபு ரீதியான வடிவப் பிரக்ஞை கொண்டதா கவோ அல்லது அதை ஏற்றுக்கொள்ளாததாகவோ இருக்கலாம். பொருள் சார்ந்து சொல்வதென்றால் ஆகாசத்திற்குக் கீழிருக்கும் சகல விஷயங்களும் ஒரு சிறுகதைக்கு உவப்பான விஷயங்களே. பார்வையும் படைப்பாற்றலும் இருந்தால் நம்மால் கற்பனை செய்து பார்க்க இயலாத விஷயமும் படைப்பாக மலரும். ஆகவே, உள்ளடக்கம் சார்ந்தும் எனக்கு எவ்வித முன் விதியும் இல்லை. ஆனால் இக்கதைகளோ சிறுகதை யின் உருவும் பற்றி அறியாதவர்கள் எழுதிய கதைகளாக எனக்குப்பட்டன. இக்கதைகளில் வடிவத்திலோ, உள்ளடக்கத்திலோ எவ்விதப் புதுமையும் இல்லை. சிறுகதையின் ஒருமை, குறிக்கோள், சிக்கனம், கட்டு மானம், செய்நேர்த்தி போன்ற கூறுகள் பற்றிய பிரக்ஞை கொண்ட எந்தச் சிறுகதையும் இல்லை. இன்றையக் காலத்திற்குரிய பிரச்சினைகள் பற்றிய பிரக்ஞை கொண்ட சிறுகதையும் இவற்றில் இல்லை. நேற்றைய மோசமான சிறுகதைகளின் பாதிப்பையோ அல்லது நேற்றைய மோசமான கவிதைகளின் பாதிப்பையோ இவை கொண்டிருக்கின்றன. நவீன வாழ்க்கையின் ஒரு வியாபாரப் பேச்சில் இடம்பெறும் கவனம், விழிப்பு, தேர்வு, வெளிப்படும் வார்த்தைகளில் இருக்கும் இங்கிதம், சம்பாஷணையை நகர்த்துவதில் இருக்கும் புத்திசாலித்தனம் ஆகிய குணங்கள்கூட இக்கதைகளில் பிரதிபலிக்கவில்லை."

போட்டிக்கான படைப்பாக்கங்களை தேர்வு செய்யும் நடுவர்களிடம் இத்தகைய கூரிய விமர்சன பார்வை இருக்கின்றதா? இருந்தாலும் அவற்றை வெளிக் கொணரும் நேர்மை அல்லது திராணி அவர்களிடம் இருக்கின்றதா? போட்டிக்கான படைப்பாக்கங்களை தேர்வு செய்யும் நடுவர்களின் தகுதிவாதங்கள் என்ன? அவர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றனர்? போட்டிக்கான பிரதி "பரிசுபெறும்" மனோநிலையிலா எழுதப்படுகின்றது? அப்படியாயின் அதன் கலைத் தரம்...? நடுவர்கள், போட்டிப் படைப்புக்கள் பற்றிய பல நூறு வினாக்களையும், நம்பிக்கையின்மை, தரமின்மை பற்றிய உரையாடல்களையும் காலம்காலமாய் அவதானிக்கிறோம். நக்கீரர் காலத்திலேயே போட்டி படைப்புக்கள் பற்றிய விவாதங்கள் தொடங்கிவிட்டன. நம்பிக்கையின்மையும் தரமின்மையும் போட்டிகளின் வெளிப்பாடுகளாக கோலேச்சுகின்ற போதிலும், ஓரிரு புறநடைகளையும் அவதானிக்க முடிகின்றது. அல் அஸூமத் போட்டிகளுக்காக சிறுகதைகள் எழுதிய போதிலும் அவற்றின் கலைத்தரம் மேம்பட்டு நிற்கின்றது. பேராசிரியர் கா.சிவத்தம்பியின் சொற்களில் சொன் னால், "இலக்கிய முழுமையுடன்" அவரது சிறுகதைகள் படைப்பாக்கம் பெற்றுள்ளன. "சிறுகதையின் ஒருமை, குறிக்கோள், சிக்கனம், கட்டுமானம், செய்நேர்த்தி போன்ற கூறுகள் பற்றிய பிரக்ஞை கொண்டனவாகவும், இன்றையக் காலத்திற்குரிய பிரச்சினைகள் பற்றிய பிரக்ஞை கொண்டனவாகவும்" அவை அமைந்துள்ளன.

"புதுமைப்பித்தனின் அந்தராத்மா" என்ற சிறு கதை போட்டிக்கதைகள், நடுவர்கள், தேர்வுமுறைமை களின் முறைக்கேடுகள் முதலான விடயங்களின் விமர்சனக் கோர்வையாக அமைந்துள்ளது. விமர்சனம் அங்கதச் சுவையுடன் வெளிக்கொணரப்பட்டுள்ளது. புதுமைப்பித்தனின் அந்தராத்மாவே கதை சொல்லி! இப்புனைவு புதுமையான வெளிப்பாட்டு முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைப்பட்டுள்ளது. புதுமைப்பித்தன் எனும் ஆன்மா அவனுடைய உடலிலிருந்து பிரிந்தபின்னர், அந்தராத்மா தனியாக சுற்றிக்கொண்டிருக்கிறது. கொழும்பில், புதுமையான முறையில், "புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டி"க்கு வந்த கதைகளைத் தேர்ந்தெடுக்கப் போவதை கேள்விப்பட்டு அங்கு வருகின்றது. ஆகாய வழியில் வருகையில் கல்கியின் அந்தராத்மாவை சந்திக்கிறது. இரு அந்தராத்மாக்களும் உரையாடிக்கொள்கின்றன. தேர்வு நடக்கும் மண்டபத்துக்கு புதுமைப்பித்தனின் அந்தராத்மா வருகைத்தருகிறது. அந்த மண்டபத்து நடுவர்களின் செயற்பாடுகளே விமர்சனமும் நையாண்டியும் குமிழியிட சித்திரிப்பாகியுள்ளன. புனைவின் இறுதி வரிகள் இவை: "தலைவர் பேசினார். "யார் என்னதான் முரண்டு பிடிச்சாலும் நடுவர்களின் பெரும்பான்மைத் தீர்ப்பை எங்களால் மாற்ற முடியாது... அடுத்தது, ஆண்களுக்குத்தான் நாங்க பரிசு குடுக்கிறோம் என்ற குற்றச்சாட்டு பாரதூரமானது. இந்தக் கதையை எழுதியிருப்பவர் ஆண் அல்ல. ஷாமிளா என்ற பெண்!" நந்தினியையும் கந்தன் மாறனையும் தவிர எல்லாரும் புன்னகைத்துக்கொண்டார்கள். நந்தினி தனது கைப்பையிலிருந்து ஒரு துண்டுத் தாளை எடுத்து என்னவோ எழுதினார்.... கமல நந்தினி கொடுத்த சிறிய துண்டைத் தலைவர் விரித்துப் பார்த்தார். எழுத்துகள் எனக்கும் (புதுமைப்பித்தனின் அந்தராத்மா) நன்றாகத் தெரிந்தன. "இது புதுமைப்பித்தன் விழாவுக்கான போட்டி. ஒரு முஸ்லிமுக்கு, அதிலும் பெண்ணுக்குப் பரிசு கொடுக்கத் தேவையில்லை".

விரக்தி - 1993 இல் "கலை ஒளி" முத்தையாப் பிள்ளை நினைவாக நடத்தப்பட்ட மலையகச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற சிறுகதை. 1999இல் "சார்க்" நாடுகளுக்கிடையிலான ஆங்கில மொழி பெயர்ப்புச் சிறுகதைப் போட்டிக்குரிய இலங்கையின் சிறந்த சிறுகதையாகப் புதுடெல்லி, "கதா" இயக்கத்தால் தெரிவு செய்யப்பட்டுப் பணப் பரிசளிக்கப்பட்டது. சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது. " "விரக்தி" என்கிற கதையின் உள்ளே நுழைந்து ஆழ்ந்து விடாமல் அதை நாம் வாசிக்கவோ விரக்தியை உணர்ந்து கொள்ளவோ முடியாது. இது என்ன கதை? இதற்குப் போய் முதல் பரிசு கொடுத்திருக்கின்றார்கள்! என்னுடைய கதை இதைவிட நன்றாக இருக்கின்றதே! என்னும் குரல்கள் கூடுதலாகக் கேட்டதற்குக் காரணமே அவர்கள் படைப்புக்கு வெளியே இருந்து கொண்டது தான். மனித வாழ்வுக்கு முக்கியமானதே "நம்பிக்கை"; அதை விடுத்து "விரக்தி" பற்றிப் பேசுகிறவர்கள் எல்லாம் என்ன சமுதாய எழுத்தாளர்கள் என்று பேசுகிறவர்களிடமிருந்து நாம் ஒன்றும் பெரிதாக எதிர்பார்க்க முடியாது!" என்பது தெளிவத்தை ஜோசப் (வெள்ளை மரம்: முன்னுரை) இன் கருத்தாகும்.

வெலிமட முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர் விடுதியில் நான் தங்கியிருந்த போது, ஒருநாள் (23.05.2002) அல் அஸூமத் அங்கு வருகைத் தந்தார். மறுநாள் காலை செல்லும் போது, "வெள்ளை மரம்" தொகுதியை தந்தார். அவரை வழியனுப்பி வந்ததும், ஆணி அடித்தாற் போல் அமர்ந்து பன்னிரண்டு கதைகளையும் படித்தேன். முதுகச் சொறியுங்கோ, வான் கோழி, வம்சத்துவம்சம் போன்ற கதைகளை ஏற்கனவே வாசித்திருக்கிறேன். முதுகச் சொறியுங்கோ கதை என்னை எவ்வாறு ஆகர்ஷித்திருந்ததோ அதைவிட பன்மடங்கு ஆகர்ஷிப்பை "விரக்தி" பிரதி எனக்குள் ஏற்படுத்தியது. ஒரு வீணையின் நாதம் போல அதன் வரிகள் எனக்குள் ரீங்காரித்தன. பட்டுப்போன்ற சொற்களைப் படிக்க படிக்க பிரமிப்பே பிரவகிக்கின்றது.

(நா) "யாதும் ஊரே; யாவரும் கேளிர்! இந்தத் "தியறி" சொல்கிறது முழு உலகமுமே நமக்குத்தான் சொந்தமென்று. இடுகாடு சொல்கிறது புல் முளைக்கும் வரை ஆறடிதான் என்று. ஆனால் தோட்டக்காட்டுச் செக்றோல் சொல்கிறது, ஒரு மில்லி மீட்டர்கூட இல்லை; போடா!" என்று!"

(த) "பெத்த தாயத் தோட்டத்துல தவிக்க உட்டுப்போட்டு மகெங்காரன் டவுன்ல கூத்தடிக்கிறான்!" என்று கடுகந்தை வெறும் வாயையே மெல்கிறது, ஆனால் அவல் எங்கள் அம்மாவின் வாயில்!

(ம்) அம்மாவின் மௌன மகிழ்ச்சிக்கு எல்லை இருக்கவில்லை. மருமகளின் அன்பளிப்புகளால் உடல் பூரித்தார். தான் சமைத்தவற்றை மூத்த மகனும் பேரனும் உண்டதால் பெற்ற வயிறு குளுகுளுத்தது. இரு லயத்தார்களும் வந்து முறை வைத்துக் கதைத்துச் சென்றதால் மனம் பெருமிதப்பட்டது. நள்ளிரவு நெருங்குமுன் முச்சந்தி மண் களவெடுத்து வந்து திட்டி சுற்றிப் போட்டதால் கலக்கமும் அறுந்தது.

"சிறுகதையில் உரைநடை, கவிதைக்குரிய காம்பீரியத்துடனும் நுண்ணுணர்வுடனும் தொழிற்படுதல் வேண்டும். அதன் ஒவ்வொரு அமிசமும், தலைப்பு முதல் இறுதிக்குறியீடு வரை, ஒவ்வொன்றும் எழுத்தாளரின் படைப்புத் திறனின் ஆழ்க்குவிலிருந்து வெளிக்கிழம்ப வேண்டும். அப்பொழுதுதான் அது உண்மையான கலைப்படைப்பாக மிளிரும்" என்கிறார் பேராசிரியர் கா.சிவத்தம்பி. இக்கருத்துக்கள் "விரக்தி" சிறுகதையில் பொலிந்து, அது உண்மையான கலைப்படைப்பாக மிளிர்ந்துள்ளது.

"58, 77, 83! நாளை?" என்ற புனைவின் தலைப்பே ஈழத்து இனக்கலவர அட்டகாசத்தின், அடாவடித்தனத்தின் அதிர்வுகளை நினைவூட்டுகின்றது. "ஐம்பத்தெட்டு அவ்வளவாக நினைவில் இல்லை. பெருமூச்சுடன் எழுபத்தேழையும் மறக்கலாம். ஆனால் எண்பத்து மூன்றை?..." படிக்கின்ற காலத்தில் நாமும் பார்த்து அதிர்ந்த 83இன் "படுபயங்கரங்களை" எப்படி மறத்தல் இயலும்? "மூவ மரபங்!... கபங்! "பெல்ல!... பற : தெமலா!..." "வெட்டிக் கூத்தாடும் பந்தங்களும் ஜுவாலை கனலும் வாள்களுமாக அந்தக் கூட்ட வேலி அவரை மறைத்தது..." இப்படி கலவர காட்சிகள் புனைவுக்குள் குறும்படங்களாகியுள்ளன. "ஒன்றாய் விளையாடத் தெரியாத மூன்றே மூன்று வகுப்புகளால் எப்படி மனித நேயப் பரீட்சை எழுத முடியும்?" 1996இல் தன்னுடைய புனைவில் அல் அஸூமத் எழுப்பிய கேள்வியை 2023லிலும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்! இந்த புனைவு கழன்று ஒழுகும் அருவியாய் அடங்காமல் பீறிட்டெழும் உணர்வுகளாய் வெடித்து வெடித்துச் சிதறும் அவலங்களை நுண்மையாக வெளிப்படுத்துகின்றது.

குழந்தையால் குடும்பத்துக்குள் ஒளிசிந்துகின்ற குதூகலத்தை படமாக்கியுள்ளது "சொர்க்க மலர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகத்து பிரவேசம்" என்ற பிரதி. குடும்ப உறவின் உன்னதங்கள், குழந்தை உலக நிலவரங்கள், மாற்றங் கள், சிக்கல்கள் பற்றிய விவரணங்கள் காட்சி வடிவா கின்றன. "பேரனின் சிறுநீர் சுளீரென்று என் முகத்தில் தைத்ததால் திடுக்கிட்டுப் போனேன். மகளும் மருமகளும் சின்ன மகனும் மாமியும் ஆரவாரமாகச் சிரிக்கத் தொடங்கினார்கள் - ஸனத்தின் ஸிக்ஸரை டீவியில் கண்ட மாதிரி. ஆனால் மனைவி மாத்திரம் கத்தினாள். நான் ஏதோ குடும்பத்தையே கெடுத்து விட்டமாதிரி! "என்னப்பா நீங்க! ஆட்டினதால பிள்ள மூத்திரத்தை அடக்கிட்டான் பாருங்க!" கதையின் சுழற்சி இவ்வாறு தொடங்கி பின்வருமாறு முடிகின்றது: "அன்பை வார்த்தைகளில் குழைத்து மனைவி நீட்டிய தோடம்பழச் சுளையைத் தள்ளிவிட்டுத் திமிறி அழுதபடியே துடித்தான் குழந்தை. மகள் மறுபடியும் வந்து, "பசியோ தெரியல்ல! வாங்கடா தங்கம், உங்கா குடிக்கறீங் களாடா?" என்று கைகளை நீட்டினாள். குழந்தை திடீரென்று அழுகையை நிறுத்தினான். அவனது சிறுநீர் என் நெஞ்சு வழியே சரசரவென இறங்கி என்னை முற்ற நனைத்தது. இப்போது நான் அசையவுமில்லை "இவளிடம் வசவு வாங்கவுமில்லை!" பேச்சொலியை அச்சொட்டாய் எழுத்தில் அல் அஸூமத் வடித்திருக்கிறார். பிரதிக்குள் நிறைய சம்பவங்கள் துலங்குகின்றன. அவற்றைப் படிக்கையில் புதுப்புது படைப்புலகை தரிசிக்கமுடிகிறது.

"ஆலங்குடி வங்கனாரும் மல்லிகை சி.குமாரும்;" வித்தியாசமான தலைப்பு. 2020இல் குமுதம் நடத்திய போட்டிக்காக எழுதப்பட்ட புனைவு. போட்டி விதிகளுக்கமைய சில விடயங்கள் புனைவுக்குள் உள்ளடங்கியிருந்தாலும் அது படைப்பிற்கு எவ்வகை யிலும் ஊறுவிளைவிக்கவில்லை. சங்கப் புலவன் ஆலங்குடி வங்கனரும் மல்லிகை சி குமாரும் விண்ணு லங்கில் சந்தித்து உரையாடுவதுதான் பிரதி. அவர்களின் உரையாடல்கள் மூலம் பல விதமான இலக்கிய விகாரங்கள் விவாதிக்கப்படுகின்றன. சங்க தொன்மை தொடக்கம் தற்காலம் வரை பல இலக்கிய மூலங்கள் அலசப்படுகின்றன. உரையாடலின் உச்சம் பிரதியின் முடிவில் வெளிப்பட்டுள்ளது. "இலக்கியத்துக்குள் இத்தனைப் பூடகங்கள் என்று மலைத்துப்போய் இருந்து விட்டார் குமார். நீண்ட நேரத்துக்குப்பின்னர், பூவுலகத்தி லிருந்து முன்னரே சுவனம் வந்திருந்த எழுத்தாளர்கள் சிலரின் பெயர்களைக் கூறி அவர்களைச் சந்திக்க விரும்புவதாகச் சொன்னார். மாயப் புன்னகையுடன் ஆலங்குடி வங்கனார் சொன்னார்: "அவர்கள் நரகத்தில் இருக்கிறார்கள்! புனிதமான எழுத்தை வீண்விரயம் செய்தவர்கள். மக்களை வழிபுரளச் செய்த எழுத்துக் களை எழுதியவர்கள்!"


சாதி பெரும்போகம் பாப்பா!, அல் அஸூமத்திட மிருந்து... ஒரு கடதாசி, யாதும் ஊரே யாவரும் கொரோனர், நம்ம ஆளு நாட்டை ஆண்டாலும், ஆயன்னையம்மாதாய், எச்சில் மனம், அலை அழிச்சாட்டியம், குப்பை மலை, துறக்கம், இடைக்கம், இறக்கம், மிலேச்சியம், தாயிற் சிறந்ததொரு பிரசவ மில்லை, ஒரு ரொட்டியும் இரு வாய்களும், இரத்த நாட்டின் நாலாம் தகப்பன் எனத் தொடரும் பிரதிகளின் தலைப்பைப் போலவே உள்ளடக்கமும் வித்தியாசமாக அமைந்து, தனிப்பட்ட சிறப்பான கூறுகளைக் கொண்டுள்ளன என்பதும் அவை முற்றிலும் புதுமை யான. உத்திகளில் சித்தரிப்புக்குள்ளாகி யுள்ளன என்பதும் வெளிப்படை. அதனால்தான் தெளிவத்தை ஜோசப் பின்வருமாறு குறித்துள்ளார்: "அஸூத்தின் கதை மகுடங்களும் கதைகளைப் போலவே வித்தியாச மானவை. கதைக்கான நடை, பாத்திரங்களின் வார்ப்பு, மொழியின் ஆளுகை போன்ற இன்ன பிற அம்சங்களில் அஸூமத் தனித்துவ மானதும் தனக்கே உரித்தானது மான ஒரு பண்பைக் கொண்டிருக்கிறார்." தொடர்ச்சி யாக சிறுகதைகளில் ஆரம்பம், உச்சம், முடிவு என்ற கதைத்தன்மை பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இந்த "பலவீனமான" கதைமுறைமையை அல் அஸூமதின் சிறுகதைகளில் காணமுடிவதில்லை. அவை மாற்று பிரதிகளாக பரிணமித்துள்ளன. நேர்கோட்டு கதை சொல்லல் முறை இல்லாமல் ஒரு "திருகு" அமைப்பும் நவீனத்துமும் கலந்து துலங்குகின்றன. அதனால் அவரது புனைவுகளில் கதையைத் தேடுபவர்களுக்கு கதை தென்படுவதில்லை. அல் அஸூமத் சிறுகதை களில் கதையை காணாதவர்கள் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். "மழலைச் சவால்" என்ற சிறு கதையை வாசித்த ஒரு விமர்சகர் இதற்குள் கதையைத் தேடி சோர்ந்ததில், "இது சிறுகதையே இல்லை" என்றார். "கதையே இல்லாத "விரக்தி" என்ற சிறுகதை எப்படி முதற்பரிசு வென்றது" என்ற கூப்பாடையும் கேட்டிருக்கிறோம். புனைவில் நவீன வெளிப்படுத்தல் களை உள்வாங்க திராணி இல்லாதவர்கள் இப்படி புலம்புவது வழமைதானே! இ.முருகையனின் "கடுங் கோபத்துடன் ஒரு கட்டுரை"ஐ நினைத்துப் பார்த்தேன்.

அல் அஸூமத்தின் எந்த சிறுகதையும் மற்ற பிரதிகளின் உந்தல்களாவோ, தொடர்ச்சியாகவோ, நகலாகவோ அமையாமல், ஒவ்வொன்றும் புதிய வடிவ மாகவே புனைவிக்கப்பட்டுள்ளது. இது வாசகனின் வாசிப்பிற்கு ஒரு தடையற்ற ஈர்ப்பினை ஏற்படுத்து கின்றது. புதுவித வர்ணஜாலத்தில் வாசகனின் ஊகத் திற்கு எதிரான கதைக்களம் அவரது புனைவுகளில் உருவாக்கப்பட்டுள்ளது. சிறுகதைப்புலம் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவிக்கொண்டே இருக்கின்றது. தன்னைத் தானே தகவமைத்துக் கொண்டு தொடர்ந்து பல பரிசோதனை முயற்சிகளை கையாண்டு புதுப்புது களன்களை உருவாக்கியுள்ள தனித்தன்மையையும் தரிசிக்கமுடிகின்றது. ஒருவித நுட்பமான அழகியலைத் தனக்குள் தானே இப்பிரதிகள் பிரக்ஞைப்பூர்வமாய் கட்டமைத்துக் கொள்கின்றன. பேராசிரியர் கா.சிவத் தம்பின் வார்த்தைகளில் சொன்னால், அல் அஸூமத் தின் சிறுகதைகளை அதிகபலம் உள்ளடக்கி வைக்கப் பட்ட சிறு "கிறனெட்"டுக்கு ஒப்பிடலாம். அது "வெடிக்கும்" பொழுது ஆயிரம் சூரியரைக் கண்டது போன்ற ஒரு சத்திய தரிசனம், ஆன்மத் திகைப்பு/ குழைவு/ மீள் கண்டு பிடிப்பு ஏற்படுகின்றது. அத்தகைய தனித்துவமான தாக்கத்தினை ஏற்படுத்தும் செறிவினை அவை கொண்டுள்ளன. இத்தகைய "தாக்கமுழுமை" கொண்டமைந்துள்ள அல் அஸூமத்தின் சிறுகதை களைப் பற்றிப் பேச அடர்த்தியான விஷயங்கள் நிறை யவே இருக்கின்றன. அவை முறையாகவும் முழுமை யாகவும் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் அஸூமத் – எழுதிய இஸ்லாமிய நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் – எனது பார்வை



அஷ்ரஃப் சிஹாப்தீன்

அல் - அஸூமத் அவர்களை முதன் முதலாக நான் சந்தித்தது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் என்பது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. முஸ்லிம் சேவைக்கான ஒரு கவியரங்க ஒலிப் பதிவு நிகழ்வு அது. அவரது தலைமையில்தான் அந்தக் கவியரங்கம் நடைபெற்று ஒலிபரப்பானது. கலந்து கொண்டவர்களில் நானும் ஒருவன். ஏனையவர்கள் இப்போது ஞாபகம் இல்லை. எனது கவிதையை நான் வாசித்து முடித்ததும் "உங்களுக்கு மரபுக் கவிதை நன்றாக வருகிறது", என்று பாராட்டினார். அவருக்கு அன்று என்னைப் பிடித்துப் போயிருக்க வேண்டும்.

அல் அஸூமத் கொழும்பு - நீர்கொழும்புப் பிரதான பாதையொட்டி அமைந்திருக்கும் மஹபாகே என்ற இடத்தில் குடியிருந்தார். திருமணத்தின் பின் நான் வத்தளை - மாபோளைக்கு வந்து சேர்ந்தேன். எனது வீட்டுக்கும் அவரது வீட்டுக்குமிடையிலான தூரம் மூன்று கிலோ மீற்றர் எனலாம். இதனால் ஓய்வாக இருக்கும் போதெல்லாம் நான் அவர் வீட்டுக்குச் சென்று அவருடன் உரையாடிக் கொண்டிருப்பேன்.

அவரது மூத்த புதல்வரும் கவிஞரும் மொழி பெயர்ப்பாளருமான இப்னு அஸூமத் (பாரூக்) எனது வயதொத்தவர். வகவத்தில் அறிமுகமாகி எனது குறிப்பிடத்தக்க நண்பர்களில் ஒருவரானவர். இதற்கப்பால் அஸூமத் அவர்களின் மூத்த புதல்வியைத் திருமணம் செய்தவர் கவிஞர் கிண்ணியா அமீர் அலி அவர்கள். அமீர் அலி எனது தாய் வழிப் பாட்டனின் குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்த வகையில் அல் - அஸூமத் அவர்கள் குடும்ப வழியிலும் ஒன்றித்தவர். இந்தக் காரணங்கள் பற்றியும் எமது உறவு நன்றாக நீடித்திருந்தது. இன்று வரை நீடித்து வருகிறது.

இஸ்லாமிய இலக்கிய மாநாடுகள் நடத்துவது, வெளி நாடுகளில் கலந்து கொள்வது என்று அல் - அஸூமத், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், தாஸிம் அகமது, நான் ஆகியோர் ஒன்றாக இயங்கி வந்துள்ளோம். கடந்த 2016 ஆம் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் மலர், அரங்கக் கட்டுரைத் தொகுதி இரண்டையும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் செம்மைப் படுத்தித் தந்தவர். ஒவ்வொரு புத்தகமும் 600 பக்கங்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இவற்றுக்கெல்லாம் அப்பால் அல் அஸூமத் நல்ல நகைச் சுவை சொல்லக் கூடியவர். எழுதவும் கூடியவர். நாங்கள் குழுவாகச் சேர்ந்திருக்கும் போது தான் அவரது நகைச்சுவைகள் வெளி வரும். அவற்றில் பெரும்பாலானவை இலக்கியமும் இலக்கியவாதிகளும் சார்ந்தவையாக இருக்கும்.

யாத்ரா (21 அல்லது 22 இல்) அவர் எழுதிய ஒரு சிறுகதை உண்டு. இலங்கையின் அனைத்து இலத்திரனியல் ஊடகங்களையும் கிண்டலடித்திருப்பார். இக்கதையை அவர் எனக்குத் தந்த போது அவர் தலைப் பிட்டிருக்கவில்லை. அக்கதைக்கு "அலையழிச் சாட்டியம்" என்ற தலைப்பை நான் இட்டேன். வாய்ப்புக் கிடைக்குமானால் அதனைத் தேடி வாசித்துப் பாருங்கள். சிரிப்பு நிச்சயம்!

*2*

"ஜீவநதி" அல் அஸூமத் அவர்கள் பற்றிய மலரொன்றை வெளியிடுவதற்காக அவரது இஸ்லாமிய இலக்கிய, இஸ்லாம் மார்க்கம் சார் எழுத்துகள் பற்றிய ஓர் முழு ஆக்கத்தைக் கோரி என்னிடம் வேண்டுகோள் வைத்தது. எனவே இந்த ஆக்கத்தில் அவை பற்றி மட்டும் பேச வேண்டியதே எனக்குரிய வேலை என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2000 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு அவர் நபி மொழிகளை குறட்பாக்களாக எழுதிக் கொண்டிருந்தது எனக்கு ஞாபகம் உண்டு. ஆனால் பின்னாளில் அதை மொத்தமாக இழந்து விட்டிருந்தார். அத்தோடு அது பற்றிய ஆழ்ந்த கவலை அவருக்கு மட்டுமல்ல, எனக்கும் இருந்தது. இதற்கப்பால் நபிக் குறள்கள் எழுதினார். அதன் தட்டச்சுப் பிரதியை நான் பார்த்திருக்கிறேன். அது இன்னும் வெளிவரவில்லை. அதில் 1800 குறட் பாக்கள் அடங்கியிருக்கின்றன என்று அவர் எனக்குச் சொன்னது ஞாபகத்தில் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் அஸூமத் அவர்களின் முதல் மொழி பெயர்ப்பு நூல்களில் "பிலால்" என்ற நூலைத்தான் முதலில் நான் வாசித்தேன். அது ஒரு பரவசம். அந்தப் பரவசத்துக்குக் காரணங்களில் ஒன்று அந்நூலின் எழுத்து நடை. இரண்டு அந்த நூல் யாரை வைத்து எழுதப் பட்டதோ அந்த நபர். வாசிக்கும் போது பல இடங்களில் என்னை அழவும் மெய் சிலிர்க்கவும் வைத்த நூல் அது.

பிலால் இப்னு ரவாஹா (ரலி) அவர்கள் அபிசீனிய பரம்பரையில் வந்த ஓர் அடிமை. நபிகளார் வழி காட்டிய இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்துக்காக உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் சொல்லொணாத் துன்பங்களுக்கும் ஆக்கினைகளுக்கும் ஆளானவர். கருப்புத் தோல் கொண்ட இந்த பிலால்தான் தொழுகைக்காக முதன் முதலில் இறையில்லமான கஃபா மீதேறி "அதான்" சொல்ல (தொழுகைக்கு அழைப்பு விடுக்க) நபிகளாரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டவர். நபிகளார் அவருக்கு வழங்கிய இந்த உயரிய மரியாதை, நபிகளாருடனேயே நிழல் போல் வாழ்ந்தது ஆகிய காரணங்களால் இன்று வரை உலகளாவிய முஸ்லிம்கள் அனைவராலும் கண்ணியத்துக்கும் மரியாதைக்கும் உரியவராகக் கருதப்படுகிறார்.

இத்தகைய கண்ணியத்துக்குரிய பிலால் அவர்களைப் பற்றி அயர்லாந்து தேசத்தவரான எச்.ஏ.எல். க்ரேய்க் என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப் பட்டது இந்நூல். இதன் முதல் பதிப்பு ஆங்கிலத்தில் 1977 இல் வெளிவந்திருக்கிறது. கவிஞர், நாடகத் துறை யாளர், சினிமா வசன கர்த்தா என்று பல்வேறு திறமை களைக் கொண்ட க்ரெய்க், நபித் தோழரான பிலால் இப்னு ரவாஹா பற்றி இந்த நூலை எழுதியிருப்பதே ஓர் ஆச்சர்யம்தான். அதை அதே கவித்துவ நடையில் அல் அஸூமத் அவர்கள் கொண்டு வந்திருப்பதும் மற்றோர் ஆச்சர்யம். இந்த நூல் பிரபல ஆங்கில இஸ்லாமிய நூல்கள் வெளிவரக் காரணமாக இருந்த தர்ஹா நகரைச் சேர்ந்த அப்த் அல் ஜப்பார் முகம்மது ஸனீர் அவர்களது முயற்சியின் பலனாகத் தமிழுக்குக் கொண்டு வரப்பட்டது. தமிழில் இதன் இரண்டாவது பதிப்பு 1995ல் வெளியிடப்பட்டிருக்கிறது. முதற் பதிப்பு 1988 இல் வெளிவந்திருக்கலாம் என நினைக்கிறேன். இன்றளவில் இந்த நூல் ஐந்து பதிப்புகளைக் கண்டிருப்ப தாக அறிய வருகிறேன்.

இந்த நூலை ஓர் இஸ்லாமிய இலக்கிய நூலாக நான் கருதிய காரணத்தால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான முஸ்லிம் சேவையில் நான் நடத்தி வந்த "இலக்கிய மஞ்சரி" நிகழ்ச்சியில் போர்கள் பற்றிய ஓரிரு அத்தியாயங்கள் தவிர, ஏனையவற்றை வாசித்து ஒலிபரப்பி வந்தேன். (ஒலிபரப்பான காலத்தில் போர்கள் பற்றிப் பேசுவது தவிர்க்கப்பட்டிருந்தது.) இந்த அத்தியா யங்களை வாசிக்கக் கேட்ட பலர் இந்த நூலை எங்கே வாங்குவது என்று கேட்டு என்னிடம் விபரங் கோரியிருந் தார்கள். அதில் ஒருவர் தன்னை முச்சக்கர வண்டி ஓட்டுனர் என அறிமுகப்படுத்திக் கொண்டு, தனது மனைவி இந்த நூலைப் பெற்றுத் தரக் கோரியதாக என்னிடம் சொல்லி வினவியது கொண்டு இந்த நூலின் அடைவு எழுத்தழகு மேலும் என்னைப் பிரமிக்கச் செய்தது.

இந்த நூலை க்ரெய்க் அவர்களின் மொழிக்கு அப்பால் அதாவது தனித் தமிழ்க் காப்பியமாக உருவாக்கவே முதலில் அல் அஸூமத் அவர்கள் ஆரம்பித்ததாகவும் மொழி பெயர்க்கப் பொறுப்பளித்தவர் க்ரெய்க் அவர்களின் மொழிப் போக்கிலேயே அதை விரும்பியதனால் தமிழ்க் கவிதைப்படுத்தும் முயற்சியை நிறுத்த வேண்டி வந்ததாகவும் அல் அஸூமத் என்னிடம் சொல்லியிருக்கிறார்.

ஆயினும் பின்னர் "பிலால்" தமிழ்க் காவிய நூலை எழுதி முடித்த அல் அஸூமத் அதனை 2020 ஆம் ஆண்டு 240 பக்க நூலாக வெளியிட்டார். க்ரெய்க் அவர்களின் நடைப்போக்குக்குக் குறையாமல் இந்தத் தமிழ்க் காப்பியம் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் மொழியின் தனி அழகோடு இந்த நூலை வாசித்து இரசிக்க முடியும்.

க்ரெய்க் அவர்களின் நூலின் மொழிபெயர்ப்பில் பிலால் அவர்கள் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் விதமான முதற் பந்தி இப்படி அமைந்திருக்கும்:-

**"நான் ஓர் அடிமை. என் பெயர் பிலால். என் தாய், தந்தையரும் அடிமைகள். பிறப்பிலேயே அடிமையான நான் எனது எஜமான் உமையா என்னைக் கொன்று விட முடிவெடுத்த நாள் வரையும் அடிமையாகவே இருந்தேன்."**

பின்னால் வந்த பிலால் காவியத்தில் இந்த வரிகள் இப்படி இருக்கும்:-

**அடிமையர் குழந்தை ஆய பிலால் யான்**
**அடிமைத் துவத்துள் அவதரித் தென்றன்**
**உடையான் வணிகள் உமையா எனைக்கொல**
**முடிவுகொள் நாள்வரை தொடர்ந்ததில் இருந்தேன்**

3

மொழிபெயர்ப்புக்கு அப்பால் அல் அஸூமத் எழுதிய இஸ்லாமிய நூல்களில் உச்சமானதாக இருப்பது முஹம்மது நபியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியது தான். இந்த நூல் தமிழ் கூறும் முஸ்லிம் உலகில் அல் அஸூமத்தை நோக்கிக் கண்களை அகல விரிக்கும் வகையில் அமைந்திருந்தது.

தமிழகத்தைச் சேர்ந்தவரும் சிங்கப்பூரில் வசித்து வருபவருமான அன்புச் சகோதரர் எம்.ஏ. முஸ்தபா அவர்கள் ரஹ்மத் அறக்கட்டளை என்ற ஒன்றை நிறுவிப் பல்வேறு இஸ்லாமிய நூல்களை வெளி யிட்டு வருகிறார். அவர் நல்ல வாசிப்பாளர் மட்டுமன்றி இலக்கிய இரசிகரும் கூட. சிங்கப்பூரிலும் "சிரங்கூன் டைம்ஸ்" என்ற ஒரு சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார்.

இந்த அறக்கட்டளையானது முகம்மது நபியவர் களின் வாழ்க்கைச் சரிதத்தை முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் இலகுவில் படித்தறியும் வகையில் எழுதப்பட வேண்டும் என ஒரு சர்வதேசப் போட்டியை நடத்தியது. முதலாவதாகத் தெரிவு செய்யப்படும் பிரதிக்கு இந்திய நாணயத்தில் ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அதை ரஹ்மத் அறக்கட்டளையே வெளியிடும் என்றும் அவ்வறிவித்தலில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

பொருத்தமாக அந்த நூலை எழுதி வெற்றி பெற்றவர் அல் அஸூமத் அவர்கள்.

"நூலாசிரியர் பிறப்பால் ஓர் இந்து. பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர். தமிழாசிரி யர், தந்தை ஒரு மலையாளி. முஸ்லிம் நண்பர்களுடன் பழகியபோது, இஸ்லாமிய பழக்கவழக்கங்கள் சிலவற்றைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்திருக்கிறார். இஸ்லாத்தை முறையாகக் கற்கும் வாய்ப்பு மிகத் தாமதமாகவே கிடைத்திருக்கிறது.

நபிகளாரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்த போது உண்மையிலேயே பல இடங்களில் அழுதிருக்கிறார். திறந்த மனதோடு ஒன்றை வாசிக்கும்போது அதிலுள்ள யதார்த்தம் உலுக்கவே செய்யும். பின்னர் குர்ஆனைப் படித்தார். இஸ்லாத்தில் இணைந்தார்" என்று நூலை மேலாய்வு செய்தவர்கள் தமது உரையில் அல் அஸூமத் அவர்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சற்றேறக்குறைய 750 பக்கங்களிலான இந்த நூல் 2018ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. தமிழகத்தில் கிடைப்பது போல் இலங்கையில் இந்நூலைப் பெற முடியவில்லை. இந்த நூலுக்கான பரிசளிப்பு ஒரு விழாவாக நடத்தப்படும் என்று சொல்லப் பட்ட போதும் அது நடைபெறவில்லை. சில வேளை தமிழக எழுத்தாளர் எழுதிப் பரிசு பெற்றிருந்தால் அப்படி ஒரு விழா நடந்திருக்கலாமோ என்று நான் சிலவேளை எண்ணுவதுண்டு.

4

"இறைதூதர் முகம்மது (ஸல்) அவர்களது காலத்தில் பெண் விடுதலை" என்ற தலைப்பிலான பிரமாண்ட அளவு கொண்டு ஒரு மொழிபெயர்ப்பு நூல் 2015 ஆம் ஆண்டு வெளியானது. பிரபல இஸ்லாமிய அறிஞரும் எழுத்தாளருமான அப்துல் ஹலீம் அபூ ஷக்கா அவர்கள் அறபியில் எழுதிய ஆறு பாகங்களைக் கொண்ட நூலின் அறபியில் அமைந்த சுருக்க வடிவமான இரண்டு பாகங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு இது. ஏ4 அளவிலான வடிவத்தில் ஏறக்குறைய 800 பக்கங்களில் அமைந்த இந்நூல் தமிழில் வெளிவரக் காரணமாக இருந்தவர் முஸ்லிம் புத்தி ஜீவிகள் மட்டத்தில் அறியப்பட்ட நல்லவாசகரும் மொழிபயர்ப்புக்கான சிறந்த நூல்களை அடையாளம் காணக் கூடியவரும் மொழிபெயர்ப்பாளருமான தர்ஹா நகரைச் சேர்ந்த அப்த் அல் ஜப்பார் முகம்மத் ஸனீர் அவர்கள்.

நான் மேலே குறிப்பிட்ட அறபில் சுருக்கப்பட்ட இரண்டு பாகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்தார் பிரபல மொழிபெயர்ப்பாளர் நான்ஸி ரொபர்ட் அவர்கள். தமிழில் ஒரே நூலாக இது அமைந்த போதும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த நூலின் இரண்டாம் பகுதியை (ஏறக்குறைய நூலின் பாதி) மொழிபெயர்த்தவர் அல் அஸூமத் அவர்கள். முதற்பகுதியை அறபு வல்லுனரும் இஸ்லாமிய அறிஞருமான கலாநிதி பி.எம்.எம். இர்பான் அவர்கள் அறபி மூலத்திலிருந்தே மொழிபெயர்த்திருந்தார்.

இந்த நூல் நபிகளார் காலத்து இஸ்லாம் மார்க்கம் சார்ந்த பெண்கள் பற்றிய புனைகதைகளைக் கொண்டவை அல்ல. நபிகளார் வந்த பின்னர் பெண்கள் வாழ்ந்த துயர வாழ்விலிருந்து பெற்ற விடுதலையை அவர்களது சமூகப் பங்களிப்பை ஆதாரங்களோடு முன்வைக்கிறது. நபிகளாரின் சொல், செயல், நடைமுறை அனைத்தும் பற்றிய தகவல்கள் பற்றி அறிவித்தவர்கள் யார், அதைக் கேட்டவர், கண்டவர் யார் என்பதற்கெல்லாம் ஒரு தொடர் இருந்தால் மாத்திரமே அது சரியான அறிவிப்பாக ஏற்றுக் கொள்ளப்படும். அறிவிக்கும் முதல் நபர் முதல், கேட்டவர், கண்டவர் அனைவரும் நம்பிக்கைக்குரியவர்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறான தகவல்கள், சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்லாமோபோபியாவை முன் கொண்டு செல்பவர்கள் முதலில் இஸ்லாம் ஒரு பயங்கரவாத மதம் என்பதையும் அங்குப் பெண்கள் அடக்கியொடுக்கப்படுகிறார்கள் என்பதையுமே முற்படுத்தி வருவதை நாம் காண்கிறோம். எழுதப்பட்டவற்றையே திருப்பித் திருப்பி வேறு வார்த்தைகளில் எழுதிக் கொண்டிருக்கிறோம் என்று ஒரு கருத்து உண்டு. அதே போல பதிலளிக்கப் பட்ட கேள்விகளையே இஸ்லாமோபோபியா மீண்டும் மீண்டும் தமது செல்வாக்கு, அதிகாரம், வருமானம் ஆகியவற்றை வைத்துத் தமது ஊடகங்கள் மூலம் கேள்விகளை எழுப்பிக் கொண்டேயிருக்கிறது. இந்த நூலைத் திறந்த மனதுடன் படித்தால் அக்கேள்விகளுக்கான விடைகளை மீண்டும் கண்டடைய முடியும்.

இந்த நூலுக்கான அல் அஸூமத் அவர்களின் பங்களிப்புப் பற்றி இந்த நூலின் வெளியீட்டாளர் இப்படிச் சொல்கிறார்:-

"மொழிச் செம்மை குறித்து மிகவும் அவதானமாக இருப்பவர் கவிஞர். அவரது வார்த்தைகளிலேயே கூறுவதானால் "கண்ணில் விளக்கெண்ணெய் இட்டு"க் கண்காணிப்பவர்.அவரது மொழிபெயர்ப்பில் அழகழகான, பொருத்தத்தில் மிகுந்த சொற்பிரயோகங்களைக் கண்டு களிக்கலாம்."

5

எம்.ஏ.முஸ்தபா அவர்கள் நிறுவிய ரஹ்மத் அறக்கட்டளைக்காக அல் அஸூமத் அவர்கள் செய்த குறிப்பிடத்தக்க மற்றொரு பணி "இஸ்லாமிய வரலாறு" என்ற மூன்று பாகங்கள் கொண்ட பெருநூலை மொழி பெயர்ப்புச் செய்ததாகும். மூன்று பாகங்களாக 2017 இல் வெளிவந்த இந்த நூல்கள் முறையே 629, 815, 573 பக்கங்கள் கொண்டவை.

உண்மையில் இந்த வராற்றுத் தொடரை தமிழ்ப் பேசும் உலகம், தமிழ்ப் பேசும் முஸ்லிம் உலகம் அறிந்து கொள்வதெனில் ஒன்றில் அராபிய நூல்களை அல்லது ஆங்கில நூல்களையே படிக்கும் நிலை மிக அண்மைக் காலம் வரை இருந்து வந்தது. இந்த மூன்று பாகங்களின் மூலம் அந்தப் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கிறது.

எல்லா மனிதர்களாலும் வரலாற்றைப் படிக்க முடியாது போனாலும் கற்றவர்கள், புத்தி ஜீவிகள் கற்பதன் மூலம் சக இன, மதக் குழுமங்களின் பின்னணியைத் தெரிந்து பேச முடியும். தற்காலத்தில் உள்ள படிப்பாளிகளில் பலர் இவற்றையெல்லாம் படிக்காமலேயே அரை குறை அறிவுடன் வீண் விவாதங்களில் ஈடுபடுகிறார்கள். சச்சரவுக்குப் பின்னால் இருக்கிறார்கள். தமது முழங்கை அளவு கொண்டு வரலாறுகளைத் திரித்து விடுகிறார்கள். அவை வெறுப்புணர்வை வளர்க்கின்றன. மனிதர்களைக் கூறு போடுகின்றன.

6

அல் அஸூமத் அவர்களின் மொழிபெயர்ப்பிலான இன்னும் அச்சில் வெளிவராத இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமான நூல்கள் அவர் கைவசம் இருக்கின்றன. இரண்டுமே அச்சுக்குத் தயாரான தயாரிப்பில் சகலதும் பூர்த்தியான நிலையில் உள்ளன. அவற்றில் ஒன்று, கலாநிதி ஆய்த் அப்துல்லாஹ் அல் கர்னி அறபியில் எழுதிய "லா தஹ்ஸன்" - "கவலைப்படாதீர்கள்" என்ற நூல். இந்த நூல் 625 பக்கங்களைக் கொண்டது.

இந்த நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பான "டோன்ற் பீ ஸாட்" - இனை தர்ஹா நகரைச் சேர்ந்து அப்த் அல் ஜப்பார் முகம்மது ஸனீர் அவர்களே அல் அஸூமத் அவர்களுக்கு வாசிக்கக் கொடுத்திருக்கிறார். இதன் ஆத்மீகப் பெறுமதி கருதி அதனை அல் அஸூமத் அவர்கள் மொழிபெயர்த்திருக்கிறார்.

மானிடரின் கவலை, ஆற்றாமை, நம்பிக்கையீனம், பலவீனங்கள் அனைத்தையும் இந்த நூல் துடைத்து எறிந்து விடுகிறது. மனதை ஆற்றுப்படுத்துகிறது. அதற்கெனக் கொடுக்கப்படும் விளக்கங்கள் மிகத் தெளிவானவை, இலகுவானவை. சிறிய சிறிய அத்தியாயங்களாக அமைந்திருக்கும் இந்த நூலை வாசிப்பவர்கள் பொறுமை மிக்கவர்களாகவும் எதையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் உள்ளவர்களாகவும் மாறி விடுவார்கள் என்பதை என்னால் அழுத்திச் சொல்ல முடியும். இதே முறையில் எழுதப்பட்ட டேல் கார்னகியின் ஒரு நூல் உலகப் பிரசித்தி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

"கவலைப்படாதீர்கள்" என்ற இந்த நூலின் ஆக்கத் திறன், முஸ்லிம்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டதல்ல. திறந்த மனதோடு இந்நூலை வாசிக்கும் முஸ்லிம் அல்லாதோரும் ஆசிரியரின் ஆலோசனைகளையும் சிந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள முடியும். இந்த ஆலோசனைகள் அருளப்பட்ட ஒழுக்காறுகளின் உறுதி மீதும் உண்மையை ஊடுருவிச் செல்லும் கற்றறியப்பட்ட சிந்தனைகளின் மீதும் கட்டமைக்கப் பட்டவையாகும்" என்கிறார் இந்த நூலின் ஆங்கிலப் பதிப்பாசிரியரான முகம்மத் இப்ன் அப்துல் முஹ்ஸின் அல் துவைஜ்ரி அவர்கள்.

ஆனால் அந்த ஆனந்தத்தை அடைய இந்த நூல் வெளிவர வேண்டாமா? எழுத்தாளர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் ஒரு சாதாரண அளவிலான நூலை வெளிக்கொணரப் படும்பாடு அறியதவரா நாம்? யாராவது ஒரு செல்வந்தரின் கண்களில் பட்டு, அவரது ஆத்மா இதை வெளிக் கொணரத் துடிக்குமாயின் அதைவிட மகிழ்ச்சியான செய்தியொன்று இருக்காது. அந்தப் பாக்கியத்தைப் பெறும் மனிதர் யாராக இருப்பார் என்று இறைவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியும்?

மற்றைய நூல் "பாலைவனப் போராட்டம்." டென்மார்க் ஊடகவியலாளரான நுத் ஹோம்போவின் பயண அனுபவ நூல் இது. டென்மார்க்கிலுள்ள ஹோர்ஸன்ஸ் நகரில் 1902 ஆம் ஆண்டு பிறந்த ஹோம்போ 1930 இல் போல்கனை ஊடறுத்துப் பயணத்தை ஆரம்பித்தார். அந்தப் பயண நூலே "பாலைவனப் போராட்டம்."

ஹோம்போ தனது இருபதுகளில் இஸ்லாத்தை வாழ்க்கை வழியாக ஏற்றுக் கொண்டார். பலவீனமானவர்களதும் ஒடுக்கப்பட்டவர்களினதும் பக்கமாக அவரை எப்போதும் இழுத்துச் சென்ற நேர்மையுணர்வு அவரிடம் மிகுதியாக இருந்ததால் அவர் கொல்லப்பட்டார்" என்கிறது நூலின் அறிமுகக் குறிப்பு.

"பாலை நிலப் போராட்டம்" என்ற இந்த நூல் தனித்துவமான ஒரு துணிகரச் செயல். இந்த நூலைப் படிக்கும் போது எனது கண்களில் பலமுறை கண்ணீர் வடிந்தது. அரேபியப் புரட்சியைப் பற்றிய அவருடைய சொற்களை நீங்கள் வாசிக்கும் போது இந்த டென்மார்க் ஊடகவியலாளரின் தூய இயற்பண்பை இலகுவாக நுகர முடியும்" என்கிறார் ஃபேடல் சுலைமான் - இவரே இந்த நூலை வெளியிட்டவராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

"அவர்கள் கிழிபட்டவர்களாகக் காணப் பட்டார்கள். ஆனால் உறங்கும் இப்போது கூட, அவர்களின் எல்லா முகங்களிலும் முன் பின் அறியப்படாத அமைதியான, தீர்க்கமாக அமைதிப் பார்வை இருந்தது. இமைகளின் ஓர் இமைப்புக் கூட இல்லாமல் இறப்பதற்கு இயலுமாயிருப்பது ஏன் என்று எனக்கு விளங்கத் தொடங்கியது. ஒரு நாள் அவர்களுடன் கழித்த போது நான் கவனித்திருந்ததன்படிஅவர்கள் தமது சமய மனச்சாட்சிக்கு அச்சங்கொண்டு பின்பற்றினார்கள் என்பதைக் கண்டேன். எக் கொடிய விதி அவர்களைத் தாக்கியிருந்தாலும் அந்நடப்புக்காக இறைவனைக் குறை கூற அவர்களுக்குத் தோன்றவே இல்லை."

மேலேயிருக்கும் பந்தி ஹோம்போவின் எழுத்து நடையின் அழகை எடுத்துக் காட்டுகிறது.

புத்தக வடிவில் 10 புள்ளி எழுத்துருவில் 360 பக்கங்களைக் கொண்ட நூல் இது.

7

என்னுடைய கருத்துப்படி வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழில் எழுதும் முஸ்லிம் எழுத்தாளர்களில் முதல் இடத்தை அல் அஸூமத் அவர்களே வகிக்கிறார் என்பேன். தமிழ் இலக்கணம், கவிதை, நாவல், சிறுகதை, சஞ்சிகை, பெறுமதியான மொழிபெயர்ப்புகள் என திரும்பும் பக்கமெல்லாம் அவரே தெரிகிறார். இவ்வளவையும் செய்து விட்டு அல்லது செய்து கொண்டு மிக அமைதியாக இருக்கும் ஒரு நபரும் இவரே.


நூலாக வெளிவராத அவரது எழுத்துகளை நான் இனிமேல்தான் வாசிக்க வேண்டும். இதுவரை படித்தவற்றில் என்னை மிகவும் கவர்ந்தது "பிலால்" தான். அதற்குக் காரணம், க்ரெய்க் அவர்களின் மொழி நடையும் அதை அப்படியே தமிழில் தந்த அல் அஸூமத் அவர்களும் முகம்மது நபியவர்களுடன் நிழல் போல் 22 வருடங்கள் வாழ்ந்தவரும், தொழுகைக்கான முதல் அழைப்பை விடுத்தவரும் உலக முஸ்லிம்களால் நெகிழ்ச்சியுடன் மதிக்கப்படுபவருமான ஸெய்யிதினா பிலால் (ரலி) அவர்களுமாவர்.

எல்லாருக்கும் ஆயிரமாயிரம் சின்னச் சின்ன ஆசைகள் இருக்கின்றன. எனக்கும் உள்ள சின்னச் சின்ன ஆசைகளில் முதன்மைக்குரிய ஒன்று இருக்கிறது. கவிஞர் அல் அஸூமத்துடன் டமஸ்கஸ் சென்று பிலால் (ரலி) அவர்களின் அடக்கஸ்தலத்தில் நின்று, அவருக்கு ஸலாம் உரைத்து, "ஸெய்யிதினா பிலால், இதோ உங்களைத் தொடர்ந்த இன்னொரு பிலாலுடன் உங்களைக் காண வந்திருக்கிறேன்" என்று உரக்கச் சொல்ல வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.ரமேஷ்



# அல் அஸ்ூமத் கவிதைகளில் சமூகம்

இலங்கை நாட்டின் தேசிய நீரோட்டத்தில் கலந்து மக்களோடு மக்களாகத் தம்மை இணைத்துக் கொண்ட மலையக மக்கள் அரசியல் வேலைவாய்ப்புக்கள் மறுக்கப்பட்டு குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்ட நிலையில் அம்மக்களுக்காகக் குரல் கொடுத் தோரில் முக்கியமானவர் அல் அஸ்ூமத்.

உள்ளுணர்வின் தடத்தில் நிகழும் ரசவாத உணர்வை உட்சரடுகள் வழி இணைத்து கச்சிதமான, அடர்த்தியான மொழிவழிக் காட்சிப்படுத்தும் கவிதை, கருத்துச் செறிவுடையதாகவும் வடிவ நேர்த்திமிக்கதாகவும் கற்பனைத் தன்மை கொண்டதாகவும் அமையும். இலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் சீரும் தளையும் சிதையாமல் யாப்பு விதிகளுக்களுக்கமைய எழுதப்படும் கவிதைகள் ஓசைநயம் கொண்டதாகவும் விளங்கும். மரபுவழிக் கவிதைகளுக் கூடாகத் தெளிவான சிந்தனையை உருவாக்கியவர் அல் அஸூமத். வலுவான மொழிக்கூடாக ஆன்மீகச் சிந்தனைகளை ஆழமாக விதைத்தவர். கொடுமை கண்டு பொங்கும் அறச்சீற்றமும் மக்களின் நலிவு கண்டு இரங்கும் மனோநிலையும் இவருடைய கவிதைகளில் இயல்பாகவே இருந்தது. புனைவை விட நிஜத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, தான் .கண்டுணர்ந்த அனுபவக் கணத்தை நல்ல கவிதைகளாகத் தந்தவர்களில் அல் அஸூமத்தும் ஒருவர். காலத்தின் தொடர்ச்சி பற்றிய கூர்ந்த பிரக்ஞை அவரிடத்தில் நிறையவே இருந்தது. அதுவே அவருடைய கவிதைகளிலும் பிரதிபலித்தது. எளிமையான சொல்லாடல் வழி படைப்பாளனின் உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய மக்களால் அணுகுவதற்குரிய ஜீவிதமான கவிதைகளைத் தந்தவர் அல் அஸூமத். பேரழிவுகளையும் இடர்பாடுகளையும் கண்டுணர்ந்த மானுடத்தின் குரலாய் இவரின் கவிதைகள் ஒலித்தன.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்கும் அல் அஸூமத் மானிட நேயமிக்கவர். மனிதாபிமாங் கொண்டவர். "எனது சமூகத்துக்காக எவராவது ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டிருந்தால் அவருக்கே இந்நூல் அர்ப்பணம்" என அவருடைய "அல்.அஸூமத் கவிதைகள் மலைக்குயில்" தொகுப்பில் இடம்பெறும் வரிகள் இதனை உறுதிப்படுத்தி நிற்கிறது. அப்துல் அஸீஸ் என்னும் இயற்பெயர் கொண்ட அல் அஸூமத் மரபுக்கவிதையைப் போல புதுக் கவிதையிலும் ஆழத்தடம் பதித்தவர். "புலராப் பொழுதுகள்", "அல்.அஸூமத் கவிதைகள் மலைக்குயில்", 483 வானொலிக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான "கவிதைச்சரம்", "குரல்வழிக்கவிதைகள்" முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு கவிதை நூல்களுக்குச் சொந்தக்காரர். முஸ்லிம் சமய, கலாசார இராஜாங்க அமைச்சு அல் அஸூமத் அவர்களுக்கு "கவிஞர் தாரகை"ப் பட்டம் வழங்கி கௌரவித்தது. எண்பதுகளில் "பூபாளம்" என்ற கவிதை சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். அதன் பின்னர் "பௌர்ணமி" என்னும் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். வலம்புரி கவிதா வட்டத்தின் பௌர்ணமி கவியரங்குகளில் மேடைக் கவிஞராகவும் இற்றைவரை அறியப்பட்டவர்.

இவருடைய முதல் கவிதை 1965ஆம் ஆண்டு "என்னையே உனக்குத் தந்தேன்" என்ற தலைப்பில் வீரகேசரியில் வெளிவந்தது. தன்னையே காதலிக்கு கொடுத்த காதலனின் குரலாய் இக்கவிதை ஒலிக்கிறது.

"நெற்றியிற் கொடுவாய் வைத்து
நீளுமுன் கூந்தல் தந்தால்
சுற்றிடும் நாகஞ் செய்து
புற்றிலே விட்டுப் பார்ப்பேன்
நெற்றியே தந்தா யானால்
நீரிலே பாயும் ஓடம்
வெற்றியாய் நானே செய்து
விரைவினில் ஓடிப் பார்ப்பேன்..."

அடிதோறும் முச்சீர் விரவிவர அழுத்தமான ஓசையும் அழுத்தமில்லா ஓசையும் இசைந்து வர எழுதப்பட்ட இக்கவிதை எளிமையான மொழிநடையில் அகம் சார்ந்த உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கிறது.

இன, மத, பேதங்களைக் கடந்து சமூக இயக்கவியல் செயல்முறைகளின் ஊடாக சமூக மாற்றத்துக்கான கருத்துக்களைக் கவிதைகளில் முன் வைத்தவர்களுள் முக்கியமானவர் அல் அஸூமத். சமூக முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இவரால் எழுதப் பட்ட கவிதைகள் இன்றும் மக்களின் அவல வாழ்வைப் பேசிநிற்கின்றன. சமூகத்தில் அனைவரும் ஒன்று திரண்டு உரிமைக்காகக் குரல் கொடுப்பதன் வாயிலாக சமத்துவமான நிலையை அடையலாம் என்பதில் நம்பிக்கை கொண்டவர். போராடுவதற்கு முன்னர் மக்கள் தம் நிலையைக் கண்டறிதல் வேண்டும் என்பத னாலே மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய கவிதைகளை எழுதினார். மலைக்குயில் தொகுப்பில் இடம்பெறும் கவிதைகள் பலவற்றை இதற்கு உதாரண மாகக் கூறலாம். இவருடைய "எங்க போற?" கவிதை, கொள்கை நோக்கமின்றி வாய்ச்சொல்லை நம்பி, படித்தவர்களோடு எடுபட்டுச் செல்லும் பாட்டாளி வர்க்கத்தை நோக்கி அறைகூவுவதாக அமைகிறது. இன்றைய தலைமுறையினர் சிந்தித்துச் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் இருப்பதை உலகுக்கு அறிவிக்கும் கவிதையாக இது அமைகிறது. இவருடைய "கங்காணி பிரசங்கம்" கவிதையும் இதனை நன் குணர்த்தி நிற்கிறது. தோட்டத்துரைமாருக்கு உழைப் பினை நல்கி, வறுமையின் பிடியில் சிக்கி, வாழ வகையற்று வாழ்ந்து மடியும் மலையக மக்களின் அவலநிலையை இக்கவிதை எடுத்து விளக்குகிறது.

விடியற்காலத்தில் இறைவனைத் துயில் எழுப்புவதாகப் பாடப்படும் திருப்பள்ளியெழுச்சி என்னும் வடிவத்தை தூங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்புவதற்காகக் கையாண்டவர் பாரதியார். பாரதி யாரின் அடிச்சுவட்டில் மிளிரும் கவிதையே "மலைப் பள்ளியெழுச்சி". எண்சீர் விருத்தத்தில் அமையும் இக் கவிதை கூற்றுள கொடுமையான நாட்டினில் மாற்றுள வாழ்வை மீட்டிட பள்ளி எழுந்தருளாய் மகனே என மலைநாட்டின் திருமகனை அழைக்கிறது. துயின்று கொண்டிருக்கும் மலையக சமூகம் விழித்தெழவேண்டிய அவசியத்தை விளம்பும் இக்கவிதை மலையக மக்கள் படித்து ஆய்ந்தறிந்து செயற்படவேண்டிய அவசியத்தை யும் உரிமைக்காய் துடித்தெழுந்து போராட வேண்டிய கடப்பாட்டையும் எடுத்துரைக்கிறது. "தொழிலாளித் தோழா" கவிதையும் உரிமைக்கான தார்மீகக் குரலாகவே ஒலிக்கிறது.

"தோட்ட மலையின் தோழா நீ தோளு யுயர்த்தி வாடா
நாட்டைக் காக்கும் வீரா - உனது நாளை எண்ணி வாடா
வீட்டை மாற்றி வந்தாய் - இக் காட்டை மாற்றி நொந்தாய்
கேட்டை எண்ண மாட்டாய் - இதுகீழ்மை அல்ல வோடா
போட்ட சட்ட மீறி - நீயும் போன தில்லை மாறி
ஊட்ட உயர்ச்சி அற்றாய்-மண்ணில்உணர்விழுந்து நின்றாய்
கூட்டு கின்ற துன்பம் - இனிக் குறைக்க வென்று கருதிப்
பூட்டப் பட்ட உன்றன் - மூளை புலர வென்று வாடா..."

வெள்ளையனை நம்பி, நாடு விட்டு நாடு வந்து, காட்டை மாற்றி சட்டத்துக்கு கட்டுப்பட்டு, துன்பத்தில் உலன்று வாழும் மலையக மக்கள் ஆறாத் துயரை இக்கவிதை பேசிச்செல்கிறது.

மக்களின் வாழ்வை யதார்த்தவாத நோக்கிலே கவிதையாக வடித்தவர்களுள் அல் அஸூமத் முக்கிய மானவர். சமூகத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு இவர் கவிதைகள் எழுவதால் இக்கவிதைகள் மக்கள் வாழ்வில் எதிர்கொண்ட பிரச்சினைகளையும் அப்பிரச்சினைகள் சிக்கல்களில் இருந்து விடுபடுதலுக் கான வழியினையும் கூறிநிற்கின்றன. அல் அஸூமத் கவிதைகள் உண்மையான உணர்வுகளை மாத்திரமே கருத்தில் கொண்டு எழுதப்பட்டதால் இக்கவிதைகளில் கற்பனைகளும் அழகியலும் புறந்தள்ளப்படுகின்றன. மக்கள் வாழ்க்கையை முன்னிறுத்தும் இக்கவிதை களில் பிரச்சினைகள் காரண காரியத் தொடர்புகளுடன் எடுத்தாளப்படுகின்றன. வாழ்க்கைச் சுழலில் அகப்பட்ட அடிநிலைமக்களின் பொருளாதாரக் கஷ்டங்களையும் வாழ்க்கை நெருக்கடிகளையும் சமூக எழுச்சியையும் பாடுவதால் இக்கவிதைகளில் மிகைப்படுத்தப்பட்ட அக வயப்பட்ட உணர்வு நிலைகள் அருகியே காணப்படு கின்றன. அத்தோடு இக்கவிதைகள் நாடகீயத்தருணங் களையோ மிகைப்படுத்தப்பட்ட அலங்காரங்களையோ வெளிப்படுத்தவில்லை என்றே கூறலாம். ஆயினும் அல் அஸூமத்தின் கவிதைகள் சமகால மக்களின் அன்றாட வாழ்வை புறவய நோக்குடன் தெட்டத் தெளிவாக அணுகுகின்றன. மலையக மக்களின் உரிமைகள் வென்று எடுக்கப்பட வேண்டிய அவசியத்தை "மலைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் எரிமலை" கவிதை உட்பட படைப்புக்கள் பல வற்றில் பதிவு செய்கிறார். சீற்றம் நிறைந்த கவிமகனின் ஆத்மார்த்தக் குரலே இக்கவிதை எனலாம். இவருடைய "செல்வமும் வறுமையும்" கவிதை, உள்ளார் இல்லாருக்கு கொடுத்து வாழ்தலே அறம் எனக்கூறு கிறது. இவரின் "அழகொழுக்கம் நிலைப்படுத்தல் ஆசிரியப் பண்பே" என்னும் கவிதை ஆசிரியத் தொழிலின் மகத்துவத்தை அறத்தின் வழியே கூறிநிற்கிறது. ஆசிரியரிடம் ஒழுக்கமும் கண்ணியமும் காணப்படுவதுடன் மாணவரின் தரத்துக்கேற்ப ஆசிரி யரின் புலமைத்துவமும் இருக்கவேண்டும் என்பதையும் இக்கவிதை உணர்த்தி நிற்கிறது. "பெரியோற்குப் பேறளித்த பிஞ்சு" என்ற கவிதை பிள்ளைப் பேறின் மகத்துவத்தை எடுத்து விளக்கி நிற்கிறது. பெற்றோரின் மனத்துக்கு மகிழ்வைத் தரும் மழலைகளுக்கு பெற்றோர் கல்வி அறிவையூட்டி, அவர்களை நேர்வழியில் செலுத்தி, அன்பு பாராட்டி சீரும் சிரத்தையுமாக வளர்க்க வேண்டும் என்பதை இக்கவிதை போதிப்பதுடன் பெற்றோர்களின் ஆதாரம் மழலைகள் என்பதையும் வெளிப்படையாகப் பகிர்கிறது. இவருடைய "கடமை" என்ற கவிதை முஸ்லிமாக பிறந்த ஒவ்வொருவரும் அறத்தின்பாற் செயற்படவேண்டியதன் அவசியத்தை விளக்கி நிற்கிறது. அறிவில்லாதவனுக்கு கல்வி அறிவினையூட்டலும் பசியால் நலிந்தவனுக்கு உண விடுதலும் உழைப்பில்லாதவனுக்கு வழிகாட்டுதலும் நல்லறங்கள் என்பதை இக்கவிதை எமக்கு உணர்த்தி நிற்கிறது.

ஈழத்து அரசியலின் பன்முகப் பக்கங்களை வெளிப்படுத்தி நிற்கும் கவிதைகளில் ஒன்றே திசையில் வெளிவந்த "சுதந்திரன்" கவிதை. மற்றவனை எய்துப் பிழைக்கும் கயவர்களின் முகத்திரையைக் கிழிக்கும் இக்கவிதை சமூகநடப்பினையும் எமக்குணர்த்தி நிற்கிறது. இக்கவிதையில் கவிஞன் வாய்ச்சொல் வீரர் களின் உட்கிடக்கைகளை பரிணாம வளர்ச்சியின் கூறு களாகக் கண்டு அதனை அகவிலகலுடன் கூடிய யதார்த்தமாகச் சித்திரிக்கின்றான். இக்கவிதையில் இடம்பெறும் "வியர்வைத் தந்தைகளை அடிமை" என்பான் என்னும் அடி ஒருமை பன்மை இயைபின்றிச் சொல்முரணையும் தோற்றுவிக்கும் வகையில் அமை கிறது. மொழியின் மீதான அறிவின் தளைக்குள் கட்டுறும் அல் அஸூமத்தின் எழுத்துக்கள் சூழலால் கட்டுண்ட மனிதர்களின் இயல்பு வாழ்வைச் சித்திரித்துச் செல்பவை.

சம்பவங்களைக் கதை மாந்தருடன் தொடர்பு படுத்தி அணுகும் கவிதைகளையும் அல் அஸூமத் எழுதியுள்ளார். இவருடைய "தம்பீ மலையாண்டி", "போறீனுக்கு போறானாம்", "வெல்லம்பிட்டி வெள்ளம்" முதலான கவிதைகள் இத்தடத்தில் கட்டுறுகின்றன. தோட்டத்தில் தகாத நடத்தைவாத முறைகளால் அழிந்து போகும் சமூகம் அதிலிருந்து விடுபட்டு தலைநிமிர்ந்து நிற்கவேண்டிய நிலையைத் "தம்பீ மலையாண்டி"க் கவிதை வெளிப்படுத்தி நிற்கிறது. தாய் நாட்டில் வாழ வழியின்றி அல்லற்பட்ட மக்களின் வாழ்வைக் கூறும் "போறீனுக்கு போறானாம்" கவிதை மலையக மக்கள் தம் சுமையில் இருந்து வெளியேற வெளிநாட்டுக்குப் போவதே சிறப்பென்பதையும் எடுத்துக் காட்டுகிறது. மாந்தர்களின் வாயிலாகச் சம்பவங்களை விளக்கும் இக்கவிதைகளில் யதார்த்தத்தை விட கருதுகோளே துலாம்பரமாகத் தெரிகிறது. 2016ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி களனிகங்கை பெருக்கெடுத்தமையால் வெல்லம்பிட்டி நகரமே வெள்ளத்தில் மூழ்கியது. இதனால் உணவு, உடை, உறைவிடமின்றி மக்கள் மிக்க சிரமப்பட்டனர். இதனைப் பிற்புமாகக் கொண்டு அல் அஸூமத்தால் எழுதப்பட்ட கவிதையே "வெல்லம்பிட்டி வெள்ளம்". மழைவந்தால் வெள்ளத்தில் அடிக்கடித் தாழும் பகுதி வெல்லம்பிட்டி என்பதால் மக்கள் வெள்ளத்தைக் கண்டு சிறிதும் அஞ்சுவதில்லை. ஆதலால் அன்றைய வெள்ளத்தையும் மக்கள் பெரிதும் கவனத்தில் எடுக்கவில்லை. நாளாக நாளாக அவ்வெள்ளம் மக்களைத் துன்புறுத்தியதோடு நில்லாது அழிவுகளையும் கொண்டு வந்தது.

"மூழ்கிநீர் நாசமாய் முற்றுப் பொருட்களையும்
பாதையோரம் போட்டிருந்தோம் பற்பல குன்றுகளாய்
அள்ளிப்போய்ச் சில்லோர் அவர்பொருள்போற் காட்டிப்
புகைப்படங்கள் செய்தும் பொருள் சேர்த்தார்.
பல்லோர் சிலலட்சம் பார்த்தாயும் மார்தட்டு
யாசகத்தில் இஃதுமோர் யாப்பென்று யானிருந்தேன்.."

வெல்லம்பிட்டி வெள்ளத்தைப் பாடிய அல் அஸூமத் "என்றும் வாழ்குவை" என்ற தலைப்பில் தமிழகத்தை அழித்த பெரு வெள்ளத்தையும் பாடியவர். இன, மத, மொழி, சாதிப்பாகுபாடுகளின்றி தமிழர் ஒருவருக்கு மற்றவர் உறுதுணையாய் நின்று பற்பல உதவிகள் செய்தமையை இக்கவிதைப் பாடி நிற்கின்றது.

சங்க மருவிய காலத்தில் அறத்தைப்பாடுவதற் காக எழுந்த வெண்பா யாப்பை அகத்தை பாடுவதற்குப் பயன்படுத்தியவர் புகழேந்திப்புலவர். இதனை நடை முறை வாழ்வில் மக்கள் அனுபவிக்கும் துயரங்களைப் பாடுவதற்காகக் கையாண்டவர் அல் அஸூமத். மலையகத்தில் உள்ளூர் பகுதிகளில் வாழும் மக்கள் நினைத்த மட்டில் பிரயாணம் செய்வதற்கு பஸ்ஸில்லை. பஸ்ஸூக்காக அம்மக்கள் படும் துன்பம் அதிகம். அதிலும் அப்பகுதியில் ஓடும் பஸ்கள் பல பழுதானவை. இவற்றை எல்லாம் அல் அஸூமத்தின் "பஸ்ஸாமை" கவிதை எடுத்துக் கூறிநிற்கிறது.

"எள்ளாமை வேண்டும் எமதுபஸ் வண்டிகளைத்
தள்ளுதலும் வேண்டும்தான் தள்ளு"
"பயணப் பெருங்கடல் நீந்துவார் நீத்தார்
உயிர்பெரிதாய்க் கொள்ளும் அவர்."

பாரதி, பாவலர் துரையப்பாவைப் போன்று பெண்மையைப் பாடியவருள் அல் அஸூமத்தும் ஒருவர். கண்ணகி, சீதை முதலியவர்கள் தெய்வத் தன்மை பொருந்திய கனிவளர் பெண்மைக்கு உதாரணமாக விளங்குபவர்கள். இவருடைய "மலையகப் பெண்மை" என்ற கவிதை மலையகத்தில் பிறந்த பெண் காலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து கணவன், பிள்ளைகளுக்காக உழைத்துவிட்டு பின்னர் மலைக்கு வேலைக்குச் சென்று அங்கு தன் கடமைகளைச் செய்து பின்னர் வீடு வந்து தன் வீட்டுக்குக் கடமைகளைச் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை இக்கவிதை கூறிச் செல்கிறது.

குறள் வழிக்கவிதைகளைத் தொடர்ச்சியாக எழுதியவர் அல் அஸூமத். தினகரனில் "விழுதுகள்" என்ற பெயரில் குறளடி வெண்பாக்களை எழுதியிருந்தார். இக்கவிதைகள் ஆழமான கருத்துக்களை மனத்தில் எழுதில் பதியவைக்குமுகமாக எழுதப்பட்ட கவிதை. இவருடைய "கடன்காரன்" கவிதை ஆழமானது. அதே சமயம் சொற்சிக்கனம் மிக்கது.

"தாவென் னிறாத்தல் தசையை எனக்கரைத்து
நாவற்றற் கூர்கூட்டும் நாய்"

கடன்காரன் கடனை வசூலிப்பதற்காக மனிதனை நாயைப் போல விரட்டுவதோடு அவன் கடன் சுமையால் உடல் தளர்ந்து நிலைகுலைந்து போவதையும் இக்கவிதை உணர்த்தி நிற்கிறது. இவருடைய "தோழன்" கவிதை ஆபத்தில் உதவுவான் தோழன் என்பதையும் எடுத்துரைக்கிறது.

"தோணி புரளின் துடுப்பாய்க் கரம்நீட்டி
மானிலம் சேர்க்கும் மனன்"

ஒருவர் பிறிதொருவரிடத்து மக்களையோ அல்லது அஃறிணைப் பொருள்களையோ தூது அனுப்புவதாக அமைந்த இலக்கியம் தூது இலக்கியம் எனப்படும். இலங்கையில் வரத பண்டிதரின் "கிள்ளை விடு தூது", இணுவில் சின்னத்தம்பிப்புலவரின் "பஞ்சவன்னத்தூது", சரவணமுத்துப்பிள்ளையின் "தத்தை விடு தூது" வந்துள்ள நிலையில் அல் அஸூமத்தின் "பிரஜாவுரிமைத் தூது" சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தால் தட்டுப்பட்ட பிரஜாவுரிமை குறித்துக் கதைக்கிறது. மனைவியிடம் காற்றைத் தூதுவிடும் கவிஞன் வறுமையால் இந்தியா செல்ல எண்ணுகிறான். அச்சமயத்தில் எட்டாம் கூஷரத்தின் இழிந்த பிரிவால் அவனுடைய பிரஜாவுரிமைத் தட்டுப்பட்ட செய்தியை இக்கவிதை எமக்குணர்த்தி நிற்கிறது.

ஆங்கிலத்தில் ஐந்து வரிகளிலே ஒரு குறிப்பிட்ட யாப்புமுறையிலே அமையும் வடிவத்தை லிமரிக் எனக் கூறுவர். குறும்பா ஒரே எதுகைகளையுடைய மூன்று அடிகளைக் கொண்டது. முதலாம் அடியின் மூன்றாம் ஆறாம் சீர்களும் மூன்றாம் அடியின் கடைசிச் சீரும் ஒரே இயைபுடையவை. ஓசை ஊறுபடாது காயின் இடத்து விளம் வருதலும் வெண்சீர் வெண்தடலை யிடத்து இயற்சீர் வெண்தடலையும் வருதலும் உண்டு. மூன்று அடிகளை ஐந்து அடிகளாக்கி எழுதும் போது கவிதை அழகு பெறுகின்றது. மஹாகவியைப் போல "குறும்பா"வை தமிழில் அங்கதச்சுவையோடு வெளிப்படுத்தியவருள் அல்.அஸூமத்தும் ஒருவர்.



"ஞாலத்தை மிஞ்சுதற்காய் அஞ்சா
ஞானியரே முன்புகைத்தார் கஞ்சா
நாடிப்போய்த் தஞ்சா
நரம்பெலும்பும் எஞ்சா
நாசத்துள் புகைப்பவரெம் பிஞ்சா"

இலக்கியத்தை ஆழமாகப் பயின்று இலக்கண விதிகளைச் சுயமாகக் கற்று கருத்துச் செறிவுமிக்க யாப்போசைக் கவிதைகளை எழுதிய அல் அஸூமத்தின் படைப்புக்கள் மக்கள் மத்தியில் பரவலாகச் சென்றடையவில்லை. இலக்கிய ஆய்வுலகமும் இவர் குறித்து அதிகக் கவனம் செலுத்தவில்லை. அல் அஸூமத் கவிதைகளில் சமூகம் என்ற இக்கட்டுரையும் குறிப்பளவிலேயே அவருடைய கவிதைகளைத் தொட்டுச் செல்கிறதேயன்றி பரவலான விரிந்த ஆய்வாக அமையவில்லை. இலங்கை நாட்டின் தேசிய நீரோட்டத்தில் கலந்து மக்களோடு மக்களாகத் தம்மை இணைத்துக் கொண்ட மலையக மக்கள் அரசியல் வேலைவாய்ப்புக்கள் மறுக்கப்பட்டு குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்ட நிலையில் அம்மக்களுக்காகக் குரல் கொடுத்தோரில் முக்கியமானவர் அல் அஸூமத். இலங்கை அரசியல்வாதிகளால் வஞ்சிக்கப்பட்ட மலையக மக்கள் ஏதிலிகளாக மாறி வாழவழியற்றுத் திரிந்த காலத்தை துலக்கமாகத் தம் எழுத்தில் பதிவு செய்த அல் அஸூமத்தும் தெளிவத்தை ஜோசப் போன்று மலையகத்தில் வாழ்ந்து பின்னர் கொழும்பில் வசித்தார். தெளிவத்தை ஜோசப்பை மலையக இலக்கியவாதியாகக் கொண்டாடும் மலையக இலக்கியவுலகம் அல் அஸூமத்தினையும் தம்மூருக்குரியராகக் கருதாததேன். மலையக மக்களின் சமூகப் பொருளாதார நிலையை அவரது நெருக்குண்ட அவல வாழ்வை ஆழமாகத் தம் கவிதை, சிறுகதை, நாவல்களில் வெளிப்படுத்திய அல் அஸூமத்தை மலையக மக்கள் தம்மவராக ஏற்றுக் கொள்ளாமல் போனது ஆரோக்கியமான செயலன்று. அஞ்சாத நீதிமானாய் இறை நம்பிக்கை உடையவராய் அனுதினமும் மக்களுக்காகத் தன்னை ஒப்புக் கொடுத்தவராய் வாழும் இக்கவிஞர் ஆழமான தமிழ் அறிவுமிக்கவர். பல்துறை ஆற்றல் நிரம்பியவர். நீண்ட காலமாக இலக்கியத்தோடு இணைந்து பயணிப்பவர். ஆயினும் இவரை ஈழத்து இலக்கிய உலகம் இதுவரை சரியாக அடையாளங் காணாமல் போன நிலையில் ஜீவநதி அவரின் படைப்புக்களைப் பேச முற்பட்டமை ஈழத்து இலக்கிய உலகுக்கு வளம் சேர்க்கும் முயற்சியாகும். அதுபோல இவருடைய கவிதைகளையும் சிறுகதைகளையும் நாவல்களையும் இலக்கிய உலகம் ஆழமாக நுணுகி ஆராயும்போது ஈழத்தில் ஆளுமை மிக்க ஆளுமைகளில் ஒருவராக அல் அஸூமத் மதிக்கப்படுவார் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிறுகதை

அல் அஸூமத்

# புதுமைப்பித்தனின் அந்தராத்மா

புதுமைப்பித்தனை அறிவீர்கள். அவனுடைய அந்தராத்மாவாகிய என்னை அறிய மாட்டீர்கள். ஏனென்றால், புதுமைப்பித்தன் எனும் ஆன்மா அவனுடைய உடலிலிருந்து பிரிந்தபின்னர், நான் தனியாகக் கழன்றுபோய் இங்கேதான் சுற்றிக்கொண்டிருக்கிறேன்!

ஒருவனுடைய ஆன்மாதான் அவனது உடலிலிருந்து பிரிந்து போகுமே தவிர, அவனுடைய அந்தரான்மா ஏங்கும் செல்வதில்லை. யாராவது ஒருவர் அந்த அந்தரான்மாவின் அனுபவத்துக்கு ஈடு கொடுக்கும் படியாக அமைந்தால், அவரோடு அது இணைந்துவிடும். பிறகென்ன? விட்ட குறை தொட்ட குறைதான். ஆனால் இது வரையிலும் புதுமைப்பித்தனின் நிலைக்கு ஒத்து வருவதாக எவருமே இல்லை என்பதுதான் உண்மை.



இதிலும் ஒரு நகைக்கத்தக்க புதுமை என்னவென்றால், இங்கே எழுதும் ஒவ்வொருவனும் புதுமைப் பித்தனுக்குப் பின்னர் தான்தான் என்று நினைத்துக் கொண்டிருப்பதுதான்! ஆனால், அதற்குத் தகுந்த முயற்சி வேண்டுமே! அப்படி ஒருவர் இருப்பாராயின் அவருடன் இணைந்து புதுமைப்பித்தனின் இரகசியங்களை எல்லாம் சொல்லிக் கொடுக்கத்தானே இத்தனை ஆண்டுக் காலமாக நான் இங்கேயே காத்துக் கிடக்கிறேன்.

இலங்கைத் தலைநகரம் கொழும்புவில், புதுமையான முறையில், "புதுமைப் பித்தன் சிறுகதைப் போட்டி"க்கு வந்த கதைகளைத் தேர்ந்தெடுக்கப் போகின்றார்கள் என்று கேள்விப்பட்டு அங்கே போகப் புறப்பட்டேன். இலங்கையிற் போர் நடந்துகொண்டிருந்ததால் அங்கே அநேக காலமாகப் போகக் கிடைக்கவில்லை. இப்போது போர் முடிந்திருந்தாலும் தூவானம் விடாமல்தானிருக்கின்றது. சரி, நானும் தமிழனாக இருந்தாலும் வீணே போய் ஏன் சித்திரவதைப்பட வேண்டும் என்றுதான் இதுவரையிற் போகாமலிருந்தேன்! முப்பது வருஷப் போரிலும் அதன் பின்னும் அங்கே மாய்ந்துகொண்டிருக்கும் அந்தத் தமிழனின் அஞ்சாநெஞ்சம் எனக்கு இல்லை என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்...

ஆகாய வழியாக வரும்போது கல்கியின் அந்தரான்மாவைக் கண்டேன். "பொன்னியின் செல்வன்" இப்போதெல்லாம் கல்கியைத் திரும்பிப் பார்க்க வைத்திருப்பதால் கல்கியின் அந்தரான்மாவுக்கு ஒரே குஷிதான்! புதுமைப்பித்தனின் துன்பக் கேணிக்கு நடந்து கொண்டிருப்பது போன்றில்லை அதற்கு! நான் அன்றே புதுமைப்பித்தனுக்குச் சொன்னேன் - கேட்பார் பேச்சுக்கு அடிமைப்பட்டு எழுதாமல் போய் நேரிற் கண்டு வந்து எழுதுங்கள் என்று. "கல்கியிடம் பணமிருக்கிறது; போய் வந்து எழுதுகிறார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் ஏது பணம்?" என்றெல்லாம் அன்று புதுமைப்பித்தன் கண் கலங்கினார்தான்...

"பொன்னியின் செல்வன் நாடகம் பார்க்கவா, ஷூட்டிங் பார்க்கவா!" என்றேன்.

"உமக்கெல்லாம் அதன் அருமை எங்கே தெரியப் போகிறது! அதை எழுத அவர் என்ன பாடுபட்டார் என்று உமக்கெல்லாம் தெரியாது! அதற்கெல்லாம் ஓர் அர்ப்பணிப்பு வேண்டும்! சும்மா எடுத்தோம் கொட்டினோம் என்று எழுதினால் அதெல்லாம் எழுத்தாகுமா? இப்போது அதைத் திரைப்படமாக்கவும் துணிந்திருக்கின்றார்கள். பொன்னியின் செல்வனின் உலகம், வாசகர் ஒவ்வொருவர் மனத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கும். அது சிதைந்து விடுமோ என்ற அச்சமும் எனக்குண்டு தான்..." என்று சிறிது காட்டமாகவே என்னை வெட்டியது அது.

துன்பக் கேணியின் நடப்பைத்தான் அது குத்திக் காட்டுகிறது என்பது எனக்கு விளங்கியது. வீணாகச் சச்சரவை வளர்த்துக்கொள்ள விரும்பாத நான். "சரி, போய் வாரும்! நான் இலங்கைக்கு ஒரு சுற்றுப் போய் வருகிறேன்! பொன்னியின் செல்வனின் வாசகர்களின் மன உலகம் சிதையாமல் இருப்பதற்கான ஒரே வழி, அதன் சித்திரங்களை அடிப்படையாகக் கொண்டு நடிகர்களைத் தேர்ந்தெடுப்பதுதான் என்று மணியாரின் கனவிற் போய்ச் சொல்லிவிடும்," என்று கூறி விட்டு அதன் மறுமொழியையும் எதிர்பாராதவனாகப் பறந்தேன்.

கல்கியின் சரித்திரக் கதைகளைப் புதுமைப் பித்தன் நேசித்தார் என்பதை என்னைவிட யாரும் நன்றாக அறிந்திருக்க முடியாது. கல்கியின் சரித்திரக் கதைகளில், தொடருக்காகப் பத்தியை வளர்க்கும் சாண்டில்யத்தனம் இருந்ததே யில்லை. வாசகர்களுக்குத் தேவையற்ற எதையும் அவர் எழுதியதில்லை. கதைக்குப் புறம்பான விமர்சனங்களை அவர் கையாண்டதில்லை. ஒரு முறை வாசித்தவர் அடுத்தடுத்த முறைகளும் வாசிக்க விரும்புவதையே அவர் நடை பறைசாற்றுகிறது. எழுத வருகின்றவர்கள் புதுமைப் பித்தனைப் படிக்க வேண்டியது போலவே கல்கியையும் படிக்க வேண்டும்.

புதுமைப்பித்தனுக்குக் கல்கிமீது தனிப்பட்ட எந்தக் கோபமும் இருந்ததில்லை. இருவருமே எழுத்துலகத்துக்குத் தேவைப்பட்டவர்கள்தாம். கல்கி, பழைமையிலிருந்த மேன்மைகளை எழுதினார். புதுமைப்பித்தன் புதுமைகளிலிருந்த கீழ்மைகளை எழுதினார். இருவருமே நகைச்சுவைக் கொம்பன்கள் என்பதிலிருந்தே தெரியவில்லையா அவர்கள் இருவருமே ஒரு விஷயத்தின் இரு பகுதிகளை எழுதினார்கள் என்று?

சீக்கிரமே கொழும்புவுக்கு வந்துவிட்டேன். ஒன்பது மணிக்குத் தேர்வு தொடங்கும் என்று அறிவித்திருந்தார்கள். நான் அந்த மண்டபத்துக்குப் போயிருந்தபோது அதன் தலைவர் சுந்தரனாரும் செயலாளர் ஆதித்தனாருமே இருந்தார்கள்.

எழுத்தாளர்கள் அல்லவா, அவரவர்களின் ஜோலிகளை முடித்துவிட்டுத்தானே ஒன்பது என்றால் பத்துப் பத்தரைக்குத் தலை நிமிர்ந்து வருவார்கள்!....

அந்த மண்டபம் ஒரு பாடசாலையின் வகுப் பறைதான். தலைவரும் செயலாளரும் வாத்தியாரின் மேசையடியில் அமர்ந்து தத்தம் கைக்கடிகாரங்களைப் பார்த்திருக்கத் தொடங்கினார்கள்.

மேசையின்மீது ஒருகட்டுத் தாள்கள் இருந்தன. வந்திருந்த சிறுகதைகளாக இருக்க வேண்டும். கட்டும் பெரியதாக இல்லை. வேண்டுமானால் பத்திருபத்தைந்து சிறுகதைகள் இருக்கலாம். அதுவும் போக இக்காலத்திற் சிறுகதைகளை யாரப்பா பக்கக் கணக்கில் எழுதிக் கொண்டிருப்பது? வாசகர்களுக்கு வாசிக்க நேரமில்லை என்று எழுத்தாளர்களே ஆய்வு செய்து கண்டுபிடித்து ஒரு பக்கம் ஒன்றரைப் பக்கந்தானே எழுதுகின்றார்கள்! அப்படிப் பார்த்தால் இந்தக் கட்டில் நூறு நூற்றைம்பது கதைகள் இருக்க வேண்டும்! இப்போதுதான் அறுசொற் சிறுகதை, பத்து நொடிச் சிறுகதை என்றெல்லாம் வந்துவிட்டதே! எழுத்தில்லாச் சிறுகதை என்றோர் உத்தி வந்தாலும் நல்லதுதான் என்று தோன்றுகிறது!

இப்போதெல்லாம் நல்ல சிறுகதைத் தொகுதிகள் வரக்கூடாது என்றோ என்னவோ, "சிறுகதைத் தொகுதி ஒன்றாவது போடாதவர்களிடமிருந்து சிறு கதைக் கையெழுத்துப் பிரதிகள் கோரப்படு கின்றன." என்று விளம்பரங்கள் வருகின்றன. இனிமேல், "சிறு கதையே இதற்கு முன் எழுதாதவர்களிடமிருந்து கையெழுத்துப் பிரதிகள் கோரப்படுகின்றன," என்று விளம்பரங்கள் வந்தாலும் வரலாம்.

சீமையிலிருந்து ஓர் எழுத்தாளர் இலங்கைக்குப் போயிருந்தார். அவரைப் பிடித்து ஒரு மேடையில் ஏற்றி விட்டார்கள். அவர், மிகப் பழைய ஓர் எழுத்தாளரை மிகவும் சிலாகித்துப் பேசினார்.

உடனே ஒரு மிகப் புதிய எழுத்தாளர் எழுந்து, "நீங்கள் ஏன் அவரையே புகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்? அவரைத் தவிர வேறுயாரையும் உங்களுக்குத் தெரியாதா? எங்களையும் வாசித்துப் பாருங்கள்!" என்று எரிந்து விழுந்தார்.

சீமைக்காரர் சிறிது சிரித்துவிட்டுச் சொன்னார்:- "நீங்கள் எழுதுகின்றீர்கள்தான். நாங்கள் வாசிக்கும்படியாக எழுதுங்கள்!" என்றார்!

விஷயம் என்னவென்றால் இவர்கள் எழுதும் கதைகள், அளவெடுக்காமல் தையற்காரர் தைத்து விட்ட உடைகளைப்போல் ஒன்றில் தொளதொளவென்றிருக்கும், அல்லது போடமுடியாதபடி இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும். எனவே, "எழுத்தில்லாச் சிறுகதைப் போட்டி" என்றொன்றைத் தயாரித்துக் கொள்வது நம்மையெல்லாம் காப்பாற்றும்!

இதோ நம் எழுத்தாளப் பெருமக்கள் வரத் தொடங்கிவிட்டார்கள். வர வர நானே அறிமுகப் படுத்திவிடுகிறேன்.

முதன் முதலாக வருகின்றார்கள் கந்தன் மாறனும் திருமதி கமலநந்தினி சோமன் சாம்பவனும். கமல நந்தினியின் பக்கமாகத் தனது தலையைச் சாய்த்து மிகவும் சீரியசாகக் கர அபிநயங்களுடன் எதையோ விளக்கிக்கொண்டு வருகிறார்ர கந்தன் மாறன்.

கமல நந்தினியின் கணவர் சோமன் சாம்பவன், கற்பனையைத் துரத்தித் துரத்தி அச்சுறுத்திய எழுத்தாளர் தான். ஆனாலும் பல காதங்களுக்கு முன்னாற் போய் விட்ட எழுத்தை அவராற் சிறிதும் பிடிக்க முடியாமலே இருந்தது. கடைசிக் காலத்திலாவது கனடாவில் போய்க் குடியிருக்கும். "இலக்கியம் அறியாத" சில தமிழர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவது ஏமாற்றலாம் என்று தன் மகனிடம் கனடாவுக்கே போய் எழுதி வருகிறார். இவர் நினைத்ததுபோல் இல்லாமல், அங்குள்ள தமிழர்கள் நல்ல இலக்கிய ஆர்வமும் திறமையும் உள்ளவர்களாகவே இருப்பதால், வந்துவிட்டாரே பாவம் என்று அவரைக் காப்பாற்றுவ தாகத்தான் கேள்வியும்.

அவருடைய மனைவியாரான இந்தக் கமல நந்தினி, இங்கேயே தன் மகளுடன் காலம் கடத்துகிறார். கணவர் குறிப்பெழுதியவற்றையெல்லாம் இவர் கிறுக்கி அனுப்பிக் கணவருடைய இடத்தை நிரப்பி வருகிறார். பத்திரிகைக்காரர்களும் ஐயோ பாவம் என்று பிரசுரித்து வருவதால், இவருடைய தலையில் முடி குறைந்திருந்தா லும் கருப்பு "விக்"கின் பாரம் அதிகம். பச்சை என்றால் பச்சையிலும் நீலம் என்றால் நீலத்திலும் ஆடையா பரணானங்கிருதையாகித்தான் வெளியிற் புறப்பாடு. அறுபதை அவர் என்னதான் நாற்பதுக்குக் கொண்டுவரப் படாதபாடுபட்டாலும், அவருடைய முகமும் பேச்சும் நடையும் எழுபது எண்பதைத் தாண்டித்தான் செயற்படும். வீட்டு ஜோலிகளை மகளிடம் விட்டு விட்டு, அது வரையில் தனக்குக் கிட்டாதிருந்த பெண்ணியத்தைக் காப்பாற்றப் புறப்பட்டவர் மாதிரி எப்போதும் எங்காவது மாதர் சங்கத்திலோ இலக்கிய கூட்டங்களிலோதான் பொழுதுபோக்கு. ஆலை இல்லாத ஊருக்கு இவர்தான் சர்க்கரை

அவருடன் தொற்றிக்கொண்டதுபோல் வந்திருக்கும் கந்தன் மாறன், ஒன்றும் அறியாதோ உலகப் புகழ் பெற்றவர். அவருடன் எந்தக் கூட்டத்துக்கும் செல்ல எல்லாருமே அஞ்சுவார்கள். ஏனென்றால் கூட்டம் முடிந்தாலும் அவருடைய தொணதொணப்பு முடிந்திருக்காது. அதனால்தான் அவர் கதைஞர் ஆனார் எனலாம்.

அவரும் எல்லாரையும் போன்றே எல்லா இலக்கிய ஊடகங்களுக்கும் புதிய இலக்கணம் வகுப்பார்; எழுதுவார்; மாநாடு நடத்துவார். பெண்கள் என்றால் அவருக்கு உயிர்தான். என்னதான் ஆண்களுக்கு ஆசனம் ஒதுக்கிப் போடப்பட்டிருந்தாலும் பெண்களின் வரிசையில்தான் அவருடைய இருப்பு. அங்குள்ள எல்லாப் பெண்களுக்கும் இலக்கியம் படைப்பது எப்படி என்று நல்ல ஒரு பாடமே நடத்திவிடுவார்.

ஐந்தாறு நண்பர்கள் ஒரு முறை சுற்றுலா போனார்கள். பாதையில் ஒரு பெண் அடிபட்டுக் கிடந்தாள். உடனே ஒரு நண்பர் மற்றவர்களிடம், "யாராவது சுந்தன் மாறனுக்கு ஃபோன் பண்ணுங் கடாப்பா" என்றார். நண்பர்கள் விபரம் தெரியாது அவர் முகத்தைப் பார்க்க அவர் அமைதியாகச் சொன்னார்:- "லேடீசுக்கு அவன்தானேடாப்பா ஒத்தாரிட்டி!"

ஓய்வு நேரங்களில் ஏதாவது வாங்கிக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு பெண் எழுத்தாளர்களின் வீட்டுக்குப் பயணமாகிவிடுவார். இருந்து சாப்பிட்டு அவருக்குப் பாடமும் நடத்திவிட்டுத்தான் திரும்புவார். இவருடைய நடவடிக்கையால் பெண் எழுத்தாளர்கள் சிலர் எழுத்துத் துறையையே வெறுத்து ஒதுக்கி விட்டார்கள்.

செம்பியன்மாதேவி என்று ஓர் ஆசிரியை. தெற்காசிய கவிதைகளைத் திறம்பட ஆய்வு செய்து ஒரு நெடுங்கட்டுரையை எழுதியிருந்தார். கந்தன் மாறன் ஒரு நாள் அவர் வீட்டுக்கும் படை யெடுத்துத் தான் வேறு ஒருவரைக் காண வந்ததாகவும் அவர் வீட்டில் இல்லாத தால் இவரையாவது பார்த்துப் போக வந்ததாகவும் சொல்லிப் பழவகையாறாக்களை மேசைமீது வைத்தார்.

செம்பியன்மாதேவிக்கு இவரைப் பற்றிச் சரியாகத் தெரியாதாகையால் சாப்பாடு பூர்வமாக இவரை உபசரித்து, தான் எழுதியிருந்த ஆய்வுக் கட்டுரையையும் காட்டியிருக்கிறார். அதைத் தான் கொண்டுபோய் வாசித்துவிட்டுத் தருவதாகக் கூறி அதை எடுத்துக்கொண்டு வந்தவர், அடுத்த ஆறேமு மாதத்தில் அதனைத் தனது பெயரில் வெளியிட்டுக்கொண்டார்.

காத்திரமான அந்தப் பிரதியால்தான் அவரை எழுத்துலகில் எல்லாரும் பாராட்டத் தொடங்கியமை யும் நடந்தது.

ஒரிரு கடிதங்களை எழுதியும் பதில் இல்லா திருந்த நிலையில், நீண்ட இடைவெளிக்குப் பிறகுதான் கந்தன் மாறனின் திருட்டுணர்வுச் "செல்வாக்"கைச் செம்பியன்மாதேவி அறிந்தார். காரசாரமாக ஒரு கடிதத்தை எழுதி அனுப்பிவிட்டுத் தெரிந்த சிலருக்கும் விஷயத்தைச் சொல்லி மனம் உடைந்துபோன செம்பியன்மாதேவி பின்னர் எழுதவே இல்லை. கல் யாணம் செய்துகொண்டு வெளிநாடு போய்விட்டார். அந்த நிகழ்ச்சியோடு கந்தன் மாறனுக்குக் கள்ளன் மாறன் என்ற நாமமும் கிடைத்தது. இன்றைய தலை முறைக்கு இந்த வரலாறு தெரியாது.

கவிதையிலும் இவர் கெட்டிக்காரர். கவிதை என்றால் தமிழ் கூறும் கவிதை அல்ல. வெளிநாடுகள் கூறும் வெறும் வசனம்தான். கவிதைப் பிரக்ஞை இல்லாதவர்கள் இவரைக் கவி அரங்குகளுக்கும் அழைப்பதுண்டு. பேனையும் கையுமாக மேடையில் இருப்பார். அவர் பெயரை முன்னதாக விளித்தால், "நான் கடைசியாப் படிக்கிறேன். நேரங் கெடைக்காததால கவிதை எழுதக்கெடைக்கல்ல." என்று பெருந்தன்மை யைத் தானே தேடிக்கொள்வார். உண்மை என்னவென் றால், முன்னவர்கள் பாடப் பாட, அவற்றிலிருந்து விஷயத்தைக் கிரகித்து மேடையில் இருந்தவாறே வசனங்களைக் கிறுக்கிக் கொள்வார். பிறகென்ன, எல்லாரையும் மிஞ்சிய கவிஞர்தான்! இதை மோப்பம் பிடித்த பலரும், இவருக்குப் "பொறுக்கி" என்ற பட்டத்தையும் சேர்த்துக்கொண்டார்கள்.

தலைவருக்கும் செயலாளருக்கும் கைகாட்டி விட்டு அவர்களுக்கு வலது புறத்து ஓரத்தில் நந்தினிக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்ட கந்தன் மாறன், தொடர்ந்து பாடம் நடத்தலானார். அடிக்கடி திரும்பி யும் பார்த்துக்கொண்டார். ஏனென்றால் குந்தவையும் பூங்குழலியும் வருவதாக இருந்தது. அவர்கள் வந்ததும் இந்த ஆலையில்லா ஊர்ர ஜன்மத்தைக் கை கழுவி விடலாம் என்பது அவரது எதிர்பார்ப்பு.

இவர்கள் வந்த சிறிது நேரத்தில் அருண்மொழி வந்தார். இவர் மிகவும் நல்ல பிள்ளை என்றுதான் சொல்ல வேண்டும். தன்னை எப்போதுமே முற்படுத்திக் கொள்ள மாட்டார். வினவினால்தான் அல்லது பிழையான தகவல் பேசப்பட்டால்தான் வாயைத் திறப்பார். இவரிடம் எல்லாருக்கும் மரியாதை உண்டெனினும் பதவி, பணம், புகழ் என்று வரும்போதெல்லாம் மற்றவர்கள் இவரை மறந்து முந்திக்கொள்வார்கள். இவரும் அலட்டிக் கொள்ள மாட்டார். அதனால் இலக்கிய உலகத்தில் இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் அநேகமாக இடம் பெறுவதில்லை. இவருடைய எத்தனையோ காத்திரமான படைப்புகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. அவர் அதனைக் கணக்கெடுப்ப தும் இல்லை. யாராவது அதனை அவருக்குச் சுட்டிக் காட்டினால், "சரி. அந்த இடம் இன்னொரு எழுத்தாளருக்குத்தானே கிடைச்சிருக்கு! அப்பறம் என்னா?" என்று சிரித்துக்கொள்வார்.

இறுக்கம் அதிகமாக இருப்பதால் விளங்கக் கடினமாக இருக்கிறது என்ற தட்டிக்கழிப்பில், இவரை யாரும் பெரிதாக வாசிப்பதில்லை. இவருடைய அளவுக்கு மற்றவர்களுக்கு மொழி வாலாயம் இல்லை என்பதுதான் உண்மை. அதனாற் கற்றவர்கள் மத்தியில் இவருக்கு நல்ல பெயர் உண்டு.

வசனக் கட்டுகளே இன்று கவிதையின் இடத்தைக் கபளீகரம் செய்திருக்கின்றன. ஒன்றில் பிச்ச மூர்த்தி சொன்ன தமிழ்க் கவிதைநடை இருக்க வேண்டும். அன்றேல் வெளிநாடுகள் ஆதியிற் சொன்ன படிமம், குறியீடுகள் இருக்க வேண்டும். இந்த வசனக் கட்டு மொழிபெயர்ப்புக்குச் சரிப்பட்டு வரலாம். ஆனால் அருண்மொழியின் மொழிபெயர்ப்புக் கவிதை கள் கூடத் தமிழ்க் கவிதை நடையிலேயே அச்சொட்டாக இருக்கும். கவிதையை அவமானம் செய்யாத ஒரு பிறவி!

கந்தன் மாறனும் நந்தினியும் கை காட்டிக் கொண்டார்கள். அருண்மொழி, தலைவர் - செய லாளருக்கு முன்பக்கமாக உட்கார்ந்து அவருகளுடன் மெல்லிய குரலில் கதைத்துக்கொண்டார்.

இடும்பன்காரியும் ரவிதாஸனும் பினாக பாணியும் அவர்களுக்கே உரிய முழிகளுடன் படாடோபமாக வந்து, அருண் மொழிக்கு வலதுபுறம் இருந்தார்கள். அவர்களுடைய அரட்டையில் கந்தன் மாறனின் தொணதொணப்பு தணிந்துபோனது.

குளிக்கப் போனாலும் குடிக்கப் போனாலும் செத்த வீட்டுக்குப் போனாலும் கல்யாண வீட்டுக்குப் போனாலும் இவர்கள் ஒன்றாகத்தான் போவார்கள். இவர்கள் தங்களை மூவேந்தர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தாலும், எழுத்துலகம் இவர்களை மூதேவிகள் என்றுதான் அழைக்கும்.

இடும்பன்காரியின் கையில் எப்போதும் கண்காட்சிக்குப் போன்று புதிய புத்தகங்கள் இரண்டு மூன்று இருக்கும். பையோ பெட்டியோ கைவசம் இருந்தாலும் புத்தகங்களைக் கையில்தான் அணைத்துக்கொண்டு திரிவார். இவர் தனக்குத் தானே விழாக்கள் எடுத்துக்கொள்வதில் சூரர்.

வெள்ளி விழா, நாற்பதாண்டு விழா, பொன் விழா, போலி விழா, வெள்ளோட்ட விழா, ஐம்பத் தெட்டாம் ஆண்டு விழா என்று பலவகை விழாக்களை ஊராரின் வங்கிகளைக்கொண்டு நடத்தித் தன்னை மாபெரும் எழுத்து விற்பன்னராகக் காட்டியிருக்கிறார். அவள் ஒரு தொடர்கதை, கல்யாணப் பரிசு போன்ற சினிமாக்களையெல்லாம் தனது நாவல்களாக எழுதி யுள்ளார். அது மட்டும் அல்ல. பிறமொழிக் கதை ஒன்றைக் கேள்விப்பட்டாரானால் உடனே அதனை எழுதிப் பெரும் பாராட்டையும் பெற்றுவிடுவார். சில மலையாளக் கதைகளும் இவரிடம் சிக்கி இடும்பன்காரிக் கதைகளாகி உள்ளன.

கிராமப்பகுதிகளில் உள்ள விபரம் அறியா எழுத்தாளர்களின் எழுத்தையும் பணத்தையும் பிடுங்கிப் புத்தகம் போட்டுத் தருவதாகக் கூறி இவர் நடத்தும் பிழைப்பு பிரசித்தமானது. குடியும் சாப்பாடும் இரண்டு கண்கள் என்பார். இந்த இலட்சணத்தில், மேல் நாட்டில் எழுத்தாளர்களுக்கு இருக்கும் மரியாதையில் கால் பங்காவது நம் நாட்டில் இல்லையே என்று மிக மிக நொந்துகொள்வார்.

ஏறக்குறைய பினாகபாணியும் அவரைப் போன்றவரே. இவர் கொழும்புவிலிருந்து மிகத் தொலைவான ஒரு பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவரை நகரத்தில் அறிமுகப்படுத்தியவர் நம்பி ஆழ்வார் என்ற எழுத்தாளர் ஒருவர். கிராமத்திலிருந்து வரும்போதெல் லாம் அவருக்கு இருக்க இடமும் செலவுக்குப் பணமும் கொடுப்பது மட்டுமல்லாமல், பல பத்திரிகைகளில் இவருடைய ஆக்கங்கள் வர உதவியும் செய்தாரர். ஒரு கால கட்டத்தில் இவர் கிராமத்திலிருந்து குடும்பத்துடன் நகரத்துக்கு வர வேண்டியதாகிற்று. அப்போது அவருக்குரிய சகல ஒத்தாசைகளையும் செய்து குடி வைத்துக் கொண்டவர் நம்பிதான்.

நகரத்துக்கு வந்த பின்னர் அவருக்கு வாழ்க்கை தேறியது. படிப்படியாக உயர்ந்து நல்ல நிலைக்கு வந்தார். அத்தோடு அவருக்குப் பண ஆசையும் பதவி ஆசையும் பெருகின. ஆழ்வார் அப்போது ஆசிரியராக இருந்தார். ஒரு பத்திரிகையில் பினாகபாணிக்கு வாரம் ஒரு பத்தி எழுத இடம் பிடித்துக் கொடுத்தார். ஐந்தாறு மாதங்களில் அரசாங்கம் மாறியது. இவர் எதிர்க்கட்சிக் காரராக இருந்தபடியால், பத்தி பறிபோயிற்று. அந்த இடத்தை ஆழ்வாரே எடுத்துக் கொண்டார். அதை அப்போது பெரிதாக பினாகபாணி நினைக்கவில்லை. ஏனென்றால் ஆழ்வார் புதிய அரசாங்கத்தை ஆதரித்தவர்.

இரண்டு ஆண்டுகளில் அரசாங்கம் கவிழ்ந்தது. முந்தைய கட்சியே அரசை நிர்வகித்தது. ஆனால் ஆழ்வாரைப் பத்திரிகை விலக்கவில்லை. காரணம் அவர் அந்தப் பத்தியை நன்றாகச் செய்து வந்தார். பினாகபாணி அந்தப் பக்கத்தைச் சீரழிக்கிறார் என்ற காரணத்துக்காகத் தான் பத்திரிகை அவரை அரசாங்க மாற்றத்தைச் சாக்காகக் காட்டி முன்னர் விலக்கியிருந்தது.

இப்போது பினாகபாணியின் மனதில் வக்கிரம் வளர்ந்தது. "உன் அரசாங்கம்தான் போய்விட்டதே! மானம் உள்ளவனாக இருந்தால் விலகிப் போ," என்று மிகவும் கேவலமாக ஒரு கடிதத்தை எழுதி ஆழ்வாருக்கு அனுப்பிவிட்டார். ஆழ்வார் கண்ணீர் விட்டே அழுதார். அந்த வேதனையோடு வீடு போனவர் மூன்றாம் நாள் இறந்தே போனார். கதை தெரிய வந்தபோது, பினாகபாணியைச் சிலர் ஒதுக்கிவிட்டார்கள்.

ரவிதாஸனும் இதே குணநலன்கள் கொண்டவர் தான். பாலியல் எழுத்துகள் அவருக்குக் கற்கண்டுதான். அந்த வகைப் படங்கள் அந்தக் காலத்தில் வந்தால் தியேட்டரில் அவர்தான் முதல் ஆள். இப்போதெல்லாம் வீட்டிலேயே அவர் தனி ஆளாய் முன்னிற்கிறார். குடும்பம் இல்லை என்பதால் திரைக்காதலிகள்தாம் இவருக்கு நெருக்கம்.

ஆபாசக் காதல் கதைகளை மட்டுமே எழுது பவர். வினவினால் பின் நவீனத்துவம் என்பார். அவர் கல்யாணம் செய்திருந்தாலும் எந்தப் பெண்ணைக் கண்டாலும் வைத்த கண் வாங்காமல் பார்ப்பார். அதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக அவருடைய மனைவியிடம் நிறையத் திட்டுகளும் வாங்கியிருக்கிறார். ஒரு நிம்மதி என்னவென்றால். அவர் எந்தப் பெண்ணையும் நெருங்கிக் கதைப்பதில்லை. கந்தன் மாறனுக்கு எதிர்! ஆனாலும், உள்ளத்து உணர்ச்சி களையெல்லாம் கதைகளில் வைத்துத் தீட்டிவிடுவார்.

"இந்தாளுக்குப் பொம்பளப் பைத்தியம்!" என்று அவருடைய மனைவி கோபித்துக்கொண்டு தாய் வீடு போனதிலிருந்து கதை எழுதுவதையே விட்டுவிட்டார்.

தனது பழைய கதைகளின் இரண்டாம் மூன்றாம் பதிப்புகளைத்தான் இப்போது வெளியீட்டு வருகிறார். ஆனாலும் மனைவி வருவதாக இல்லை. "அவர்தான் இப்ப எழுதுறதே இல்லையே, வாங்களேன்," என்று கூப்பிட்டுப் பார்த்தார்கள். "பைத்தியம் தீரல்லியே! இன்னும் முந்தி எழுதுனதத்தானே திருப்பித் திருப்பிச் சப்பிக்கிட்டிருக்கிறாரு!" என்று ஒரே போடு!

இவர் மேடையில் நின்று பேசினால் முழு அரங்கிலும் சாராய நெடி வீசும். குடிக்காமல் வாடாப்பா என்றால், துணிந்து பேச போதைதான் ஒரே வழி என்பார். "ஆயிரத்தி எட்டு நூத்திப் பத்தாம் ஆண்டிலே ஜெர்மனியில் நடந்த ஒரு இலக்கிய விழாவிலே பேசிய பிரபல எழுத்தாளர் ரொட்ரிகோ, சிறுகதை என்பது ஒரு சிறு வதையாக இருக்க வேண்டும், அல்லது சிறு போதையாக இருக்க வேண்டும் என்று சொன்னார்," என்பார். இடும்பன்காரியோ பினாகபாணியோ இது பற்றி வினவினால், "அதையெல்லாம் யார்டா பாக்கப் போறான்? நம்ம பேசுறத அப்பிடி அழச்சிப் பேசினாத் தான் மத்தவன் வாயப் பொத்திக்கிட்டு கெடப்பான்!" என்பார்.

மெதுவாக ஆடி அசைந்து வந்து சேர்ந்தார் பழுவேட்டரையர். எல்லாரும் இவருக்குக் கொஞ்சம் பயம்தான். அவ்வளவு முன்கோபி! தன் முனைப்பும் அதிகம். இவர் ஒன்றைச் சொல்லிவிட்டால் மற்றவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையானால் எதிர்த்தவர் தொலைந்தார். யாராவது இவரைக் குறை வாக எழுதிவிட்டாலோ பேசிவிட்டாலோ, கொதித்துக் கிளம்பிவிடுவார். குறைப்படுத்தியவரின் மொழி வளத்துக்கு மேலே போய்த் தான் அவரைவிட அழகான கேவலம் என்பதை நிரூபித்துவிட்டுத்தான் மறு வேலை. அதனால் அவரைக் கேளாமலேயே அவரை ஏதாவது ஒரு முக்கியமான பொறுப்பில் வைத்துவிடுவார்கள்.

பழுவேட்டரையர் மூத்த எழுத்தாளர்தான். ஆனாலும் முதிர்ச்சியே கிடையாது. புதுமையையோ சமூகத் தேவையையோ மனதில் இருத்தக் கூடியதையோ அவர் எழுதியுள்ளதாகச் சரித்திரம் கிடையாது. அவருடைய படைப்புகளும், மக்கிப்போன மரக் கட்டையைச் சப்புவது போன்றுதான் இருக்கும். அதை எவரும் பாராட்டவில்லை, பரிசு தரவில்லை என்றால் காலம் முழுக்க அதையே புலம்பிக்கொண்டு திரிவார்.

எந்த மாகாணத்தில் கௌரவிக்கும் விழா நடந்தாலும் அங்கேயும் தனக்கு ஒரு கௌரவம் கிட்ட வழி செய்துகொள்வார். ஆகவே இவர் கொழும்பு வாசியா கிழக்கு மாகாணவாசியா மலை நாட்டுவாசியா வடமாகாணவாசியா என்று எவரும் குழம்பிப் போவார்கள். கவியரங்கம், சிறுகதை, நாவல் பட்டறை, நடனக் கலை விழா, சங்கீத மாநாடு, திரைப்பட விழா என்று எது நடந்தாலும் தன்னையும் போடச் சொல்லி நன்கொடையுடன் நிற்பார்.

தலைவரும் செயலாளரும் தங்களுக்குள் சிறிது கதைத்தார்கள். பின்னர் தலைவர் சுந்தரனார் எழுந்தார்.

"எல்லாருக்கும் வணக்கம். நாம் நடத்துகிற சிறுகதைப் போட்டிக்கு மொத்தம் இருநூறு சிறு கதைகள் வந்தன. அதில் நாங்கள் தேர்ந்தெடுத் துள்ளவை முப்பதுதான். அதிலும் இரண்டாம் சுற்றுத் தேர்வில் ஐந்து சிறுகதைகளையே நடுவர்கள் தேர்ந்தெடுத் திருக்கின்றார்கள். அதில் முதல் மூன்று சிறுகதைகளை நாம் இப்போது தேர்ந்தெடுக்க வேண்டும். நாங்கள் பத்துப் பேருக்கு அழைப்பு விடுத்திருந்தோம். அதில் வந்தியத்தேவரும் குந்தவையும் பூங்குழலியும் வரக் கிடைக்காது என்று சொன்னார்கள். ஆனாலும் எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ஐந்து கதை களையும் ஆய்ந்து ஒரு முடிவை எங்களுக்கு அனுப்பி யிருக்கின்றார்கள். இப்போது உங்களுக்கு ஐந்து சிறு கதைகளையும் தருகின்றோம். அவற்றுள் முதல் மூன்றைத் தெரிவுசெய்து தந்தீர்களானால் இன்றே பரிசுக் கதை களைத் தீர்மானித்துவிடலாம்."

செயலாளர் அந்த ஐவைந்து கதைகளை ஒவ்வொருவருக்கும் கொடுத்தார். அவற்றுடன் ஒரு பேனையும் இவ்விரு தாள்களும் கொடுக்கப்பட்டன.

அதற்குள் ஒரு பையன் கடிக்கவும் குடிக்கவும் கொண்டு வந்து பரிமாறினான். "நல்ல பசிடாப்பா, கொண்டா!" என்று அவசரப்படுத்திக்கொண்டார்ர இடும்பன்காரி. அவருடைய கடிச்சத்தம் பாதைவரையில் கேட்கத் தொடங்கியது.

எல்லாரும் தத்தம் எழுத்துகளில் போலுமே கடித்துக் குடித்தபின் ஓட்டம் தொடங்கியது. நேரம் பத்து மணி.

அருண்மொழியைத் தவிரச் சிறுகதைப் பிரக்ஞை உள்ளவர்கள் அங்கே எவரும் இல்லை. இப்படித்தான் இந்தத் தீவில் இலக்கிய தீவினை நடக்கிறது போலும். அதனால்தான் இங்குள்ள நிலைமை வெளியுலகுக்கு எட்டாமல் இருக்கிறது. சரி, என்னதான் நடக்கிறது என்று பொறுமை காத்தேன்.

பன்னிரண்டைப் பொழுது நெருங்கிக் கொண்டிருந்த போது, ஒவ்வொருவராகக் கைமுறிக்கவும் கொட்டாவிவிடவும் தொடங்கினார்கள். கந்தன்மாறன் விட்ட இடத்திலிருந்து பேச்சைக் கமல நந்தினியுடன் தொடக்கிக்கொண்டார். நந்தினியும் முடித்துவிட்டார்ர போன்றே தெரிந்தது. கந்தனுக்கு "ம்" கொட்டத் துணிந்திருந்தார்.

"முடிச்சவங்க கொண்டு வந்து தாங்க," என்றார் தலைவர்.

நந்தினியுடையதோடு தன்னுடையதையும் கொண்டு வந்து தலைவரிடம் கொடுத்தார் கந்தன் மாறன். மற்றவர்களும் ஒவ்வொருவராகக் கொடுத்தார்கள்.

சொல்லி வைத்தாற்போல் பரிசாரகப் பையன் மறுபடியும் கொண்டு வந்தான். "இப்பவும் கடிதானா! அப்பிடீன்னா சாப்பாடு கிடைக்காது போல! நல்ல ஒரு புரியாணி கிடைக்கும்னு இருந்தேன்!..." என்று தனது எதிர்பார்ப்பை உதறிக்கொண்டார் இடுப்பன்காரி.

நடுவர்களின் புள்ளிகளைத் தலைவரும் செயலாளரும் கடிகுடிகளோடு ஒரு தாளில் எழுதத் தொடங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிகுடிகளும் கசமுசப்புகளும் முடிய அரை மணித்தியாலம் கடந்தது. அதற்குள் முடிவுகளை எழுதி முடித்தார் செயலாளர். தொண்டையைக் கனைத்தார் சுந்தரனார். எல்லாரும் தங்கள் குசினிக் கதைகளைத் தற்காலிகமாக நிறுத்திக்கொண்டு அவரைப் பார்த்தார்கள்.

"அன்பர்களே! முதலாவதாக நாம் முதலாவது இடத்தைப் பிடித்திருக்கும் கதை குறித்துப் பேசலாம். வந்தியத்தேவரும் குந்தவையும் பூங்குழலியும் இங்கே அருண்மொழியும் இடும்பன் காரியுமாக மொத்தம் ஐவர் ஒரே கதையைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். மற்றவர்களின் தெரிந்தெடுப்புகள் வித்தியாசமாக இருக்கின்றன. இப்போது முதலாவது கதையை நாம் பிரச்சினை இல்லாமல் முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். "அறுவடைக் கனவுகள் அல்லது கலி காலம் பிரதேச மயம்" என்ற கதைதான் முதலிடத்தைப் பிடித்திருக்கிறது."

அவரை இடைமறித்துத் திடீரென்று வழக்கம் போல் எழுந்தார் இடும்பன்காரி. "சூ! எனக்குள்ள ஒரே பரபரப்பாக் கெடக்கு! நேத்து ராத்திரி எழுதி இந்தா இப்ப வரக்குள்ளதான் ஒரு கதையைத் தபால் பண்ணிட்டு வாறேன். ஏறக்குறைய அதே டைப்பில இங்க அந்தக் கதை இருக்கு! அதுதான் இந்தக் கலிகாலம் பிரதேச மயம் அல்லது அறுவடைக் கனவுகள்! நல்ல கதை! அருமை யான கதை! நான் அதுக்கு ஆண்டவன் கட்டளைன்னு தலைப்பு வச்சிருந்தேன்!..." என்றவர் தனது அபூர்வமான புன்னகையுடன் எல்லாரையும் ஒரு சுற்றுப் பார்த்து விட்டு அடுத்தவரிடம் எதையோ முணு முணுத்தவாறே அமர்ந்தார்.

எல்லாரும் அமைதியாக இருந்தார்கள். அந்தக் கதையையும் இடும்பன்காரி சுட்டுவிட்டார் என்பது எல்லாருக்கும் விளங்கியதுபோல் தெரிந்தது.

தலைவர் கந்தன் மாறனுடைய அங்க சேட்டைகளைக் கண்டு, "நீங்க?..." என்று இழுத்தார்.

"இல்ல, எல்லாரும் பேசட்டும்; நான் கடைசியாச் சொல்றேன்." என்று தனது பண்புரையை முடித்துக்கொண்டார்.

கமல நந்தினி மிகவும் பிரயாசைப்பட்டு எழுந்தார்.

"எல்லாருக்கும் வணக்கம். நீங்க எல்லா ஆண்டும் ஆண்டுகளுக்குத்தான் - ஆண்களுக்குத்தான் பரிசு குடுக்கிறீங்க. இந்தப் பணயமும் - பயணமும், அது தான் நடக்குது. இந்தக் கதை மோட்சமான... மோசமான ஒரு கதை. பெண்களைக் கிண்டல் செய்ற கதை. இதுக்குப் போய்ப் பசிரு - பரிசு குடுக்கக் கூடாது. இந்தப் பணயமாவது ஒரு பொம்பளைக்கிக் குடுக்கப் பாருங்க. நான் இந்தக் கதையைக் கண்டிக்கிறேன்."

அருண்மொழி எழுந்தார். "அதில அப்பிடி யொண்ணும் பெண்களை இழிவு செய்றதா எந்த எழுத்தும் கிடையாது. பெண்களின் அன்றாடத் துயரங்களைத்தான் அவர் எழுதியிருக்கிறாரு. அடுத்ததா, நல்ல கதைக்குத்தான் முதல் பரிசே தவிர, ஆணுக்குக் கொடுக்கிறது. பெண்ணுக்குக் கொடுக்கிறதுக்கெல்லாம் ஒரு போட்டி தேவையில்லை. இந்த ஐந்து கதைகளுக் குள்ளயும் மிகவும் சிறந்த கதை இதுதான்," என்றார்.

அமைதி நிலவியது. வேறு யாரும் பேசுவதாக இல்லை என்று தெரிந்தவுடன் "கடைசி"யாகக் கந்தன் மாறன் எழுந்தருளினார்.

"தலைவர் மற்றும் செயலாளர் மற்றும் வந்திருக்கும் எழுத்தாளப் பெருமக்கள் எல்லாருக்கும் அன்பு வணக்கம். ஒரு போட்டியை நடத்துவதற்காகவும் மற்றும் எங்களை அதில் நடுவர்களாக அமர்த்தியதற்காக வும் முதற்கண் எனது நன்றியையும் மற்றும் மகிழ்ச்சியை யும் தெரிவித்துக்கொள்வதோடு, இம்மாதிரியான போட்டிகளை நான் வரவேற்கிறேன் என்பதையும் கூறி, அந்த வகையில் எனது கருத்தையும் மற்றும் விருப்பத்தை யும் தெரிவிக்க நினைப்பதோடு, அதாவது இந்தக் கதையில் உண்மையில் பெண்ணியம் சிறிது கேவலமாகத் தான் சொல்லப்பட்டிருக்கிறது என்பதோடு, மற்றும் பல அனுபவங்களைத் தன்னிடத்தில் நந்தினி அவர்கள் கொண்டிருப்பதால் மற்றும் அதாவது அவரது ஆதங்கத் தையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதால் இன்னொரு கதையைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதோடு, வந்த கதைகள் நமக்கு மட்டுந்தான் தெரியும் என்பதால் இந்த அம்மையார் சொல்வதைக் கடைப்பிடிக்கலாம் என்றும் கேட்டுக்கொண்டு, மற்றும்.... அவ்வளவுதான். நன்றி மற்றும் வணக்கம்."

என்ன செய்வது, எல்லாருக்கும் போன்று எனக்கும் சுற்றக் கூடியதாகத்தலை மட்டுந்தான் இருந்தது.

தலைவர் பேசினார். "யார் என்னதான் முரண்டு பிடிச்சாலும் நடுவர்களின் பெரும்பான்மைத் தீர்ப்பை எங்களால் மாற்ற முடியாது. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு இருக்கலாம். அதைப் பொதுவெளியில் காட்டக் கூடாது. இந்தக் கதையில் எங்கேயும் பெண்களை ஆசிரியர் தாக்கவில்லை. தாக்கப்படுவதைத்தான் குறிப்பிட்டு எழுதியிருக்காரு. அடுத்தது, ஆண்களுக்குத்தான் நாங்க பரிசு குடுக்கிறோம் என்ற குற்றச்சாட்டு பாரதூரமானது. இந்தக் கதையை எழுதியிருப்பவர்ர ஆண் அல்ல. ஷாமிளா என்ற பெண்!"

நந்தினியையும் கந்தன்மாறனையும் தவிர எல்லாரும் புன்னகைத்துக்கொண்டார்கள். நந்தினி தனது கைப் பையிலிருந்து ஒரு துண்டுத் தாளை எடுத்து என்னவோ எழுதினார்.

"என்னவாவது செய்ங்க. எனக்கு ஒரு அவசர மான காரியம் இருக்கு. நான் போறன்." என்றவர் தலைவரிடத்தே வந்தார். தலைவர் ஓர் உறையை அவரிடம் நீட்டினார். தான் எழுதிக்கொண்டு வந்த தாளைத் தலைவர் கையில் நந்தினி கமுக்கமாக வைத்துவிட்டுப் போனார்.

அதற்குள் எழுந்துகொண்ட கந்தன்மாறன், தனக்கும் ஒரு கல்யாண வீடு இருப்பதாகச் சொல்லி விட்டு உறையையும் வாங்கிக்கொண்டு நந்தினியைப் பிடித்துவிட ஓடினார்.


கமல நந்தினி கொடுத்த சிறிய துண்டைத் தலைவர் விரித்துப் பார்த்தார். எழுத்துகள் எனக்கும் நன்றாகத் தெரிந்தன.

"இது புதுமைப்பித்தன் விழாவுக்கான போட்டி. ஒரு முஸ்லிமுக்கு, அதிலும் பெண்ணுக்குப் பரிசு கொடுக்கத் தேவையில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. யேசுராசா




# அல் அஸூமத்தின் "வெள்ளைமரம்" சிறுகதைத் தொகுப்பு

இலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கும் மூத்த எழுத்தாளரில் ஒருவர் அல் அஸூமத் அவர்கள். கவிஞர், கவிதைக்கான இதழாசிரியர், யாப்பியல்பற்றி விரிவாக எழுதியவர், சிறுகதையாளர், நாவலாசிரியர், மலையாளத்திலும் ஆங்கிலத்திலுமிருந்து சில நூல்களை மொழியாக்கம் செய்தவர் எனப் பல்பரிமாணப் பங்களிப்பின் சொந்தக்காரர். சார்க் நாடுகளுக்கிடையிலான மொழிபெயர்ப்புச் சிறுகதைப் போட்டிக்காகச் சிறந்த சிறுகதையாக இவரது சிறுகதையொன்று, புதுடெல்லி "கதா" அமைப்பால் தெரிவுசெய்யப்பட்டுப் பரிசளிக்கப்பட்டது. மேலும், இலங்கையில் நடைபெற்ற சிறுகதைப் போட்டிகள் பலவற்றிலும் பரிசு பெற்றவர்; தேசிய இலக்கிய விருதினையும் சில நூல்களுக்காகப் பெற்றிருப்பவர். அவர் எழுதிய **வெள்ளை மரம்** சிறுகதைத் தொகுப்பு, 2001 மார்கழியில், கொழும்பிலுள்ள '**துரைவி பதிப்பக'த்தால்** வெளியிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் 12 சிறுகதைகள் அடங்கியுள்ளன.

கலை – இலக்கியப் படைப்புகள் ஒரு குறிப்பிட்ட கருத்துநிலை சார்ந்து இருக்க வேண்டும்; அல்லா விடில் அவை முக்கியமற்றவை என்ற நோக்குநிலை இங்கு நீண்டகாலமாக இருக்கிறது. இது ஒருவிதத்தில், தமது மதத்தின் மூலமே மோட்சத்தை அடையலாம் – இறைவனைக் காணலாம் என, ஒவ்வொரு மதப் பிரிவினரும் கூறுவது போன்றது! சமூக முரண்பாடுகளையும் குறிப்பாக வர்க்க முரண்பாடையும் வலியுறுத்திய முற்போக்கு அணியினரிடம் இது, நீண்டகாலம் தீவிரமாக இருந்தது; பிறகு தமிழ்த் தேசியவாதிகளிடமும் ஓரளவுக்கு இதனைக் காணமுடிந்தது. இந்த அடிப்படைவாத நோக்குநிலையிலிருந்து விலகி, முழுமொத்த வாழ்வின் அனுபவ வெளிப்பாடுகளாகக் கலை – இலக்கியம் இருக்கலாம் எனக் கருதுபவர்களும் உள்ளனர்; அல் அஸூமத் வெளிப்படையாகக் கூறாவிடினும், அவரது படைப்புகளைப் பார்க்கும்போது, அவருக்கு இந்நோக்கு நிலை பொருந்துவது போலுள்ளது.

சொர்க்க மலர்களைப்போல் பிறக்கும் குழந்தைகள் நாளடைவில் பண்புநிலை மாறிச் சீரழிந்து நரகத்தைச் சேர்ந்தவர்போலாகும் நிலைமை; சிறு பருவத்தில் பலராலும் ஒருபாலுறவுக்காரனாக ஒரு சிறுவன் மாற்றப்படுதலும் அதன் பேசப்படாத இருண்ட பக்கங்களும்; மலைநாட்டிலுள்ள தோட்டத்தில் வாழும் தாயைச் சந்திக்க நீண்ட காலத்தின் பின்னர் – வெவ்வேறு காலங்களில் செல்லும் இரண்டு புதல்வர்களின் மனநிலைகள்; பொருளாதார நெருக்கடியால், தொலைவிலுள்ள நெருங்கிய உறவினரின் குடும்ப நிகழ்விற்குச் செல்லமுடியாத நிலையில், பொய்கூறத் தயாராகும் கணவனும் மனைவியும்; தங்கள் வீட்டுக்குவந்து தங்கி நிற்கும் நான்கு தமிழர்களை, திடீரென உருவான தமிழருக்கெதிரான கலவரச் சூழலில் காப்பாற்ற – தமிழருக்கெதிரான இனத்துவேஷத்தை வெளிக்காட்டுபவர்களாக வேஷம் போடும் ஒரு சிங்களக் குடும்பம்; போர்ச் சூழலில் வடக்கில் கொல்லப்பட்ட இராணுவ வீரனின் சடலம் ஊருக்கு வரும்போது, சிங்கள ஊரென்பதால் தற்பாதுகாப்புணர்வுடன், மரண வீட்டுக்குச் சென்றுவருமாறு கணவனைத் தூண்டும் ஒரு தமிழ்ப் பெண்ணும் – சகோதர இனத்தவருக்கெதிரான போர் என்ற உணர்வுடன் மறுப்புணர்வையும், இனப்பிரச்சினை தொடர்பான சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் கணவனும்; //இங்கே இன்னும் வாழவேண்டுமே என்பதற்குரிய தற்காப்புக் கேடயமாக, இவன்களையெல்லாம் நான் "மன்னித்து" விட்டேனா? // என்ற சிந்தனையுடன், 1983 இனவன்முறைச் சூழலின் சம்பவத்தை நினைவுகூரும் ஒருவர்; சிறுகதைப் போட்டிக்கு என்ன கதையை எழுதலாமெனப் பலவற்றை யோசிக்கும் எழுத்தாளன், // இலக்கியம் படைக்குமுன் மனைவிக்கு முதுகு சொறிவதுகூடப் பிள்ளையார் சுழி போலத்தானா? // என்னும் இக்கட்டான நிலையுடன் முடிவுக்கு வருவது; நூல் வெளியீடொன்றில் நடைபெறும் கேலிக்கூத்தான சம்பவங்களும் ஒருவரின் எண்ணச் சிதறல்களும்; சிற்றூர் "அம்பல"த்தில் முப்பது ஆண்டுகள் தனியனாக வாழ்ந்து, மற்றவர்களால் உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகுபவனும், பெரிய மனிதரின் இருண்ட பக்கங்கள் சிலவற்றை அறிந்தவனும், அவற்றை வெளிப்படுத்தும்போது கேலிக்குட்படுத்தப்படுபவனுமான "பயில்வான்" என்னும் பாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியன இக்கதைகளில் பேசப்படுகின்றன.

இக்கதைகள், ஒரு சம்பவம் அல்லது செய்தி ஏற்படுத்தும் தாக்கங்களால், ஒட்டியும் வெட்டியும் கேள்விகள் எழுப்பியும் விரியும் உணர்வுகளை வெளிப் படுத்துவனவாக உள்ளன; கட்புலரீதியான தோற்றங்க ளை நுணுக்கமாகச் சித்திரிப்பவையாகவுமுள்ளன. உவமை, உருவகரீதியான கருத்துகளை அடுக்கடுக்காக அங்கதத்துடன் வெளிப்படுத்தும் தன்மையையும் கொண்டுள்ளன. இத்தன்மையை அல் அஸூமத்தின் தனித்தன்மையாகவும் அடையாளங்காணலாம்!

மனதில் பதிந்தவற்றில் வகைமாதிரியாகச் சில:

//பொய் எங்களை விழுங்கித்தான் இருக்கிறது. அதனால்தான் நிஜங்களை விட்டும் நாங்கள் விலகி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதுவும் எங்கள் வீடுகளி லேயே, சதா கற்பனா வாதத்தில் உருகிக் கழியும் டீவீ யிலேயே வீட்டின் முக்காற் பொழுதையும் வீணாக்கிக் கொண்டிருக்கிறோமே, அதைத்தான் சொல்கிறேன். //

//எதிர்வீடு மனதில் எழுந்தது. தாய், தகப்பன், மகன், மகள் மட்டுமேயான குடும்பக் கட்டுப்பாட்டின் வீடு. மகன் கில்லாடித்தனத்தில் மகான். திருத்தப்படவே முடியாத கேஸ் என்று ஆண்டவனாலேயே கைவிடப் பட்டவன் மாதிரி. சகல எதிர் காலங்களையும் யோசித்துப் பார்த்தவர்களாக அவனை எப்படியோ இராணுவத்தில், அதாவது இன்றைய உடனடிப் பென்ஷன் தொழிலில் சேர்த்துவிட்டார்கள் குடும்பத் தவர்கள் - ஊரே கையெழுப்பிக் கும்பிட.

திட்டிக்கொண்டிருந்த ஊர் திடுதிப்பென்று அவனை மண்ணின் மைந்தனென்று புகழத் தொடங்கி விட்டது. // ("சொர்க்க மலர்களின் நரகப் பிரவேசம்")

**

//போட்டி நடத்துபவர்கள் நடுவர்களையும் அறிவித்துவிட்டால் என்ன?

... புரட்சி நடுவர்களானால்? சிகப்பு ஆகாஸத் தில் அதி சிகப்பு ஸூர்யன் புஷ்பித்து அதி அதி அதி சிகப்பு மனுஷ்யர்கள் அஹிலத்தில் பிரவேஸம் கொண்டார்கள் என்று காது குத்தலாம்.

நிச்சயமாக ஒரு பெண்ணின் பெயரில்தான் எழுதவேண்டும்! அது எந்தக் குப்பைக் கதையாக இருந்தாலும் முதற் பரிசு சர்வ நிச்சயம்! நடுவர்கள் பாகாய் உருகிவிடுவார்கள்! // ("முதுகச் சொறியுங்கோ")

**

// சுடுகந்தை!

எட்டு வருஷங்களாக என்னை வளர்த்த பூமி...

உள்ளே ஓர் அலை தோன்றி மறைந்தது. இடமாகப் பாதைக்கப்பால், அப்பாவையும் தம்பியையும் அடக்கிய இடங்கள் தென்படவில்லை... அவர்கள் மண் ணாகியே போய்விட்டார்கள்!... ஆவியாகிக் கொண்டி ருந்த கண்ணீரோடு மகனிடம் எட்டிக் காண்பித்தேன்.

அந்த றபரும் கொக்கோவும் எங்கே?... பிடுங்கப் பட்ட நிலத் துண்டுகள் தாத்தாவையும் பாட்டியையும் நினைவூட்டின. வெள்ளையன் வரு முன்னர் இப்படித் தான் இந்த நிலம் இருந்திருக்க வேண்டுமோ?

என் கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன! // ("விரக்தி")

**

//நான் எப்படி ஹோமோ றோமியோ ஆனேன்? திட்டவட்டம் இல்லை. ஆனால் சில சலனங்கள் புகைக் கோடுகளை இழுக்கின்றன.

... அடுத்த, எதிர்த்த வீடுகளிலிருந்து புறப்பட்ட அண்ணாமார்கள், மாமா மார்கள், தாத்தாமார்கள் என்றொரு பட்டாளமே எனக்குள் "கருக்"கென்று நினைவு தொடுக்கிறார்கள்! அவர்களுடைய மூப்புகள் என் பெற்றோர்களின் கண்களைக் கட்டிவிடும்! அவர்கள் தந்த இனிப்புகளும் சில்லறைகளும் என் வாயைக் கட்டிவிடும்! அந்தப் பட்டாளத்தின் உரசல்களும் உருவல்களும் ஊரடங்குச் சட்டங்களாக இருந்தனவே, அவைதாம் எனக்குச் சவக்கிடங்கு கிண்டினவா?... //

("வம்சத்துவம்சம்")

**

//யுத்தத்தில சாகிறவுங்கள அங்கங்கயே பொதைச்சிடாம இப்பிடி ஊரூருக்கு அனுப்புறதால வீணா டென்ஷன் உருவாகுது. தனிச்சிங்கள ஊர இது பாதிக்காது. ஆனா இந்த மாதிரி ஊர ரொம்பப் பாதிக்குது! சமாதானத்த என்னைக்கோ தொலைச்சிட்டு ரோட்டு ரோட்டா அதத் தேடுற இன்னைக்கி இப்பிடி ஒரு பொணம் வந்தொடன அவ்வளவு முயற்சியும் போச்சே! ஒரு மாசத்துக்கு முன்ன இப்பிடித்தான் ஒரு பொணம் இங்க வந்திச்சி. ஒரு சோல்ஜர். ரெண்டு தமிழ் வீடு தரை மட்டம்; ஏழெட்டுப் பேருக்குச் சொத்தியா அடி! கொஞ்சம் வழிப்பறியும் வேற! நானும் அந்தச் சாவு வீட்டுக்குப் போயிருந்தேன். புலி ஒண்ணு வருதுன்னு என்ட முகத்துக்கு நேரே ஒருத்தன் சொன்னான்! இருவது வருஷமா நல்லாப் பழகினவன்! இதெல்லாத்தயும் பொறுத்துக்கிடுறது நம்ம கடமைன்னு சொல்றியா?//

('இருட்டு')

**

//பொறாமை பிடித்த மொழிகளுள் தமிழ்தான் சக்கரவர்த்தி! "ஷேக்ஸ்பியர்" தமிழில் "செகசிற்பியர்" ஆகியது ஓர் உதாரணம். புதுக் கவிதைக்காரர்களை நினைத் தால் இன்னும் பயமாகக் கிடக்கிறது - இவர் "செக்ஸ்ப்ரியர்" ஆகிவிடுவாரோ என்று!// ("வெள்ளை மரம்")

அவரது சிறுகதைகளுக்கு வலுவூட்டும் இத்தனித்தன்மை, சில இடங்களில் செயற்கைத் தன்மையைக் கொண்டிருப்பதையும் குறிப்பிடவேண்டும்.


**

முதுகச் சொறியுங்கோ, விரக்தி, பயில்வான், இருட்டு, குடும்பப் பொய், ராம்சே, வேஷங்களின் தூய்மை, வம்சத்துவம்சம் ஆகிய எட்டுக் கதைகள் என்னைக் கவர்ந்தன; ஏனைய நான்கும் இன்னும் செம்மைப்படுத்தப்படலாம்.எனத் தோன்றுகிறது. பல கதைகளை மீண்டும் வாசிக்கத் தோன்றுகிறது. என்பதையும் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன்!

*19. 06. 2023*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.சு.முரளிதரன்



# யாப்புக்குறித்த அறிவை நல்கும் அற்புதமான நூல்;

## "யாப்பியலுரை ஆய்வுடனான ஒரு விளக்கம்"

தேய்வியம்பலான கவிதைகளும் கதைகளும் படித்துச் சலித்த தருணத்தில், இதமான மாற்றத்தினைத் தரும் நூலொன்று வாசிக்கக் கிடைத்தது. அல் அஸூமத் எழுதிய "யாப்பியலுரை ஆய்வுடனான ஒரு விளக்கம்" என்ற நூலேயதே! ஆழமான தேடலுடன் போதுமான புரிதலுடன் யாப்பியலுக்கான தாடனத்தோடு நூலை எழுதியுள்ளார். இத்தகைய நூலை எழுதுதல் எளிதன்று. இலக்கண நூலை எழுதுவதென்பது கத்திமேல் நடக்கும் வித்தைக்கு நிகரானது. விதிகள் பற்றிய புரிதலோடு, விலக்குகளையும் தெரிந்திருக்க வேண்டும். இறந்தகால விதியினை, நிகழ்காலத்தோடு பொருத்திப் பார்த்து, எதிர்காலத்திற்கான சாத்தியங்களையும் உள்வாங்கி எழுதுதல் வேண்டும். இதுவரை வெளியான இலக்கண நூல்களை நுணுகி ஆராய்ந்து, தற்புதுமையான விடயங்களைச் சுயமாக முன்வைக்கவும் வேண்டும். படைப்பாளியாக இருந்தால் மட்டுமே நுண் சிக்கல்களைத் தெரிந்து தீர்வுகளை முன்வைக்க முடியும். "யாப்பியலுரை ஆய்வுடனான ஒரு விளக்கம் என்ற நூலானது வெறுமனே யாப்பினைப் போதிப்பதோடு நின்றுவிடாது, நுண்ணிய விடயங்களையும் சுட்டிக்காட்டித் தீர்வு சொல்கிறது. யாப்பறிவற்ற ஒருவர் இந்நூலைப் படித்தாலும் செய்யுள் இயற்றும் வகையிலே ஆற்றுப்படுத்தும் ஆற்றலைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எளிமையான விளக்கங்களின் வழியே நகர்கிறது வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் அவர்களின் அணிந்துரையோடும், ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களின் சிறப்புரையோடும் நூலாசிரியரின் என்னுரையினையும் முகிழ் நிலையாகக் கொண்டமைந்து 357 பக்கங்களை உள்ளடக்கியுள்ளது. நூலாசிரியர் தனது படைப்பினை தனக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கே சமர்ப்பணம் செய்துள்ளார். அணிந்துரை, சிறப்புரை, என்னுரை என்னும் விடயங்களைக் கடந்து முன்னுரையோடு நூல் கால்கோளாகின்றது. முன்னுரையில் செய்யுளின் அவசியம் பற்றியும், யாப்பின் தோற்றங் குறித்தும் தர்க்க நியாயங்களை முன்வைக்கின்றார். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, என்பன முதற்பாகத்திலுள்ளன. ஆசிரியப்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா என்பன குறித்தும் பாவினங்கள் குறித்தும் இரண்டாம் பாகம் பேசுகின்றது. பிற்காலத்துப் பாவினங்கள் பற்றியும் சிலாகிக்கின்றார். விருந்து, கும்மி, சிந்து, பண்ணத்தி, வண்ணம் என்பன குறித்து விளங்குகின்றார். குறும்பா பற்றி தனியியல் ஒன்றிலே விரிவாக அலசுகின்றார். முடிவுரையோடு நூல் முற்றுப் பெறுகின்றது.

செய்யுளிலும், இலக்கணத்திலும் ஆர்வம் மிக்க அனைவரும் வாசிக்க வேண்டிய நூலாக அமைந்துள்ளது. சொற்கட்டுமானம் செப்பமாகக் கையாளப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக "ஏற்கெனவே" என்று (ஏற்க + எனவே) மிகச்சரியான பிரயோகத்தோடு நகர்த்திச் செல்கிறார். நெடுங்கணக்கு என்பதில் கணக்கு என்ற பெயருக்குக் கூடப் பொருள்தேடி கணக்காயரை இணைக்கின்றார். வேர்ச்சொல் தேடுவதில் நூலாசிரியர் "விண்ணராகவே" அமைகின்றார்.

குற்றியலுகரத்தைக் குறித்துப் பேசுகின்ற தருணத்தில் மரபுரீதியான வகைப்பாட்டிற்குள் செல்ல முன்னர், வேறொரு வகைப்படுத்தலை முன் வைக்கிறார். நெடிலை அடுத்து, நெடிலடுத்து ஒற்றடுத்து, இரு குறில்களை அடுத்து, இரு குறில்களுடனான ஒற்றடுத்து, ஒரு குறிலையடுத்த நெடிலடுத்து, குறிலையும் நெடிலையும் அடுத்த ஒற்றடுத்து, குறிலடுத்த ஒற்றடுத்து என வகைப்படுத்துகின்றார். சாக்கு, அரக்கு, கத்து என்பன தனித்தனியான வகைப்பாட்டினைப் பெறுகின்றன. கு, சு, டு, து, பு, று என்பவற்றின் முன்னே நிற்கும் மெய்யினை இனங்காண்பதோடு இலக்கணம் நிறைவு பெறுகின்ற சூழலில் நெடிலடுத்த ஒற்றடுத்து (நாக்கு) இரு குறில்களுடனான ஒற்றடுத்து (அரக்கு) குறிலடுத்த ஒற்றடுத்து (கத்து) என்ற விரிவான வகைப்பாடு தேவைதானா என்னும் கேள்வி எழலாம். யாப்பினை அறிவதற்கு இவ்வகைப்பாடே பொருத்தம் என்பதனை அறியும் போது, நூலாசிரியர் நுட்பம் வியக்க வைக்கின்றது. குற்றியலிகரம் குறித்து விளக்கும் போது எனப்படுவது + யாதெனின் புணர்ந்து எனப்படுவது யாதெனின் என்று குற்றியலிகரம் தோன்றும் உதாரணத்தை இனங்காட்டுகின்றார். தமிழ் நாட்டு அந்தணர்கள் "பட்டு" எனக்குற்றியலுகரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றியலுகரமாக உச்சரிக்கும் எடுத்துக்காட்டுகள் வெகுசிறப்பு!

வெண்பாவின் ஈற்றகையாக காசு, நாள், மலர், பிறப்பு என்பவற்றுக்கும் புறநடையாக முற்றியலுகரம் இடம்பெறுவதையும் சுட்டிக்காட்டுகின்றார். புறநடைப் பண்பிற்குத் திருக்குறளை எடுத்துக்காட்டுகின்றார். குற்றியலுகரம் குறித்துப் பேசிவிட்டு அடுத்து ஐகாரக் குறுக்கம் பற்றி விளக்குகின்றார். ஐகாரம் ஒருமாத்திரை பெறும் தருணங்களைச்சுட்டிக் காட்டுகின்றார். ஐது, கைது, வைகுபோன்ற சொற்களில் ஐகாரம் ஒரு மாத்திரையளவில் ஒலிக்கும் போது குறிலிக்குச்சமமாகி குற்றியலுகரம் நிகழவாய்ப்பின்றிப் போய்விடும். இதைக் குறித்து இலக்கணகாரர் ஏன் பேசுவதில்லை என்ற கேள்வி என்னுள் எழுவதுண்டு. இந்நூலில் சிக்கல் களுக்கு உரிய விடயங்களை தேர்ந்தெடுத்து விளக்குவ தும் விதந்துரைக்கத்தக்கது. உதாரணமாக வைகைக்கரை என்பதை நேர்நேர்நிரை என அலகிடுவதைக் குறிப்பிடலாம்.

"ஓடுகின்ற மேகங்காள் ஓடாத தேரில்வெறும்
கூடுவருகுதென்று கூறுங்கள்"

என்னும் நந்திக்கலம்பகப்பாடலில் "தேரில் வெறும்" என்பதில் கனிச்சீர் விரவியமை குறித்து நானும் பல இடங்களில் பதிவு செய்துள்ளேன்.

வகையுளி பற்றிக் குறிப்பிடும் போது, நூலாசிரி யர் புதுக்கவிதையோடு ஒப்புநோக்கி, இந்நுணுக்கம் புதுக்கவிதையில் இல்லை எனக் கூறுவதும் வெகு சிறப்பு. தளைகுறித்த எளிய விளக்கங்களும் பாராட்டும்படி அமைந்துள்ளன. மேலும் மோனையின் வகைகளும், எதுகையின் வகைகளும் ஆச்சரியந்தரும் வகையில் விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டுக்களில் தனது செய்யுள்களையும் குறிப்பிட்டு வியக்க வைக்கிறார். சவலை வெண்பாவுக்குக் கொடுத்த உதாரணமும் விளக்கவும் சிறப்பாக அமைந்துள்ளன. கலிப்பா பற்றிய பகுதியில் "கலிப்பாவுக்கு முரற்கை எனவும் பெயர் உண்டு. முரலுதல் எனும்சொல் இனிமையான ஒலி எழுப்புதல் எனப்பொருள்படும். வேய்ங்குழலுக்கு இதனாற்றான் முரளி எனும் பெயர் வந்தது" என்கிறார். (பக்கம் 231) முரளி என்றால் வேய்ங்குழல் என்பதை அறிவேன். ஆயினும் அதற்கான காரணத்தை இந்நூலினூடாகவே அறிந்து கொண்டேன். எனது பெயரின் உட்கருத்தை அறியத்தந்தமைக்கு நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

ஒத்தாழிசைக் கலியைப் படித்தபோது கவிஞர் சோ.பத்மநாதனிடம் பண்டித வகுப்புப்படித்த நினைவு சிறகடித்தது. தரவு, தாழிசை, அராகம், அப்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் ஆகிய அறுவகை உறுப்புகளையும் வைத்து மாணவர்களைக் கொண்டே செய்யுள் புனையவைத்து அழகாக விளக்கினார். இந்நூலைப் படித்துப் புரிந்து கொள்வதற்கு எனது ஆசானின் கற்பித்தலும் பெருந்துணை செய்ததென்பதைக் கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன். குறும்பாக்களை குறிப்பிடும் இடத்துப் பன்முக இலக்கணங்களையும் இனங்காட்டுகின்றார். விதியும் விலகலும் எடுத்துக் காட்டுகளின் மூலம் காட்டப்படுகின்றன. திரு ம.ந.கடம்பேசுவரன் அவர்கள் கூறுவதைப் போல "கவிதைகளாலே தன் உணர்வுகளை, கருத்துகளை முன்வைக்கும் கவிஞர்களுக்கும் இந்நூல் ஒரு கையேடாகும். யாப்புப் பயில்வாரை இந்நூல் ஆற்றுப்படுத்தும்" எனக் குறிப்பிட்டு நிறைவு செய்கின்றேன்.

---

அல் அஸூமத்

# கல்லறை நிலவு

அமைதி நிலவே!
உனக்கு மரணதண்டனையை
விதித்தது யார்?
எந்த நியாயத்துக்காக நீ
போராடப்போய்
எந்தச் சர்வாதிகாரி,
எத்தனை வாக்குகளால்
உன்னைக் கொன்றான்?
அல்லது நீயே
தற்கொலை செய்து கொண்டாயா?
கோடிக்கணக்கான
மெழுகுவர்த்திகளை
வான இடுகாட்டில்
உன் கல்லறைக்கப்பாலும்
நட்டு வைத்து
இரவிரவாக உனக்காக
மௌனாஞ்சலி செலுத்துவது யார்?
கல்லறை கட்டும்
நீ
உயிர்த்தெழும் வித்தையை
யாரிடம் கற்றுக்கொண்டாய்?
இறந்துபோன கவிஞனிடமிருந்தா?
யாருடைய நன்மையை வேண்டி
நீ
மாதத்தில் ஒருநாள்
பூவுலகை நோக்கிக்
கறுப்புக்கொடி காட்டுகிறாய்?
எங்களுடைய
ஊதிய உயர்வுக்காக நாளாந்தம்
நாங்கள்
கறுப்பு வாழ்க்கை பிடிக்கிறோமே,
அதை ஆதரித்தா?
கீற்றுக் கீற்றாய்க் குமுறி மாதத்தில்
ஒருநாள் மாத்திரம்
மனக்கடல்களைப்
பொங்கவைத்துச் செல்கிறாயே,
எங்கள் பிரதிநிதிகள் வாக்குறுதிப்
பனிக்கட்டிகளைச் சுமந்து
வரும்போதா?
உன் வீண் பிரயத்தனத்துக்காக
அவ்விரவில்
மெழுகுவர்த்திகள்
வெளுப்படைந்து விடுகின்றனவே!
எங்களைப் பிரதிபலிப்பதற்காகவா
நீயும்
ஒரு புதிராகத் திரிகிறாய்?
எம்மைப் பொறுத்தவரையில்
நீ
கறுப்புக்கொடி காட்டும்நாளும்
மனக்கடல்களைப்
பொங்க விடும் நாளும்
ஒன்றுதான்; ஒன்றேதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்



அல் அஸூமத் ஈழத்தின் முக்கியமான படைப்பாளிகளில் ஒருவர். கவிதை தொடர்பான மிகத் தெளிவான ஆற்றல் உடையவர். அருமையான சிறுகதைகளை படைத்துள்ளார். இலக்கிய உலகில் தன் படைப்பாற்றலால் நிலைத்து நிற்பதோடு இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் ஆற்றலுடையவராக திகழ்கின்றார். மலையக மக்களின் விடியலுக்காய் உரத்து குரல் கொடுத்த இலக்கியவாதி.

அல்.அஸூமத்
சந்திப்பு : பரணீ

**பரணீ:**

**உங்களது பிறப்பு, கல்வி, எழுத்தின் ஆரம்பக்காலம் எப்படியிருந்தது? இன்றைய நிலைமை எவ்வாறு உள்ளது?**

**அல் அஸூமத்:**

நான் சாதாரண ஒரு மலைநாட்டுத் தொழிலாள தம்பதிகளின் மூத்த மகனாவேன். 1942ஆம் ஆண்டு மத்திய மலைநாட்டிலுள்ள மாத்தளை நகருக்குச் சுமார் இரண்டு கிலோ மீட்டருக்கு அப்பால் இறத் தோட்டைப் பாதைக்கருகில் இருந்த "திக்கிரியா" எனும் இரபரத் தோட்டத்திற் பிறந்தேன். இப்போதும் அவ்விடத்துக்கு அதே பெயர்தான் இருந்த போதிலும் அது தோட்டமாக இல்லாமல் ஒரு குடியேற்றமாக உள்ளது. எனக்கு வேலாயுதம் என்று பெயரிடப்பட்டது. என் தந்தையாரின் பெயர் ராமன் என்பதாகும். அவர் மலையாளி. ஆனாலும், அக்காலத்தில் தோட்டங்களிலிருந்த கெடுபிடிகள் காரணமாகத் தன்னை ஒரு தமிழ்ப் பெயரிற் பதிவு செய்து கொண்டதால் அவர் பெயர் பொன்னையா என்றாகியது! எனது பெயர் இலக்கியத்துக்காகவும் வாழ்க்கைக்காகவும் பலவாறு மாற்றப்பட்டிருப்பதற்கு முன்னோடி அவர்தான்! இலக்கியத்துக்கான எனது பெயரைக் கணக்கிட்டால் அது பதினைந்துக்குமேல் வரும்! ஒரே பெயரில் நான் எழுதியிருந்தேனானால், எனது கனதி கூடியிருக்கும் என்பது உண்மைதான். எனினும் நான் எனது கனதியை மட்டும் கருத்திற் கொண்டிருக்கவில்லை. மலைநாட்டின் எங்களது வாழ்வே ஓர் அடிமை வாழ்வாகவும் புலம்பெயர் வாழ்வாகவும் மறைந்த வாழ்வாகவும் இருந்தமையும் ஒரு காரணமோ என்னவோ! அது போகட்டும். என் தாயாரின் பெயர் மாரியாயி என்பதாகும். எனது ஆரம்பக் கல்வியை நான் பல பாடசாலைகளிலிருந்து பெற்றேன். அதற்குக் காரணம் எங்கள் தந்தையாரின் ஊர்சுற்றும் படலம்தான்! அவரது குணாம்சமே வித்தியாசமானது. எவருக்கும் தலை குனிவதை அவர் என்றுமே வெறுத்திருந்தவர். ஆனால், மலைநாட்டில் அதுவும் ஒரு தொழிலாளியாக மாறிய பின்னர் இவ்வாறான தன்முனைப்புகளை வைத்திருக்க முடியுமா? அதன் பெறுபேறுதான் இந்த நாடோடித்துவம்!

எனது ஆரம்பக் கல்வி மந்தண்டாவளை ஆட்டுப்பட்டிப் பாடசாலையில் தொடங்கியது. பிறகு நிக்கக்கொட்டுவைத் தோட்டப் பாடசாலையில் அது நிகழ்ந்தது. அதன்பிறகு இறத்தோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டது. ஈராண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் தந்தையாரின் திக்விஜயம்! இறுதியாக அமைய, மாத்தளைக் கந்தசாமித் தமிழ்ப் பாடசாலை அதை முடித்து வைத்தது (1952 - 1959). இப்போது அது தேசிய இந்துக் கல்லூரி இடத்தையும் மந்தண்டாவளைக்கு மாற்றிப் புலம்பெயர்ந்து கொண்டது - நம்மைப்போலுமே நாம் படித்த பாடசாலைகளும்! நான் கற்ற நான்கு பாடசாலைகளுள், முதலிரண்டும் அழிந்துவிட்டன. பின்னைய இரண்டும் புலம்பெயர்ந்துகொண்டன!

என் ஆசிரியர்களைக் குறித்துப் பெரிதும் மரியாதை வைத்திருக்கிறேன். மந்தண்டாவளையில் எனக்கு அரிவரி தொடக்கி வைத்தவர் பழனிநாதன் என்பவர். நிக்கக்கொட்டுவைத் தோட்டப்பாடசாலையில் தலைமை ஆசிரியர் செல்லச்சாமியும் ஒரு பெண் ஆசிரியரும் கற்பித்தார்கள். நிக்கக்கொட்டுவைத் தோட்டத்தில் அப்போது எழுதுவினைஞராக இருந்தவர் அருணாசலம் என்பனராவார். பிற்காலத்தில் அவர் மாத்தளை அருணேசர் எனும் பெயரில் பெயர்பெற்ற எழுத்தாளராக விளங்கினார். அவர்தான் எனக்கு ஆங்கிலம் படித்துக்கொடுத்த முதலாவது ஆசிரியர். அதே நேரத்தில், அலுவிஹாரை எனும் சிறு பட்டணத்தின் நடுவில் :தீவிலை எனும் இடத்துக்குப் பிரியும் சந்திக்குச் சிறிது தள்ளி, :தீவிலைப் பாதையிலேயே ஒரு பரங்கிப் பெண்மணி ஆங்கில வகுப்புகள் நடத்திக் கொண்டிருந்தார். எங்கள் தந்தையாரின் நாடோடி நோன்பு மீண்டும் தலை காட்டியபோது அந்த அம்மையாரையும் இழந்தேன். பிறகு நான் இறத்தோட்டைப் பாடசாலையிற் கற்றபோது, அதன் தலைமையாசிரியராக இருந்தவர் சபாபதி என்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கேயே உதவி ஆசிரியராக இருந்த சின்னத்தம்பி என்பவரின் பெயர் நினைவிலிருக்கிறது. ஒரு பெண் ஆசிரியரும் கற்பித்தார். அங்கிருந்து விலகி மாத் தளைக்கு வருவதற்கு முன்னர், ஆசிரியர் சின்னத்தம்பி என் தந்தையாரிடம், "இவன் நன்றாகப் படிப்பான். பிச்சையெடுத்தாவது படிக்க வையும்", என்று கூறியமை இன்னும் எனக்குள் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

கந்தசாமிப் பாடசாலையில் அப்போது தலைமையாசிரியராக இருந்தவர் வி.வேலாயுதர் என்பவராவார். அவருக்குக் கீழ் சிவஞான ஐயர், தில்லையம்பலம், திருச்செல்வம், கமலாம்பிகை போன்றோர் இருந்தார்கள். பின்னர் நடேசபிள்ளை, அப்பாத்துரை, திருமதி செல்லத்துரை, இராமநாதன், லோகநாதன், சின்னத்தம்பி, சுப்பிரமணியம் போன் றோரும் இணைந்தார்கள். வேலாயுதர் அவர்களின் தமிழ்தான் என்னை இதுவரையில் காத்து வருகிறது.

அப்பாத்துரை என்பவர் நயினாதீவைச் சேர்ந்தவர். புத்தகசாலைப் பூபாலசிங்கம் அவர்களின் உடன் பிறந்த சகோதரர். அவர் அக்காலத்தில் "ஆறாறே" எனும் புனைபெயரில் எழுதி வந்தார். அதனை கண்டே அவரின் துணையுடன் பத்திரிகைக்கு எழுதத் தொடங்கினேன். அவரே இலக்கிய ஆசான் எனப் பெருமைப்படுகிறேன். இது 1959இல், நான் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தின் இறுதி யாண்டில் கற்றுக்கொண்டிருந்தபோது நடந்தது. எனக்கு எழுதுவதற்குரிய வழிவகைகளைக் கூறிய அவர், எனது எழுத்துகள் வெளிவந்தபோதெல்லாம் என்னைப் பாராட்டி வளர்த்தார். ஊரெல்லாம் அதனைப் பறைசாற்றிப் பெருமை கொண்டார்!

எனது முதற் படைப்பு வெறும் விடுகதை ஒன்றுதான். முதற் படைப்பே ஞாயிறு வீரகேசரியில் வந்த அன்று நான் கொண்ட அவஸ்த்தை இருக்கிறதே, அதைச் சொல்லி மாளாது! 59இலிருந்து 64 வரையிலும் நான் மேலும் பல கவிதைகளையும் குறுங் கட்டுரை களையும்தான் எழுதிக்கொண்டிருந்தேன். 1964ல்தான் எனது முதற் சிறுகதை வீரகேசரியிற் பிரசுரமானது. அதே ஆண்டில்தான் கவிதையும் பிரசுரமானது - வீரகேசரி யில். என்னை எழுத்துலகிற் பெற்று வளர்த்தது வீரகேசரி தான். எஸ்.எம்.கார்மேகம், ராஜகோபால் ஆகிய இருவரும் அருகிருந்து என்னை எழுத்துத் துறையில் ஊக்கிய மேலும் இருவராவார்கள். மற்றைய ஊடகங்கள் பிறகென்னைத் தத்தெடுத்துக்கொண்டன என்றுதான். சொல்ல வேண்டும்!

ஏறக்குறைய முதல் ஆறு ஆண்டுகள் எனது எந்தக் கதையோ கவிதையோ பிரசுரிக்கப்படவில்லை. என்றாலும், அக்காலத்தை எனது பயிற்சிப் பட்டறையா கவே கணித்து வருகிறேன். எனவே எனது எழுத்துல கத்தின் காலம் (2022 டிஸெம்பர் வரை) அந்த ஆறு ஆண்டுகள் கழிந்த ஐம்பத்தெட்டு ஆண்டுகள்தாம். இந்தப் பயிற்சிக் காலத்தில் நான் எண்ணற்ற கவிதை களை (அப்படித்தான் நினைத்துக்கொண்டு) எழுதினேன். முதற் கவிதையின் தலைப்பு "சோலை" என்பதாகும். ஆனாலும், கவிதை என்றவுடன் எனக்கிருந்த அச்சத்தின் காரணமாக நான் எனது அக்காலத்திய எந்தக் கவிதையையும் எந்தப் பத்திரிகைக்கும் அனுப்பவில்லை! அதனாற் சிறுகதை முந்திக்கொண்டது! 64இல் எனது முதற் கவிதை வெளி வந்திருந்தாலும், தொடர்ந்தும் நான் கதைகளையே எழுதி வந்தேன். எழுபதுக்குப் பிறகுதான் கவிதைகளைத் தொடர்ந்தும் எழுதலானேன்.

இன்று பல நூற்றுக் கணக்கான கவிதைகளை யும் அறுபது சிறுகதைகளையும் மூன்று நாவல்களையும் எட்டுக் குறுங்காவியங்களையும் இரண்டு பெருங் காவியங்களையும் இரண்டு தொடர்நிலைக் கட்டுரை களையும் எழுதியுள்ளேன். இன்னும் எழுதிக்கொண்டு தான் இருக்கிறேன். இரண்டு காவியங்களுள் பிலால் காவியம் வெளிவந்துவிட்டது. பாலியம் அல்லது பிஞ்சியம் என்ற காவியம் இனி வரவேண்டும். வெளி வந்தவற்றுள் மூன்று கவிதைத் தொகுதிகளும் இரண்டு சிறுகதைத் தொகுதிகளும் இரண்டு நாவல்களும் அடங்கும். இவற்றோடு மொழிபெயர்ப்பும் செய்து வரு கிறேன். எங்கள் தந்தையார் மலையாளி அவரிடமிருந்து மலையாளம் கற்றேன். மலையாளத்திலிருந்தும் மொழிபெயர்ப்புச் செய்கிறேன். அவள் பெய்கிறாள் எனும் சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

எனக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து எங்கள் தந்தையார் வீரகேசரிப் பத்திரிகை வாங்குவார். தொழி லாளர் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கூர்ந்து தேடுவார். சில நேரங்களில் அவர் தமிழ் வார்த்தைகளைத் தடுமாறி உச்சரிப்பார். அம்மாதான் சொல்லிக் கொடுப்பார். நாங்கள் சிரித்துக்கொள்வோம். காலப்போக்கில் அவர் தமிழை நன்றாக வாசிக்கலானார். நான் ஆறாம் வகுப்பிற் படித்துக்கொண்டிருந்த போது, என்னையும் பத்திரிகை வாசிக்குமாறு தூண்டினார். நானும் வாசித்து வந்தேன். எட்டாம் வகுப்பில் நான் படித்துக் கொண்டிருந்த போது, முழுப் பத்திரிகையையும் தனக்கு வாசித்துக் காட்டுமாறு சொன்னார், ஒவ்வொரு நாள் இரவுச் சாப்பாட்டுக்குப் பின்னரும் வாசிப்பேன். அப்போது வீரகேசரியில் மலைக்கன்னி தொடர்கதை வந்து கொண்டிருந்தது. முதலில் அதை மட்டும் வாசித்துக்கொண்டிருந்த என்னை, முழுப் பத்திரிகையையும் வாசிக்குமாறு சொல்லிவிட்டு அவர் கேட்டுக்கொண்டிருப்பார். ழகர உச்சரிப்புகளைச் சரியாக உச்சரிக்குமாறு எனக்குச் சொல்லித் தந்தார். இப்படித் தான் எனது வாசிப்புப் பயணம் தொடங்கியது.

நான் எழுதத் தொடங்கு முன்னரிருந்தே, அதாவது ஒன்பதாம் ஆண்டில் படிக்கத் தொடங்கிய திலிருந்தே, தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளான கல்கண்டு, ஆனந்தவிகடன், கல்கி, குமுதம் போன்றவற்றை வாங்கிய படிக்கத் தொடங்கியிருந்தேன். காலப் போக்கில் கதிர், கலைமகள், கதம்பம், கங்கை, கமலம் என்றெல்லம் வாசிக்கத் தொடங்கினேன். இவற்றுக் குரிய பணம் வாராவாரம் எனக்குத் தொல்லையாகவே அமைந்திருந்தது. அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தேன். எங்கள் தோட்டத்தில் கானுக்கொச்சிக்காய்ச் செடிகள் பரந்தளவில் எங்கும் நிறைந்திருக்கும். ஒரு கொத்துக்கு ஒரு ரூபா மாத்தளைக் கடைகளிற் கிடைக்கும். எனவே ஓய்வு நேரங்களில் முழுத் தோட்டமும் அலைந்து எப்படியானது பணத்துக்குரிய கொச்சிக்காயைச் சேகரித்துக் கொள்வேன். அதில் தான் எனது வாசிப்புப் பயணம் செய்தது.

இவற்றிலிருந்த கதைகளும் கட்டுரைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பெருவியப்பில் ஆழ்த்தின. அவற்றை எழுது பவர்கள் மாமேதைகள் என்ற கணிப்பில் இருந்தேன். எனது முதற் படைப்பான விடுகதை வந்த நாளிலிருந்து, இந்த மேதைக் குடைச்சல் என்னைப் பெரும்பூதமாய்ப் பற்றிக்கொண்டது. தொடர்ந்து எனது விடுகதைகளும் கட்டுவாரகளும் பிரசுரமாகின. சில விடுகதைகள் சிறுகதை அளவிலும் வீரகேசரியில் வந்ததுண்டு. ஆனால் கதையோ கவிதையோ கைவரவில்லை. நானும் விடுவதாக இல்லை. அந்த ஆரம்ப நாட்களில் எனது தலை உடலில் இருக்கவில்லை. எங்கோ ஆகாயப் பெருவெளியில்தான் அது மிதந்துகொண்டிருந்திருக்க வேண்டும். பெயரும் புகழும் என்னை நாடி வந்துவிட்ட தான ஒரு கற்பனை!

ஆனால் இன்றைய நிலைமை வேறு. இன்று நான் மிக அமைதியாக இருக்கிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். அன்று எழுத்தை ஓர் அதிமேதாவித் தனமாகக் கருதியிருந்தேன். இன்றோ, எழுத்தை மிகப் புனிதமான ஒன்றாகக் கருதும் மனப்பக்குவம் வந்திருக் கிறது. நான் இறைமுதல்வாதி. எனவே என்னிடம் ஒரு பிரார்த்தனை இருக்கிறது. நான் இறைவணக்க, வழிபாடு களில் இருக்கும்போது இறக்க வேண்டும், அல்லது எழுத்துலகில் இருக்கும்போது இறக்க வேண்டும் என்பது எனது பிரார்த்தனை. இதை ஏன் சொல்கிறேன் என்றால், எழுத்தை இறைமைக்கு அடுத்தபடியாக நான் மதிக்கிறேன் என்பதற்காகத்தான். காமாசோமா என வரும் எழுத்துகள்மீது எனக்கு உடன்பாடில்லை. எழுத் தென்பது மனித சமுதாயத்துக்குரியது. அதனால், அது மேம்பட்டதாக இருக்கவேண்டும் என்ற கொள்கைதான் என்னிடம் இப்போது மிஞ்சியிருக்கிறது. எழுத்தை நான் இருவகையாகக் கணித்துள்ளேன். ஒன்று, சாத்தான் நமக்குள் புகுந்துகொண்டு வெளிப்படுவது. அடுத்தது, இறையை நமக்குட் புகுந்துகொண்டு வெளிப்படுவது. இரண்டாம் நிலையையே நான் பின்பற்றுவதாகக் கருதுகிறேன். எழுத வேண்டும் என்ற ஆவல் இன்னும் தணியவில்லை. எழுதத்தான் வேண்டும் என்ற உந்துதலின்பேரில்தான் இன்றும் எழுதுகிறேன். எழுதியவுடன் அதைப் பிரசுரத்துக்கு அனுப்புவது மில்லை. அதை மேலும் மேலும் செம்மைப்படுத்து கிறேன். எப்போது அது தானாகவே மக்களிடம் செல்லப் புறப்படுகிறதோ அப்போதுதான் அதனை அனுப்பியும் வைக்கிறேன். பலர் என்னிடம் சிறுகதை கோருவதுண்டு. உடனடியாகத் தயாரித்துத் தரும் மனப்பக்குவத்தில் நான் இல்லை என்பதுதான் உண்மை. எழுத்தாளன் என்பவன் எழுத்தை ஆள்பவன் அல்லன். எழுத்து எவனை ஆள்கிறதோ அவன்தான் எழுத்தாளன் என்பது எனது கொள்கை. ஏலவே எழுதப்பட்டது கைவசமிருந்தால் கொடுப்பேன். என்னை ஆளும் எழுத்துத்தான் என்னை எழுதத் தூண்ட வேண்டும்!

**பரணீ:**


**எழுதிக்கொண்டுதான் இருப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனால் ஒரு கதை கேட்டால் இப்படியும் சொல்கிறீர்கள். அப்படியானால் என்ன எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்?**

**அல் அஸூமத்:**

நான் கொழும்புக்கு 74இல் வந்தேன். எண்பதுகளில் "பூபாளம்" எனும் கவிதையேட்டைத் தொடங்கினேன் முதல் ஏட்டின் அட்டையில் இவ்வாறு எழுதியிருந்தேன்:-

"நமக்குத் தொழில்கவிதை நாட்டுக் குழைத்தல்
இமைப்பொழுதும் சோரா திருத்தல் எனக்கால்நூற்(று)
ஆண்டுக்கும் மேலாய் அவதி மிகப்பட்டிவ்
ஆண்டிலே இந்த அறிவும் பணிதொடங்கி
உன்றன் மலர்நெஞ்சுக் குள்நாதப் பூவாளம்
தந்த முதற்சுவரம் தந்தேன் - நயினைதரு
ஆறாறே என்ற அழகுத் தமிழ்தந்த
பேராறே வாழ்த்திப் பெருக்கு"

அப்போது அவர் எங்கே இருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. இந்த இதழை மல்லிகை ஜீவாதான் நானும் அறியாமல் அவரிடம் சேர்ப்பித்திருக்கிறார். அதன் பிறகு ஆசிரியர் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்டார். கொழும்பு வந்தபோதெல்லாம் எங்கள் வீட்டுக்கும் வருவார். ஒரு காலகட்டத்தில் நான் கடுமை யான வறுமையில் உழன்றேன். அப்போது அவர் தமது பென்ஷன் பணத்தைப் பெற்றார். அதில் எனக்குப் பத்தாயிரம் கொடுத்து எனது தொழிலை விருத்தியடை யச் செய்தார். 99இல் அவர் கனடாவுக்குப் போனார். 2009இல் அங்கே காலமானார். அச்செய்தி எனக்குத் தெரியாது. ஏனென்றால் அவரது கனடா முகவரி தொலைந்து போய் விட்டிருந்தது. நானும் அப்போது கொழும்பை விடுத்து ஊரோடு போயிருந்தேன். பத்திரிகையில் இச்செய்தியை அறிந்துதான் அதிலிருந்த தொலைபேசி இலக்கத்தோடு அம்மாவுடன் தொடர்பு கொண்டேன். அம்மா அழுதழுது என்னிடம் சொன்னார்:- அவர் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் தம் எல்லாப் பிள்ளைகளையும் அழைத்து, அவர்கள் ஒரு நன்னிலைக்கு வந்தவுடன், யாருக்கு என்ன செய்யாவிட்டாலும் அஸுமத்துக்குக் கண்டிப்பாக ஒரு நல்ல உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம். அவரது 30ஆம் நாள் நினைவு தினத்தில் நான் பூபாளத்தில் எழுதியிருந்த மேலேயுள்ள கவிதையைப் பாடித்தான் அக்கிரியைகளைத் தொடங்கினார்களாம்!

இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை அவர்கள் கனடாப் பத்திரிகையில் பிரசுரிக்க இருப்பதாகவும் எனது கவிதை ஒன்று வேண்டும் என்றும் அம்மா என்னிடம் இலங்கைவந்த போது கேட்டிருந்தார்கள். ஆயினும், அஞ்சலிக் கவிதைகள் நாள் எழுதுவதில்லை என்பதை அவரிடம் கூறினேன். ஆசிரியர் இறந்துவிட்டதாக நான் எண்ணவில்லை என்றும் கூறினேன். ஆனால், எனதுகவிதையின் கடைசி இரண்டடிகளைப் போட்டு அவர்கள் அந்த விளம்பரத்தைச் செய்திருந்தார்கள்!

அக்காலத்தில் பாடசாலைகள் மூன்று மணிக்குத்தான் விடப்படும். நான் பகலுணவுக்குப் பாடசாலையிற் கிடைக்கும் பனிசைத்தான் உண்பேன். மற்றையவர்கள் பகலுணவை வீட்டிலிருந்து கொண்டு வருவார்கள். பாடசாலைக்குப் பக்கத்தில் வீடுள்ளவர்கள் வீட்டுக்குப் போய்விடுவார்கள். கல்வியில் நான் சிறந்தவனாக இருந்ததால் பாடசாலையில் உள்ள எல்லாரும் என் மீது ஒரு கண்ணாகவே இருப்பார்கள். எனவே, இராமநாதன் ஆசிரியர் எனது வறுமை நிலையை அறிந்தார். கடைசி இரண்டு வருடங்களாக அவர் தாம் வீட்டிலிருந்து கொண்டுவரும் உணவிலிருந்து எனக்கும் தந்துதான் தாம் உண்பார்!... 77இல் நடந்த கலவரத்தோடு அவர் தமிழ்நாட்டுக்குச் சென்றுவிட்டார். அவரது அண்ணன் மகன் பூபாலன் என்னோடு கடைசி இரண்டாண்டுகள் படித்தவர். நான் படிக்கும் போதே பத்திரிகையில் எழுதத் தொடங்கியதுபோல் என் நண்பர்கள் பலரும் எழுதினார்கள். ஆனால் பூபாலனும் நானும்தான் எழுதிக் கொண்டிருந்தோம். கடந்த ஆண்டு பூபாலனும் இறந்துவிட்டார்.

**பரணி:**

**நீங்கள் பத்தாண்டுகள் ஆசிரியராக இருந்ததாகவும் பின்னர் வேறு தொழில்களில் ஈடுபட்டதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். ஏன் ஆசிரியத்தைத் துறந்தீர்கள்?**

**அல் அஸூமத்:**

துறப்பதற்கு அதனை முற்றுமுழுதாகக் கொண்டிருந்திருக்க வேண்டாமா! படித்த மலையகத்தவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த பலவற்றும் தொழில் தலையாயது. நாங்கள் பத்து மாணாக்கர்கள் 1959இல் எஸ்.எஸ்.ஸி. பரீட்சை எழுதினோம். அதில் நான் மட்டுமே தேர்ச்சியடைந்திருந்தேன். நான் கற்ற கந்தசாமி சைவத் தமிழ்ப் பாடசாலை, அரச உதவி பெற்ற தனியார் பாடசாலையாகும். ஆசிரியர்கள் ஏக மனதாக என்னையும் அங்கே ஆசிரியராக ஏற்றுக்கொள்ள முன்வந்தார்கள். பிரஜாவுரிமை இல்லாத காரணத்தால் அது கைகூடவில்லை. தொழில் செய்வதானால் ஆசிரியத் தொழிலையே செய்வது என்று வேறு நான் அடம்பிடித்த காலமது. தோட்டப் பாடசாலையை நாடினேன். அங்கேயும் பிரஜாவுரிமைப் பைசாசம்! அப்போது கந்தசாமிப் பாடசாலையில், இராமநாதன் ஆசிரியரின் அண்ணன் மகன் லோகநாதன் பலாலியிலிருந்து ஆசிரியராக வந்திருந்தார். இங்கே வருவதற்கு முன் அவர் சிறிது காலம், எல்க்கடுவையிலிருந்த விவேகானந்தா வித்தியாலயத்தில் (தனியார் பாடசாலை) சிறிது காலம் கற்பித்தார். அந்த இடத்தில் அவர் என்னை அமர்த்தினார். 60இலிருந்து 64நடுப்பகுதி வரையிற் கற்பித்த நான் ஊதியப் பிரச்சினை காரணமாக விலகினேன். திருமணம் செய்திருந்ததால், வேறு தொழில்களுக்குப் போனேன். பின்னர் 1970இல், மீண்டும் என்னை அங்கே அழைத்தார்கள். 1974 நடுப்பகுதி வரையில் அங்கே இருந்த பிறகுதான். அதே ஊதியப் பிரச்சினை காரணமாகக் கொழும்பு வந்தேன்.

**பரணி:**

**உங்களுடைய நூல் வெளியீட்டு முயற்சிகள் எந்தளவுக்கு உங்களுக்குக் கைகொடுக்கின்றன?**

**அல் அஸூமத்:**

கைகொடுத்தால்தான் பரவாயில்லையே! முழு உடம்பையும் மனத்தையும் எடுப்பதாகத்தானே வெளியீட்டு முயற்சி இருக்கிறது! 1982இல்தான் எனது முதல் நூல் வெளிவந்தது. புலராப் பொழுதுகள் எனும் நெடுங்கவிதைத் தொகுதி அது. கமல் பிரதர்ஸ் வெளியீடு. மலைநாட்டுப் பின்னணியில் அமைந்த இந்நூல் வெண்பாக்களின் பல விகற்பங்களால் ஆனது. கவிஞர் இ.முருகையன் அவர்கள் அழகான ஒரு முன்னுரை அளித்திருக்கிறார். வெளியீட்டு விழாவினை அன்றைய வகவம் செய்தது. அன்றைய வதூல் தொகையை அப்படியே வகவத்துக்கு அளித்துட்டேன். முஸ்லிம் எழுத்தாளர் கவுன்ஸில் அந்நூலுக்குப் பரிசு வழங்கியது.

இந்நெடுங்கதையைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். நான் விவேகானந்தா வித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருந்தபோது, “காட்டரசனிட்ட கடின சாபம்” என்று ஒரு கவிதையை எழுதியிருந்தேன். அதை வீரகேசரி பிரசுரித்திருந்தது. கொழும்புக்கு வந்த காலம் வரையில் அக்கவிதை மனத்துக்குள்ளேயே முழுமையடையாமற் கிடந்தது. பின்னர் அதை விரித்து எழுதினேன்.

**பரணி:**

**முன்னர் எழுதிய ஒன்றைப் பிறகும் திருத்தியோ விரித்தோ எழுதுவது தேவைதானா?**

**அல் அஸூமத்:**

மனிதர்கள் பிழை விடுபவர்கள். என்னதான் எழுதினாலும் அதிற் பிழையோ பிழைகளோ இருப்பது நிச்சயம். அதை நாம் உடனடியாக அறிய முடியாமலிருக்கும். காலப்போக்கிலோ பிறர் சுட்டிக் காட்டினாலோ தவிர அது உடனடியாகத் தெரியாது. அது பத்திரிகையிலோ சஞ்சிகையிலோ வந்திருந்தாலும் நூலாகப் பிரசுரமாகாமல் இருந்திருந்தால், ஏதாவது பிழையும் தெரிந்தால் அதைத் திருத்தி வெளியிடுவது ஒன்றும் போகிறது. நூலில் ஒன்று வந்துவிட்டால் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச்சொத்தாகிவிடுகிறது. அதை எவரும் தன் போக்கிற் பார்க்கலாம். எனவே திருத்தி அப்பழுக்கில்லா மல் அதை மக்களுக்குத் தருவது எழுத்தாளனின் கடமை யாகும். எனது எந்த எழுத்தும் பல முறைகள் திருத்தப் படாமல் பிரசுரத்துக்கு அனுப்பப்பட்டதில்லை. எனது "விரக்தி" எனும் சிறுகதை சார்க் நாடுகளுக்கிடையிலான மொழி பெயர்ப்புக்கு உட்பட்டது. அதற்கு முன்னர் அது "கலையொளி முத்தையாப் பிள்ளை நினைவுப்பரிசை யும் பெற்றிருந்தது. அதை நான் எட்டு முறை திருத்தி எழுதியிருக்கிறேன். எனது முதலாவது நாவலான அறுவடைக் கனவுகள் ஐந்து முறை திருத்தி எழுதப் பட்டது. நான் மூன்று நாவல்கள் தான் எழுதியிருக் கிறேன் அம்மூன்றும் குறைந்தது ஐந்து முறைகளுக்குக் குறையாமல் திருத்தப்பட்டவையே. "விரக்தி" கதையைப் பற்றிய ஓர் அனுபவம் எனக்குள் இன்னும் நமது இலக்கிய உலகின் நிலையை எனக்குள் விமர்சித்துக் கொண்டி ருக்கிறது. இந்தக் கதையை நண்பர் அந்தனி ஜீவா அவர்கள் ஒரு பத்திரிகையிற் பிரசுரிப்பதற்காக என்னிட மிருந்து வாங்கிக்கொண்டு போனார். படம் கீறப்பட்டிருந் தால் அக் கதை உடனடியாகப் பிரசுர மாகும் என்ற நிலை இப் பத்திரிகைக்கு! இரு மாதங்களாகியும் அது பிரசுரிக்கப்படவில்லை. அந் நிலையில் வேறொரு கதை கேட்டார். முதற் கதைக்கு என்ன நடந்தது என்று வின வினேன். அதைச் சொன்னால் நான் மனவருத்தப் படுவேன் என்று கூறிய அவர், நான் பிடிவாதமாகச் சொல்லத்தான் வேண்டும் என்று நின்றதிற் சொன்னார். அந்தக் கதையிற் படம் வரைவதற்கான ஏற்ற புளொட் ஓவியருக்குக் கிடைக்கவில்லையாம்!

1987இல் எனது மலையகக் கவிதைகளை உள்ளடக்கிய ஒரு தொகுதி தமிழ் மன்றம் வெளியீடாகப் பிரசுரம் கண்டது. இந்த இரு நூல்களின் காலகட்டத்தில் எனக்கு அச்சுத் தொழிலைக் குறித்து எதுவும் தெரியாம லிருந்தது. அதனால் முதல் நூல் எனது விருப்பத்துக்கு மாறான தலைப்பையும் அட்டைப்படத்தையும் கொண்டிருந்தது. இரண்டாவது நூல் நான் மூன்று முறை ஒற்றுப் பார்த்துக் கொடுத்தும் 122 பிழைகளைக் கொண்டிருந்தது. 1988இல் பிலால் எனும் ஒரு மொழி பெயர்ப்பு நூல் வெளிவந்தது. அது தமிழ் நாட்டில் அச்சிடப்பட்டிருந்ததால் ஓரளவு உயிரோடிருந்தது. பின்னர் நான் விழித்துக்கொண்டேன். நானே அச்சுக் கலையைக் கற்பதென்று தீர்மானித்து சிறிய அச்சுக் கூடம் ஒன்றை வீட்டுக்குப் பின்பக்கமாகவே தொடக்கினேன். அப்போது கொழும்பிலிருந்த :டொலர் கோப்பி ஹாஜியார் அவர்களும் துரை விஸ்வநாதன் ஐயா அவர்களும் பண உதவி செய்தார்கள். எங்கள் இரண்டாவது மகன் கையடக்கமான ஓர் அச்சியந்தி ரத்தை வாங்கித் தந்தார். 1996இல் கவிதைச்சரம் எனும் நூலை நானே எழுத்துக் கோத்து வெளியிட்டேன்: இதில் 483 கவிஞர்களின் 568 கவிதைகள் பிரசுரிக்கப்பட்டன. இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் தொடர்ந்து நான்காண்டுகள் கவிதைப் பட்டறை ஒன்றை நடத்தி வந்திருந்தேன். அதிற் பங்குபற்றிய பலர் இன்று கவிதையில் நன்னிலை பெற்றுள்ளனர். அவர்களுடைய முயற்சி வீணே காற்றோடு போய்விடக் கூடாது என்ற நன்னோக்கில் பன்னூற்றும் கணக்கான கவிதைகளுள் சிலவற்றைத் தேர்ந்து ஒரு நூலாக வெளிக் கொணர்ந்தேன்.

2001இல் தான் எனது முதலாவது சிறுகதைத் தொகுதி துரைவி பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது. இது சாகித்திய மண்டலப் பரிசையும் சிரித்திரன் சுந்தர் நினைவுப் பரிசையும் பெற்றது. எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதியான ஆயன்னைம்மாதாய் 2012இல் வெளிவந்திருக்கிறது. எனது சிறிய அச்சுக்கூடத்தை மகன் முனாஃப் நிர்வகிக்கத் தொடங்கினார். இன்று அக் கூடம் நன்னிலையில் வளர்ச்சிபெற்றிருக்கிறது. எனது ஆறு நூல்கள் அங்கேதான் ஆசிரியர் வெளியீடாக வெளிவந்தன. குரல்வழிக் கவிதைகள், யாழ் இலக்கிய வட்டத்தின் பரிசைப் பெற்றது. ஆயன்னையம்மாதாய், கொடகே தேசிய விருதைப் பெற்றது. 2010இல் எனது முதல் நாவலான அறுவடைக் கனவுகள் வெளிவந்தது. இது தமிழியல் விருதைப் பெற்றது. பின்னர் யாப்பியலுரை, அவள் பெய்கிறாள் (மலையாள மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்), வரவுக் கங்கைகள் வளமுற என்பன வெளி வந்தன. யாப்பியலுரை இன்று பாலபண்டிதர் பரீட்சைக்குரிய பாடநூலாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. அவள் பெய்கிறாள், அரச தேசிய இலக்கிய விருதைக் கண்டது. இறுதியாக வெளியிடப்பட்டுள்ளவை :பீலால் காவியமும் அமார்க்க வாசம் நாவலுமே. இதில் அமார்க்கவாசம்., அரச தேசிய இலக்கிய விருதைப் பெற்றது. மொழிபெயர்க்கப்பட்டுள்ள சிங்களச் சிறு கதைத் தொகுதிகள் இரண்டு, கலாச்சாரத் திணைக் களத்தில் கடந்த இரண்டரை ஆண்டுகளாகத் தட்டுப்பாடுகள் காரணமாக நிலுவையில் உள்ளன. நான் எழுதிப் பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்தும், மொழிபெயர்த்து வெளிவந்தும் வராதுமுள்ள நூல்கள் ஓர் இருபது மட்டிலும் கைவசமுண்டு! காலம் விடை சொல்லட்டும் என்றிருக்கிறேன்!

**பரணீ:**

**இலங்கையில் வெளியீட்டுக் களங்கள் சம்பத்தமாக உங்களது அபிப்பிராயம் என்ன?**


**அல் அஸூமத்:**

நம் நாட்டிற் பொதுவான வெளியீட்டுக் களம் ஒன்றுகூட இல்லாமை எழுத்தாளர்களின் துர்ப்பாக்க யமே. இருக்கும் எல்லா வெளியீட்டுக் களங்களும் பணம் வாங்கிக்கொண்டே பிரசுரிக்கின்றன. இதை நான் குற்றமாகச் சொல்லவில்லை. ஏனென்றால், அவர் களாவது இருக்கின்றார்களே என்றுதான் திருப்தியடை வேண்டும்! கடைசியில் எழுதியது மட்டுமல்லாமல் எழுத்தாளன் கடனும்பட்டு மேலும் அநியாயமாக்கப் படுகிறான் என்பது மட்டும் நிஜம்! அறுபதெழுபதாயிரம் செலவளித்துப் புத்தகம் போட்ட ஒருவர் ஒரு வெளியீட்டு விழாவைச் செய்தால் ஒரு பத்தாயிரம் கிடைக்கும். ஆகக்கூடினால் இருபந்தையாயிரம் கிடைக்கும். கடை களுக்குப் போட்டால் குறைந்தது நான்கைந்து ஆண்டு களும் ஆகலாம் - ஏதாவது கிடைப்பதற்கு, எனவே எழுத்து என்பது ஓர் ஆடம்பர வாழ்க்கைக்குட் பட்டதாகிவிட்டது! பணம் இருப்பவன்தான் புத்தகம் போட முடியும் என்ற நிலை இருப்ப தால், போடும் புத்தகங்களுள் தொண்ணூறுவிழுக்காடும் குப்பை யாகத்தான் இருக்கின்றன! அப்புறம் இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல எழுத்தே இல்லை என்பார்கள்! எங்காவது யாராவது உண்மைக்குக் கட்டுப்பட்டு ஏதாவது பரிசளித்தால் தான் உண்டு! அதிலும் போட்டா போட்டிகள்! அதற் கென்று சில ஏஜண்டுகள் இருக் கின்றார்கள். இவர்கள் ஒன்றும் இலக்கியத்தை அறிந்தவர்களாகவும் இல்லை. வெறும் செயற்கைக் கொம்பன்கள்! எனக்கு நடந்திருக்கும் சிலவற்றைக் கூறப்போனால், மீண்டும் இலங்கையில் ஒரு யுத்தம் வரலாம்!..



**பரணீ:**

**விருதுகள், பரிசுகள் என்பன குறித்தும் சொல்ல விரும்புகிறீர்களா?**

**அல் அஸூமத்:**

கலாபூஷணம் விருது கொடுக்கின்றார்கள் மு.பொ. கூறியிருப்பதைப்போல் நாட்டிலுள்ள எல்லாருமே கலாபூஷ்ணமாகிவிடுவார்கள்போல் தெரி கிறது! அதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் குழு வாக்குக் கேட்டபின் தெரிந்தெடுப்பதைப்போல்தான் தேர்ந்தெடுக் கின்றார்கள் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதை இவர்களுக்கு முதலில் யாராவது அறிவுறுத்த வேண்டி யிருக்கிறது! கலாபூஷணம் விரும்புபவர்கள் அனை வருமே எதையாவது எழுதித்தள்ளித் தாளை முழுமைப் படுத்திவிட்டாற் போதும்! இறந்துபோன ஒருவர் எழுதியவை குறித்தும் எழுதிவிட்டு இதை நான்தான் புனைபெயரில் எழுதியிருந்தேன் என்றும் சொல்லலாம். பெயரற்றுப்போன ஒரு சஞ்சிகையையோ பத்திரிகை யையோ குறிப்பிட்டு அதில் நான் எழுதி வந்தேன் என்றும் குறிப்பிடலாம். இந்தக் குழு அதனை உடனே ஏற்றுக்கொள்ளும்போல் தெரிகிறது. கேட்டு வாங்கும் இந்தக் கலாபூஷண விருதும் இரந்து உண்ணும் வாழ்க்கையும் ஒன்றுதான்!..

**பரணீ:**

**குழு என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்கள்?**

**அல் அஸூமத்:**

மக்களிடமிருந்து அவர்கள் எழுதி அனுப்பு வதை வைத்துப் பரிசீலிக்கும் முறையையே இல்லாமல் செய்ய வேண்டும். குழுவே முயற்சியில் இறங்கித் தேடுதல் நடத்த வேண்டும். அதற்கெல்லாம் தங் களுக்குப் பொழுதில்லை என்பவர்கள் குழுவிலிருந்து வெளியேறவிட வேண்டும். தேடுதல் நடத்தித் தேர்ந்தெடுத்த பின்னர்தான் எழுத்தாளரிடமிருந்து அவர் குறித்த குறிப்புகளைப் பெற வேண்டும்.

**பரணீ:**

**நீங்களும் கலாபூஷண விருது பெற்றிருக்கிறீர்களே?**

**அல் அஸூமத்:**

நான் கோரியிருக்கவில்லை. அவர்களுடைய இந்த முறை சரியில்லை என்பதை உணர்ந்து தொடக்கத்திலிருந்தே விடுபட்டிருந்தேன். ஆனால், நூற்றுக் கணக்கானவர்கள் பெற்ற பின்பு, நான் இதைப் பெறவில்லை என்பதை அறிந்து, அதைப் போலுமே பெறாமலிருந்த ஜின்னாஹ் அவர்களுக்கும் எனக்கும் அந்த ஆண்டில் அவர்களாகவே தந்தார்கள். இதைத் தான் நான் வற்புறுத்துகிறேன். இந்த முறை முதலி லிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமாகின், நடந்திருக்கும் குளறுபடியொன்றும் நடந்திருக்காது! நான் என்னைக் கலாபூஷணம் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுவதன் காரணம் நானும் கேட்டு வங்கியவன் என்ற இழிசொல் ஏற்படுமே என்பதால் தான். இதைச் சொல்லவும் நான் தயங்குகிறேன். சொல்லாமலும் இருக்க முடியவில்லை!

**பரணீ:**

**சாகித்தியரத்னா விருது பற்றி?**

**அல் அஸூமத்:**

இலக்கியக்காரர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் ஊக்கமளிக்கும் சிறப்பளிக்கும் ஒரு விருது இது. அங்கே யும் சில முரண்பாடுகள் நடக்கின்றனவோ அல்லது நடந்துவிடுமோ என்று அச்சப்படவேண்டியதாக உள்ளது. அச்சம் ஏனென்றால் இவ்விருது இலக்கியக் கார்களுக்கு அல்லாமல் கல்விமான்களுக்கு உரியதாக ஆகிவிடுமோ என்பதுதான். கல்விமான்களுக்கும் இவ் விருதுக்கும் சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. ஆனால் கல்விமான்களாக இருப்பவர்கள் இலக்கியத்துக்கு இன்றியமையாத, மீண்டும் வற்புறுத்து கிறேன், இன்றியமையாத தொண்டாற்றியிருப்பவர்கள் நிச்சயமாக இவ்விருதுக்குரியவர்கள்தாம். ஆனால் போகிற போக்கு ஐயத்துக்கு இடமளிப்பதாகவே உள்ளது. ஏனென்றால் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கே இது செல்கிறது. வடக்குக்கு இம்முறை கொடுத்தால் கிழக்கு அடுத்த முறையும் அதன் பிறகு மலைநாட்டுக்கும் பின்னர் தெற்குக்கும் போக வேண்டும். இரு தமிழருக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தால் ஒரு முஸ்லிம் பின்னர் அடங்க வேண்டும். பிரதேச அடிப்படையில் அமையலாம். சமய அடிப்படையில் அமையலாம். அல்லது சாகித்தியரத்னா என்ற சொல்லின் பொருளுக்கு ஏற்றபடி அமையலாம். சாகித்தியரத்னா என்றால் இலக்கியம் மாணிக்கம் என்று பொருள். மாணிக்கத்துக்குப் பல முகங்கள் இருப்பது போலவே இலக்கியத்துக்கும் முகங்கள் உண்டு. சிறுகதை, நாவல், கவிதை, விமரிசனம், பொதுக் கட்டுரை, நாடகப் பிரதி, இலக்கிய நூல்களின் வெளியீடுகள், இலக்கியத்துக்கான சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்ற இன்னும் பல முகங்கள் இலக்கியத்துக்கும் உண்டு. இவற்றுள் அதிகமானவற்றுள் ஈடுபாடுள்ளவர்கள், அதிலும் சிறப்பான ஈடுபாடுள்ளவர்கள் இதற்குத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் இவ்விருதுக்கு முழுப்பொருத்தம் உடையவர்கள் இல்லை என்கின்றார்கள். இதை நாங்களும் ஓரளவுக்கு ஒத்துக் கொள்கின்றோம். என்றாலும் மேற்கண்ட வகையறாவுக்குள் அடங்கும் சிலரையாவது கணக்கிலெடுக்கலாம். ஜின்னா ஷரிபுதீன், முத்துமீரான், திக்வெல்ல கமால் போன்றவர்களும் உள்ளார்கள். இது எனது தனிப்பட்ட குறிப்பல்ல - இலக்கியம் சார்ந்த குறிப்பு. காத்திரமானவர்களைக் குழுவினர் வடிகட்டியெடுக்க வேண்டும். அவர்களுக்கும் பல பிரச்சினைகள் உண்டு என்பதும் பிரச்சினைதான்!

**பரணி:**

**மொழிபெயர்ப்பு, ஆய்வுகள் சம்பந்தமாக உங்கள் நிலைப்பாடு என்ன?**

**அல் அஸூமத்:**

மொழிபெயர்ப்பு ஒரு தனிக்கலையாகும். ஆனால் மூலத்துக்கமைய மொழிபெயர்ப்பு இடம் பெற்றுள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும். நான் பல பெயர்ப்புகளைக் கண்டிருக்கிறேன். அவை தழுவலுக்குள் அடங்குமே தவிர மொழிபெயர்ப்புக்குள் அடங்குவதில்லை. பரிசு கொடுப்பவர்கள் நிச்சயமாக மூலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தே பரிசுகளைத் தீர்மானிக்க வேண்டும். தேசிய அரசு நடத்தும் பரிசுகளில் மொழி பெயர்ப்புக்குக் குறைவான தொகையே கிடைக்கிறது. இரு மொழிகளைத் தெரிந்திருக்கும் பெயர்ப்பாளருக்குக் குறைந்த தொகை கிடைப்பதை என்னாற் சீரணித்துக்கொள்ள முடியவில்லை. நானும் மொழிபெயர்ப்பாளனாக இருப்பதால் இதன் கடினம் எனக்கு விளங்குகிறது. பரிசு பெற்ற ஒரு மொழி பெயர்ப்பு நான் படித்துப் பார்த்ததில் பக்கத்துப் பத்துப் பிழைகள் வீதம் 500 பக்கங்களுக்கும் ஐயாயிரம் தமிழ்ப் பிழைகள் இருந்தன என்பதையும் கூறியே ஆக வேண்டும்! மூல நூல் கவனத்துக்குட்படுத்தப்பட வேண்டும். அடுத்ததாக, மொழிபெயர்க்கப்பட்ட நூலின் காத்திரமும் தேவையும் கவனிக்கப்பட வேண்டும்

**பரணி:**

**"அல் அஸூமத் அவர்கள் இப்போது ஆக்க எழுத்துகளைக் குறைத்துக் கொண்டு மொழிபெயர்ப்பிலேயே தனது காலத்தைச் செலவழிக்கிறார். அவரிடம் சரக்கு தீர்ந்துவிட்டது" என்ற முறைப்பாட்டுக்கு என்ன சொல்கிறீர்கள்?**

**அல் அஸூமத்:**

நாம் எழுதுவதைவிட அறிவு மிகுந்தவர்கள் எழுதியிருக்கும் எண்ணற்ற படைப்புகள் வாசகர்களைச் சென்றடைய வேண்டிய தேவை இருப்பதைக் கண்டால் அதை நிறைவேற்றுகிறேன். இது மிக முந்தியே செய்யப்பட்டிருக்க வேண்டும். பாரதியின் விருப்பத்தையும் இதில் நாம் சுட்டிக்காட்டலாம். இதில் அதி தலையாய ஒன்றை நான் பின்பற்றுகிறேன். மொழி பெயர்க்கப்படும் படைப்பின் மொழி வரலாறு, நாட்டு வரலாறு, சூழ்நிலை, பண்பாடு என்பவற்றை, மொழிபெயர்ப்பாளர் அறியாத வரையில் அப்பெயர்ப்பால் பலனில்லை என்றுதான் கூறினேன். கையில் கிடைத்ததையெல்லாம் நான் மொழிபெயர்ப்பதில்லை. மலையாள மொழியும் அதன் இலக்கியமும் அந் நாட்டுப் பண்பாடும் எனக்குத் தெரியுமாதலால் மலையாளத்திலிருந்து மொழி பெயர்க்கிறேன். இஸ்லாத்தை நான் அறிந்திருப்பதால், ஆங்கிலத்திலிருந்து இஸ்லாமிய நூல்களை மொழி பெயர்க்கிறேன். நாம் வாழும் நாடு என்பதால் சிங்கள கலாசாரத்தையும் மொழியியலையும் அறிந்துள்ளேன். ஆகவே சிங்களத்திலிருந்து நம் நாடு தொடர்பான எழுத்துகளை மொழிபெயர்க்கிறேன். நான் அறியாத நாடுகளையும் பண்பாடுகளையும் கொண்ட நூல்களை நான் மொழிபெயர்ப்பதில்லை.

**பரணி:**

**மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் நீங்கள் தமிழில் எவ்வாறு எழுத நேர்ந்தது? மலையாளத்திலும் எழுதியிருக்கிறீர்களா?**

**அல் அஸூமத்:**

மலையாளம் தாய் மொழியாக இருந்தாலும் நான் கற்ற மொழி தமிழ்தான். அதில் எனக்குப் பெருமை உண்டு. ஏனென்றால் தமிழ்தான் உலகின் முதல் மொழி. அதவும் இறைவனால் மனிதனுக்குத் தரப்பட்ட மொழி. இது வேறொரு பெருந்தளத்துக்கான தலைப்பு. கற்ற மொழியில் எழுதுவது ஒன்றும் புதுமையல்லவே! நான் மலையாளத்தில் எழுதுவதில்லை. மலையாளம் நல்ல ஒரு மொழி. அதற்கு எழுத்தும் இருக்கிறது. சிறப்பான இலக்கிய நிலையும் இருக்கிறது. ஆயினும் தமிழ் எனக்கு வாலாயமாக இருப்பதைப்போல் மலையாளம் இல்லை. ஆனால் பெயர்ப்புச் செய்ய முடியும். இது எனது உண்மை நிலை. அப்படியிருக்கும்போது ஏதோ என்னைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லப்படும் தாய் மொழிக் கதைகளெல்லாம் பொருளற்றவை. புதுமைப் படத்தக்கது என்றால் அது தோப்பில் மீரானுடைய எழுத்துத்தான். ஏனெனில் அவர் தமிழ் கற்கவில்லை. அவரது முதலாவது நாவலை அவர் மலையாள எழுத்தில் தமிழச் சொற்களை எழுதித்தான் பிறகு தமிழுக்குக் கொணர்ந்திருக்கிறார். பிறகு பிறகு தமிழைக் கற்ற அவர் தமிழில் எழுதினார்.

எனவே கற்ற மொழியில்தான் எவரும் எழுத முடியும். கல்லாத மொழியில் ஏன் எழுதவில்லை என்பது தேவையற்ற ஒரு வினாவாகும். நான் தமிழ் படியாமல் சிங்களம் படித்திருந்தால் சிங்களத்தில்தான் எழுதியிருப்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# அல் அஸூமத்தின் வெளியீட்டு முயற்சிகள்

ஜவாத் மரைக்கார்

அல் அஸூமத் பன்முகங்கொண்ட ஒரு படைப்பாளி. மரபுக் கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, நாவல், ஓவியம், அச்சுத் துறை, பதிப்புத் துறை, எனத் தனது பல்வேறு ஆற்றல்களின் பரிமாணங்களை வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர். பதிப்பாளராகவும் சஞ்சிகை ஆசிரியராகவும் அவர் இலக்கியத்துறைக்கு நல்கியுள்ள பங்களிப்பைச் சுருக்கமாகவேனும் நினைவு படுத்திக்கொள்வதே இச் சிறு குறிப்பின் நோக்கமாகும்.

அல் அஸூமத்தின் வெளியீட்டுத் துறைப் பிரவேசம் 1980களின் ஆரம்பத்தில் நடைபெற்றது. "பூபாளம்" என்னும் காலாண்டுக் கவியேடு அவரது முதல் முயற்சி. கவிதையாக்கத்தில் ஆர்வம் மிக்கோரின் தொகை புற்றீசலாக பெருகிய அக்காலகட்டத்தில் கவிதைகளுக்கான களம் மிகக் குறைவாகவே காணப் பட்டது. என்னே, பிரளயமாகப் பெருக்கெடுத்த கவிதை களை அச்சேற்றுவதற்கான மாற்று வழிகள் நாடப் பட்டன. "றோனியோ" அச்சில் கவிதைத் தொகுதிகளும் இலக்கியச் சிற்றேடுகளும் பெருமளவில் வெளிவரத் தொடங்கின. இடையிடையே சிற்சில வெளியீடுகள் அச்சகங்களையும் எட்டிப்பார்த்தன.

இவ்வாறான சூழ்நிலையில் ஆரம்பக் கட்டத்திலேயே பூபாளத்தின் வருகை நிகழ்ந்தது. மொத்தம் நான்கு இதழ்களுடன் பூபாளத்தின் ஆயுள் முடிந்துபோனாலும், அதன் சாதனை மிகப் பெரிது. புதுக்கவிதை, மரபுக் கவிதை, பிரபல கவிஞர்கள், புதுக்கவிஞர்கள், கவிதை தொடர்பான பிறஆக்கங்கள் எனப் பூபாளம் பலவற்றைச் சுமந்து வந்தது. அன்றைய றோனியோ ஏடுகளின் மத்தியில் அச்சில் வெளிவந்த பூபாளம் ஒரு பாரிய முயற்சி என்பது மிகையாகாது. அல் அஸூமத்தை ஆசிரியராகவும் கவின் கமலைத் துணை ஆசிரியராகவும் கொண்டு கொழும்பு - வீனஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்ட பூபாளத்தின் முதலாவது இதழ் (சுவரம் 1 - இராகம் 1), 1982 ஒக்டோபர் மாதம் வெளியானது. 40 பக்கங்கள் கொண்ட இச் சஞ்சிகை யின் விலை மூன்று ரூபா மட்டுமே. அன்பு முகையதீன், பஸீல் காரியப்பர், கொக்கூர் கிழான், கண்ணதாசன் போன்ற மூத்த கவிஞர்களினதும் பல இளங்கவிஞர் களினதும் 45க்கு மேற்பட்ட கவிதைகளையும் எஸ் ஐ. நாகூர் கனி, ஏ.பி. வி. கோமஸ், தெளிவத்தை ஜோசப் முதலியோரின் கட்டுரைகளையும் யாப்பிலக்கணப் பாடத்தையும் வகவம் (வலம்புரி கவிதா வட்டம்) தலைவருடனான பேட்டியையும் பல இலக்கியத் தகவல்களையும் பூபாளம் 1 கொண்டுள்ளது. பாரதி கவிதைப் போட்டி, பூபாளம் கவிதைப் போட்டி என்பன பற்றிய அறிவிப்புகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

பூபாளத்தின் இரண்டாவது இதழ் 52 பக்கங் களுடன் ஐந்து ரூபா விலையில் 1983, ஜனவரியில் வெளி வந்தது. வகவம் சிறப்பு மலரான இந்த இதழ் மேமன்கவி, எஸ் ஐ. நாகூர் கனி, புல்வெட்டித்துறைப் புலவர், விருச்சிகன் ஆகியோரின் கட்டுரைகள், யாப்பிலக்கணப் பயிற்சி என்பனவற்றுடன் அறுபது கவிதைகளையும் கொண்டுள்ளது. இக் கவிதைகளுள் "நபிக்குறள்" இருபதும் குறும்பாக்கள் பதினெட்டும் அடங்கும். குறும்பா கைவந்த வல்லாளராக அல் அஸூமத்தை அறிமுகப்படுத்தியது இந்த இதழ்தான். மூன்று பூபாளம் இதழ்களிலும் வெளிவந்துள்ள குறும்பாக்கள் தனித் தொகுதியாக வெளியிடப்படத்தக்கவை. அறுபதுக்கு மேற்பட்ட குறும்பாக்கள் பூபாளம் இதழ்களில் அவரால் எழுதப்பட்டுள்ளன. வகவம் கவிதைப் போட்டியிற் பரிசு பெற்ற பதின்மரின் நீண்ட கவிதைகள் 10 பூபாளம் இரண்டாவது இதழில் பிரசுரமாகியுள்ளன.

பூபாளம் மூன்றாவது இதழ் 1983, ஏப்ரல் மாதம் வெளியானது 55 பக்கங்கள் கொண்ட இந்த இதழின் விலை நான்கு ரூபா. ஏனைய இதழ்களிற்போலவே இதன் உள்ளடக்கமும் அமைந்துள்ளது - எழுபதுக்கு மேற்பட்ட கவிதைகள், மரபு சார்ந்தும் புதுக்கவிதையுமாக இவற்றுள் வகவம் பரிசுக் கவிதைகள் 6, நபிக்குறள் 20, குறும்பாக்கள் 23, எஸ். ஐ. நாகூர் கனியின் "சங்கப் பலகை", தெளிவத்தை ஜோசப்பின் "சிற்பி", கவின் கமலின் புதுக்கவிதை பற்றிய ஆய்வுக் கட்டுரை, யாப்பிலக்கணப் பயிற்சி முதலியனவும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

பூபாளம் நாலாவது இதழ் 1983, ஜூலை மாதம் 56 பக்கங்களுடன் நான்கு ரூபா விலையில் வெளியானது. 45க்கு மேற்பட்ட கவிதைகளுடன் வழக்கமான பிற அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. பூபாளம் நடத்திய குறும்பாப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளும் இந்த இதழிற் பிரசுரமாகியுள்ளன.

ஜூலைக் கலவரத்தோடு பூபாளம் நின்றுவிட்ட பின், அல் அஸூமத்தின் மற்றுமொரு முயற்சியின் விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக 1987 (தை - மாசி) வெளியீடாய்ப் "பௌர்ணமி" என்னும் கலை, இலக்கிய ஏடு உதயமானது. 1ஆம் இதழ் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதுவே கடைசி இதழாகவும் அமைந்துவிட்டமை துர்ப்பாக்கியமே.

48 பக்கங்கள் (றோனியோத் தாள்) கொண்ட இச் சஞ்சிகையை வெளியிடுவதில் சில புதிய பரிசோதனை முயற்சிகளை அல் அஸூமத் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். றோனியோப் பிரசுரங்கள் புற்றீசல்களாக வெளிவந்துகொண்டிருந்த காலகட்டத்தில், றோனியோ முறையையும் திரையச்சு (screen printing) நுட்பத்தையும் ஒன்றிணைத்து ஒரு சஞ்சிகையை உருவாக்க அவர் எத்தனித்து ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார். றோனியோ மெழுகுத் தாளில் விடயங்கள் தட்டச்சு செய்யப்பட்டு ஸ்க்ரீன் பிரிண்டிங் நுட்பத்தின் மூலம் அச்சுப் பதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அஸூமத், கலைவாதி கலீல், "ஃப்ரீதர் பிச்சாசோ" (ஸ்ரீதர் பிச்சையப்பா) ஆகியோரின் சித்திரங்களும் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தையும் ஒவ்வொரு தாளாக மை தடவி (சில இடங்களில் வர்ணங்களிலும்!) பதித்து எடுப்பது சிரமமான காரியம் என்பது ஊகிப்படக் கூடியதே. முறைமையான எவ்வித அச்சுச் சாதனங்களையும் பயன்படுத்தாமல் இம் முயற்சியில் பரீட்சார்த்தமாக அவர் ஈடுபட்டமை பாராட்டுக்குரியதே. இதன் காரணமாக, அச்சுப் பதிவில் ஏற்பட்டுள்ள சில குறைபாடுகளை நாம் புறக்கணிக்கலாம். உள்ளடக்கம் ஸ்க்ரீன் பிரிண்டிங் மூலம் பதிப்பிக்கப்பட்டாலும் வெளி அட்டை இரு வர்ணங்களில் (அச்சகத்தில்) அச்சிடப்பட்டுள்ளது.

பௌர்ணமியின் உள்ளடக்கம் மிகக் காத்திரமானது. பிரபலங்கள் பலரின் ஆக்கங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

அன்னலெட்சுமி ராஜதுரை, எஸ்.முத்துமீரான், எஸ்.ஐ நாகூர் கனி, கொழும்பு ரஹீமா, அல் அஸூமத் ஆகியோரின் கதைகளும் லெ.முருகபூபதி, ஏ.பி.வி.கோமஸ், கலைவாதி கலீல், விருச்சிகன் ஆகியோரின் கட்டுரைகளும் அன்பு முகையதீன் எம்.எச்.எம் ஷம்ஸ், மேமன்கவி, க.ப. லிங்கதாசன், ஈழகணேஷ், எம்.எஸ்.பி. அப்துர் ரஹ்மான், என்.நஜ்முல் ஹுஸைன், செ.மோகன்ராஜ், உஸ்மான் மரிக்கார், கலா. விஸ்வநாதன், இப்னு அஸூமத் ஆகியோரின் கவிதைகளும் அபூ முனாஃப் (அல் அஸூமத்) எழுதிய நாடகமொன்றும் பௌர்ணமியைப் பிரகாசிக்கச் செய்கின்றன.

அல் அஸூமத்தைப் பிரதம ஆசிரியராகவும் கலைவாதி கலீலை இணை ஆசிரியராகவும் கொண்டு அச்சி வாகனமேறிய மற்றுமொரு கலை - இலக்கிய ஏடு "முகில்" 1995, செப்டம்பர் - அக்டோபர் இதழாக 76 பக்கங்களில் வெளிவந்த முகிலின் விலை ரூபா 20.00 ஏனைய வெளியீடுகளிற்போலவே முகில் வெளியீட்டிலும் அஸூமத்தின் பங்களிப்பே பிரதானமானது.

மேமன்கவி, எம்.ஸி.எம்.ஸூபைர், ஏ.இக்பால், புல்வெட்டித்துறைப் புலவர் (அல்அஸூமத்), உட்பட மூத்த - இளைய தலைமுறைக் கவிஞர்கள் பலர் எழுதிய 17 கவிதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. "இருளும் ஒளியும்" (வைக்கம் முஹம்மது பீர் பற்றியது), "மாறி வரும் திரைப்பட அணுகுமுறை" (கே.எஸ்.சிவகுமாரன்), "மீடியா" (ஊடகம் பற்றிய அலசல்), "இலக்கியத் திருட்டு" (ஜவாத் மரைக்கார்), ஆகிய கட்டுரைகளும் "கூட்டம் தவறி மேய்வோர்" (மலையாள மொழிபெயர்ப்பும்), "நட்பு" (அல் அஸூமத்), "ஊருக்குப் போகத்தான் வேண்டும்" (கலைவாதி கலீல்), "அம்மா" (தெளிவத்தை ஜோசப்) ஆகிய சிறுகதைகளும் கிண்ணியா இர்ஃபான் எழுதிய குறுங்கதையும் கேள்வி - பதில் பகுதியும் சஞ்சிகையை நிறைத்துள்ளன.

பௌர்ணமி சஞ்சிகையை றோனியோ திரையச்சு ஆகியவற்றின் சேர்க்கையாக வெளிக்கொண்டு வந்ததுபோல், முகில் சஞ்சிகை, எழுத்தும் கோப்பச்சு (type Setting) திரையச்சு ஆகியவற்றின் சேர்க்கையாகக் கொண்டு வருவதற்கான முயற்சியில் அஸூமத் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளார். முகில் சஞ்சிகையில் இடம் பெற்றுள்ள (வர்ணப்) படங்கள் றோனியோ மெழுகுத்தாளில் வரையப்பட்டுத் திரையச்சு நுட்பத்தைப் பயன்படுத்திப் பதிக்கப்பட்டவை.

பூபாளம், பௌர்ணமி, முகில் ஆகிய சஞ்சிகைகளை வெளிக்கொண்டு வருவதில் அல் அஸூமத் என்ற தனிநபரின் பங்களிப்பு மகத்தானது என்பதில் ஐயமில்லை. இலக்கிய ஆர்வத்தையும் தனது ஆற்றலையும் உழைப்பையும் மாத்திரமே மூலதனமாகக் கொண்டு இச் சஞ்சிகைகளை அவர் வெளிக்கொணர்ந்துள்ளார். இவ்வாறான நிலைமையில் சஞ்சிகை ஒன்றை வெளியிடும்போது தொழில்நுட்ப ரீதியிலான குறைபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமுள்ளன. எனவே, இச் சஞ்சிகைகளில் அத்தகைய குறைபாடுகள் ஆங்காங்கே சிறிய அளவிற் காணப்படுவது புறக்கணிக்கத்தக்கதே ஆகும்.

அல் அஸூமத் தொகுப்பாசிரியராகவிருந்து வெளிக்கொணர்ந்த கவிதைத் தொகுதி "கவிதைச்சரம்" என்ற பெயரில் 1996 கடைசிப் பகுதியில் வெளியானது. தொகுப்பாசிரியர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் "கவிதைச்சரம்" என்னும் சஞ்சிகை நிகழ்ச்சியொன்றை நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தி வந்தார். இந்நிகழ்ச்சிக்காக இளைய தலைமுறைக் கவிஞர்களிடமிருந்து கிடைத்த கவிதைகளின் தொகுப்பே இது. 335 பக்கங்கள் கொண்ட இத்தொகுப்பில் 483 கவிஞர்களின் 568 கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

தனிமனித உழைப்பில் இக் கவிதைத் தொகுதி உருவாக்கப்பட்டது என்றபோதிலும், மிகவும் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டது என்பது நிதர்சனம். கவர்ச்சியான தடித்த மேலட்டை, சிறப்பான அச்சு வடிவமைப்பு என்பன தொகுதியைக் காத்திரமானதாகக் காட்டுகின்றன. இளைய தலைமுறையினருக்கு ஊக்குவிப்பை நல்கும் இத் தொகுதி அல் அஸூமத்தின் பாரிய பணி என்பதில் ஐயமில்லை.

சஞ்சிகை ஆசிரியராகவும் தொகுப்பாசிரியராகவும் பதிப்பாளராகவும் அல் அஸூமத் பணியாற்றி வெளிக்கொணர்ந்தவை எண்ணிக்கையிற் குறைவானவை எனினும், அவற்றை வெளிக்கொண்டு வருவதற்கு ஏற்பட்ட இடையூறுகள், வளப்பற்றாக்குறை, தனிமனித முயற்சி போன்றவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு பார்ப்போர், அன்றைய காலகட்டத்தில் இவை அல் அஸூமத்தின் இமாலய சாதனை என்றே கொள்வர் என்பதிலும் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்மடம் அ.அஜந்தன்


# "ஆயன்னையம்மாதாய்" கசப்பான பல உண்மைகளின் கூட்டு விம்பம்



அல் அஸூமத் எழுதிய "ஆயன்னையம்மாதாய்" என்ற சிறுகதைத் தொகுப்பு தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் 2012ஆம் ஆண்டு மார்கழிமாதம் வெளியிடப்பட்டது. இந்நூல் அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகவும், எட்டாவது நூலாகவும் அவரது இலக்கியப் பயணத்தில் இடம்பிடித்துள்ளது. 1980க்குப் பின் தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, அலை, மல்லிகை, ஞானம், பௌர்ணமி, ப்ரியநிலா மற்றும் இன்னுமொரு காலடி ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்ட 15 சிறுகதைகளின் தொகுப்பே இந்நூல். 212 பக்கங்களைக்கொண்டு வெளிவந்த இவ் நூலினை தனது இலக்கிய ஆசான் நயினை ஆர்.ஆர்.அப்பாத்துரைக்கும் அவரது மனைவிக்கும் சமர்ப்பணம் செய்துள்ளார். தாய்மொழி தமிழில்லாதபோதும் கற்ற மொழிமேல் பற்றுக்கொண்டு தமிழுக்குப் பல்துறையிலும் பங்களிப்புச் செய்துவருபவராக நூலாசிரியரை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் தலைவர் ஜின்னாஹ் ஷரிவுத்தீன் அவர்கள் அறிமுகக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளமை வாசகர்களுக்கு இந்நூலை நுகர்வதற்கு தயார்ப்படுத்த உதவுமென்றே நம்புகின்றேன்.

தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் உள்ள ஈடுபாடும், அடிமைப்பட்ட சமூகத்தின் வலிமிகுந்த வாழ்வும், மலையக மக்களின் மீது திணிக்கப்படும் சுரண்டல்களும், போர்பற்றிய வெளிப்பார்வையும், தான் சந்தித்த மனிதர்களும் அவர்களின் நினைவுகளும் இந்த நூலை வெளியிட உந்துசக்தியாக அமைந்திருக்கும் என்பது இந் நூலில் இடம்பெற்ற கதைகளின்வழி புலப்படும் உண்மை. ஆங்காங்கே கையாண்டுள்ள உவமைகளும், பாத்திரங்களையும் அவர்களின் உணர்வுகளையும் கண்முன் நிறுத்தும் பாங்கும் அவரின் வாழ்நாளில் தரிசித்த மனிதர்களின் ஊடாட்டத்தின் பிரதிபலிப்பாகும். இவரது எழுத்துக்களில் சமூகப் பொறுப்பும், சுயபாதுகாப்பும், யதார்த்தமும், அனுபவப் பகிர்வும், மறைமுகப் பரிந்துரைப்புக்களும், பாத்திரங் களின் பரிவும் பொறுப்புடமைகளும் பொதிந்து கிடப்பதைக் காணலாம். மனிதர்கள் உணர்வுகளால் பிணைக்கப்பட்டும் ஆளப்பட்டும் வருகின்றனர். அவையே மதம், இனம், மொழி கடந்த ஒத்துணர்வை ஏற்படுத்தும் ஆனால் துரதிஷ்டவசமாக இனவாத அரசியல் நீன்றகன்ற தடுப்புச் சுவரை அல்லது எல்லைச் சுவரை எம்மத்தியில் கட்டியெழுப்பியுள்ளதை இவரது சில கதைகள் உணர்த்துகின்றன.

பெரும்பாலான கதைகள் மலையக மக்களின் வாழ்வியல் சார்ந்ததாகவும் சில கதைகள் தனது சொந்த அனுபவங்களின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது. பெரும்பாலான கதைகள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலையகப் பேச்சுவழக்கில் அமைந்திருப்பதோடு அவர்களுக்கே உரித்தான பல நாளாந்தப் பாவனைச் சொற்கள் எமக்குப் புதிதாகவிருப்பினும் கதை யோட்டத்திலுள்ள யதார்த்த வாழ்வனுபவங்களினால் பொருள் விலகாது விளங்கிக்கொள்ளமுடிகின்றது. எமக்கு சுற்றுலாத்தலமாக விளங்குகின்ற மலைகளின் அடிவாரத்தில் வேரூன்றி நிற்கும் அந்தத் தேயிலைச் செடிகளைப்போல் லயத்தில் வாழும் மக்களிடத்தில் வறுமையும் ஆழமாய் வேரூன்றியிருப்பது இத் தொகுதி யின் பொதுவான பேசுபொருளாக உள்ளது. தேயிலைக் கொழுந்து பறித்த கரங்கள் தம் உள்ளங்கையில் சீனி அல்லது சர்க்கரையை அளந்திட்டு தேனீர் பருகுவது வறுமையின் குறியீடாக சில கதைகளில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. முதலாளி வர்க்கத்தின் அடக்கு முறைகளும் சுரண்டல்களும் பழகிப்போனதும் தவிர்க்க முடியாததுமான ஒரு வாழ்க்கை வரம்பிற்குள் சிக்குண்ட குடும்பத் தலைவர்களே இக்கதைகளின் முக்கிய பாத்திரங்கள்.

வறுமையிலும் விலகிவிடாத குடும்பப் பிணைப்பு களும் அவர்தம் கடமைகளும் பல கதைகளின் இடையில் இளையோடியிருப்பது "குடும்பம் சமூகத்தின் அடிப்படை அலகு" என்பதை உணர்த்தி நிற்கின்றது. வறுமை யோடும், பாசத்தோடும், அகமனதோடும், உணர்வு களோடும், சுய கௌரவத்தோடும், நாட்டின் திடமற்ற அரசியல் நிலைப்பாட்டோடும், மழலை மொழியோடும் நடைபெறும் போராட்டமே கதைகளின் உயிரோட்டம்.

எம்மால் இன்றளவிலும் புரிந்துகொள்ள முடியாத அற்புத மொழியாக இருப்பது மழலை மொழி. அவர்களுக்கே உரித்தான மொழியாகவும் ஒவ்வொரு குழந்தைக்கும் அவை தனித்துவமானவையாகவும் இருப்பது பேரானந்தம்தான். அவர்களின் சில சொற்களுக்கு பொருளைக் கண்டுபிடிப்பதற்கு பெரும் ஆராட்சியே செய்ய நேரிடும். அவர்கள் கேட்பதை சரியாகப் புரிந்துகொள்ளும் வரை குழந்தைகளின் அந்த இனங்காணமுடியாச் சொல்லை அவர்கள் உச்சரித்த வண்ணமே இருப்பார்கள் (இதைச் நச்சரிப்பென்று சலித்துக் கொள்பவர்களும் உண்டு). அதன் அர்த்தத் தைக் கண்டுபிடிக்க பல சமயங்களில் வயது மற்றும் பால்வேறுபாடற்று குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் இணைந்து தமது அகராதிகளையெல்லாம் புரட்டிப் பார்த்து இறுதியில் பொருளைக் கண்டுபிடித்துவிடுவதில் தோமஸ் அல்வா எடிசன்கூட தோற்றுவிடுவார். அவ்வாறான ஒரு அனுபவத்தை "மழலைச்சவால்" என்ற முதலாவது கதையினூடாக பகிர்ந்து செல்கின்றார். அந்தச் சுவாரசியத்தோடே நூலில் உள்ள கதைகள் ஆரம்பிக்கின்றன. "சொர்க்கத்தை எப்படி விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கின்றதோ அதேபோல மழலை மொழியையும் எம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை" என்று மழலை மொழி சொர்க்கத்திற்கு ஈடானதாகவும் அதனைப் புரிந்துகொள்வதிலுள்ள இன்பமான கடினத் தன்மையின் அனுபவத்தையும் இந்தக் கதை தந்து செல்கின்றது.

"புறமுதுகுகள்" என்ற சிறுகதையில் வரும் "ஏதோ போனமாதம்தான் எனக்கும் பிரஜாவுரிமை வந்தது- கத்தியின்றி, இரத்தம் இன்றி. இனியாவது அடையாள அட்டையைப் பற்றி யோசிக்கலாம் - சாவதற்காவது, "போர் களத்திற்குப் போக வேண்டும் என்ற எனது ஏக்கமே ஒரு வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக்கொடுத்தமையைத் தான் மனோபலம் என்கின்றேன்" மற்றும் "செத்தால் அந்தப்பக்கம் தியாகிப் பட்டமும் இந்தப்பக்கம் பயங்கரவாதிப்பட்டமும் கிடைக்குமே என்பதைப் போல" போன்ற சொற்றொடர் கள் இலங்கைப் பிரஜைகள் மீதான அன்றும் இன்றும் உள்ள அரசின் நிலைப்பாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டு. 175 ஆண்டுகளுக்கு மேலாக புலம்பெயர்ந்த பரம்பரை யினர் என்பதால். "இடமிலர்" என்றும் பின்பு "டமிலர்" என்றும் ஈற்றில் அது மருவி "தமிழர்" என்றும் வந்திருக்க வேண்டுமென்று தன்னிலை விளக்கமொன்றை பதிவிட்டுள்ளார். நண்பன் வீட்டில் இருந்தபொழுது பார்த்த இராணுவப் பயிற்சி போன்ற இளைஞர்களின் விளையாட்டு போரின் ஆழமான மனப்பதிவுகளின் சாட்சியாகவே பதிவிடப்பட்டுள்ளது. வெளியிலிருந்து பார்க்கப்படும் போர் அனுபவமும் நேரடியான போர் அனுபவமும் முற்றிலும் மாறுபட்டதென்பதை உணர்ந்து கொண்ட ஒரு கதையாக அது அமைந்துள்ளது.


"ஆயன்னையம்மாதாய்", "தாயிற் சிறந்தொரு பிரசவமில்லை", ஒரே ஒரு பெயர்" போன்ற கதைகள் குடும்பப் பிணைப்பையும் வறுமையையும் இணைத் தோடும் நதியாகப் பாய்கிறது. இந் நூலின் தலைப்பாக இடம்பிடித்த கதை தாயின் மரணமும் அதன் பாதிப்பை யும் விபரிக்கும் கதையாக நீள்கின்றது. "தலைமகன் பால்வார்த்ததாக அம்மா நினைத்திருப்பாரா ? அல்லது அதுவே விஷமாகி விட்டதா" என்ற மகனின் தவிப்பும், " இறந்தது அம்மா இல்லை இந்த நாட்டோட அமைதியின் சராசரிப் பங்கு", "அம்மாவைக் கொன்றது புற்றுநோயோ மூச்சடைப்போ இல்லை போலி அரசியல்வாதிகளின் வதந்திகள்" போன்ற உரைநடைகளில் எழுத்தாளனாக வும் மகனாகவும் இக்கதைக் களத்தில் போட்டியிட்டிருப் பதைக் காணலாம். தாயின் மரணம் எல்லாப் பிள்ளை களின் வாழ்விலும் இருள் சூழ்ந்த அத்தியாயமே என்பதை "ஆயன்னையம்மாதாய்" எடுத்துக்காட்டுவதோடு ஏனைய கதைகளிலும் தாயின் மகத்துவமும் பொறுப் புணர்வும் கருவுற்றிருப்பது நம்வாழ்வியலில் எல்லாப் பாகங்களிலும் தவிர்க்கமுடியாத கருப்பொருளாக தாய் என்ற பாத்திரம் இருப்பதை வலியுறுத்துகின்றது.

குடும்பத்தின் தலைப் பிள்ளையின் மகிமையைக் கூறும் "தாயிற் சிறந்தொரு பிரசவமில்லை" என்ற கதையில் "முதற் சொர்க்கத்தை உருவாக்கிக்கொள்ள எனக்கு ஆசானாகவிருந்து எனக்கு அனுபவம் தந்த என் மூத்தமகன்" என்று குடும்பத்தின் மூத்த பிள்ளைகளுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுத்ததோடு "ஒரு நூலை எழுதி வெளியிடுவது தாயின் பிரசவத்திற்குச் சமன்" என்ற எழுத்தாளர்கள் கொண்டாடிய சொல்லை முற்றிலும் நிராகரித்து "தாயின் பிரசவ வலிக்கு ஈடாக எதையும் ஒப்பிடமுடியாது" என்றும் கண்டித்துச் செல்கின்றார்.

வீரகேசரி பவளவிழா சிறுகதைப் போட்டியில் முதலிடம் பிடித்த "நிலத்தாய்" என்ற சிறுகதையை ஈழத்தின் நீண்டகால நிலப்பரப்பிற்கும் அதன்மீதான அதிகாரத்துக்குமான போராட்டத்தையும் அதன் முடிவையும் மன்னர்களுக்கும் நிலத்தாய்க்கும் இடையி லான விவாதமாக வடிவமைத்துள்ளார். இனங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறியீடுகளும், சம்பவ விபரிப்புக் களும் புதியதொரு கதைக் களத்தை பிரசவித்துள்ளது எனலாம். "ஜன நாயகம் ஒரு வெற்றுக் கிண்ணம் அதில் உணவையும் நிரப்பலாம் விஷத்தையும் நிரப்பலாம்" என்ற அரசியல் உண்மையை உணர்த்தும் வரிகள் ஆசிரியரின் கடந்தகால கசப்பான அரசியல் அனுபவத்தின் படிமம். ஈற்றில் வரும் நிலத்தாயின் புலம்பலாக "எனது துயர மெல்லாம் ஒரு பயங்கரவாதியையாவது அழிக்க முடியாமல் போய்விட்டதே என்பது தான்" என்ற வரிகள் அமைக்கப் பெற்றிருப்பது இக்கதைக்கு இது முடி வல்ல இது வாசகரின் சிந்தனைக்கு என்ற செய்தியைச் செவியோரம் சொல்லிச் செல்கின்றது.

ஒரு சராசரி மனிதன் ஒரு தொகைப் பணத்தைக் காணும்போது ஏற்படும் மனச் சஞ்சலமும் அதை யொட்டிய மனச்சாட்சியுடனான அகவுரையாடலுமாக "பஞ்சத்து ஆண்டி", தன் வாழ்நாளில் கிடைத்த ஒரு நல்ல நண்பனின் இறப்பையும் அதன் பின் பிற நட்பை ஏற்க மறுக்கும் மனோநிலையோடு "நட்பு", காலப் பயணத்தில் சந்தித்து மனதில் படிந்த மனிதர்களின் நினைவுகளின் மீட்டலாக "சைவப்பிள்ளை", "சோமண்ணன்", வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் குடும்பங்களின் யதார்த்த வாழ்வியலையும் அவர்களை ஆட்சிசெய்யும் ஆதிக்க வர்க்கத்தையும் கடிந்து கொள்வதும், வறுமையில் மறுவேளை உணவிற்கு அல்லாடும் நிதிநிலையில் கவிஞன், எழுத்தாளன் என்ற தன்னிறைவோடும் ஈகோவோடும் பிறர்முன் பாசாங்கு செய்து பின் குடும்பத்தின் பசிமுன் மண்டியிடும் அடித் தட்டுவர்க்க குடும்பங்களைப் புடம்போடும் "சகுனம்", "ஒரே ஒரு பெயர்" ஆகிய கதைகளை நூலாசிரியர் கத்தி யின்றி இரத்தமின்றி நடாத்திய ஒரு பேனாப்போராட்ட மாக பார்க்கலாம். வறட்சியும், நெகிழ்ச்சியும், சகிப்பும், புத்திமதியும், பரிவும், பாசமும், புரட்சியும் இவரது கதைகளில் பெரும்பாலும் காணப்படும் அலங்காரங்கள்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தை ஒரே நாட்டுக்குள் அவரவர் வாழும் பிரதேசங்கள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் அல்லது பாதிப்புக்கள், கேட்டறிந்த செய்திகள், பட்டறிந்த பாடுகள், தனிப்பட்ட அரசியல் கொள்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் விளங்கிக்கொண்டு பொழிப்புரை செய்கின்றனர். நிகழ் வொன்று விளக்கங்கள் இரண்டாகவோ பலவாகவோ அமைகின்றன. இனத்திற்காய் போராடியவனை போராளி என்றது இந்த இனம் மறு இனத்தில் பயங்கரவாதியென்று பெயர்சூட்டப்பட்டது. அவனது மரணம் தியாகம் என்றது ஓரினம் துரோகியென்றது மறு இனம். மாவீரன் என்றது ஒரு இனம் கோளைபோல் விஷ முண்டான் என்றது மறு இனம். வடமுனை துக்கதின மென்று துவண்டு நின்றது தென்முனை வெற்றிவிழா வால் திளைத்து நின்றது. இந்த முரண் நிலை நாட்டில் மட்டுமன்றி பல எழுத்துக்களிலும் தீமூட்டப்பட்டிருப் பதைக் காணலாம். அதே சமயம் இருவேறு கருத்துக் களையும் ஒரே இனம் இரு துண்டுகளாக கொண்டாடு வதையும் காண்கின்றோம். இந் நூலிலும் அவ்வாறான எண்ணக்கருக்கள் இடம்பிடித்திருக்கின்றன சற்று நடுநிலைத்தன்மை உணரப்படும் இடங்களும் அதன் துணிவும் பாராட்டுக்குரியது. இன்னொரு விதத்தில் வாதப்பிரதிவாதம் ஒரு தெளிவு நோக்கிய பாதையைக் காண்பிக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தப் போரியல் அல்லது அரசியல் விவாதங்களை இயற்கையுடன் இணைத்து மறைமுகமாக கதைகளை நகர்த்திய விதம் ஒரு தற்காப்புள்ள எழுத்தாக பார்க்கமுடிகின்றது. பற்றறுத்த துறவியும் வாழும் பற்றுள்ள உழைப்பாளியும் அரசதலைவனும் போரளித்தலைவனும் கொண்ட கருத்துக்களின் தொகுப்பாக நீளும் "துறக்கும், இடைக்கம், இறக்கம்" என்ற சிறுகதை இவரின் கொள்கைசார் சிந்தனைக்கு ஒரு எடுத்துக்காட்டு.


பொதுவாக யதார்த்தம் இயம்பும் கதைகளாக அமைந்துள்ளதால் எமது தனிப்பட்ட வாழ்வின் சில அனுபவங்களையும் நினைவூட்டிச் செல்கின்றது. உள்ளங்கையில் சீனி சிறிதளவிட்டு தேனீர் அருந்திய ஐ.பி.கே.எஃப் கால இடம்பெயர் வாழ்வையும், அம்மா வின் நியாயமற்ற இழப்பையும், நிதிசார் நெருக்கடியின் நெருக்கீட்டையும், போர்க்கால நினைவுகளையும் அவை மீட்டிச் செல்கின்றன. இந்நூலின் நுகர்வு மற்றவர்க்கும் அவ்வாறான ஒரு அனுபவத்தைத் தரக் கூடும். வாசகனை தனது எழுத்துக்களால் கட்டிப்போடும் கதை சொல்லியாகவும், காட்சிகளின் பௌதீக அமைப்புக்களையும் பாத்திரங்களின் நடத்தைப் பண்பு கள் மற்றும் தோற்றங்களையும் மனக்கண் முன் நிறுத்தும் வர்ணனைகளும், பொருத்தமானதும் அவசியமானதுமான இடங்களில் உவமைகள், உதாரணங்களை பயன் படுத்தியிருக்கும் முறையும் அவரின் நீண்டதொரு இலக்கியப் பயணத்தின் சான்றாகப் பார்க்கமுடிகின்றது. மொத்தத்தில் "ஆயன்னையம்மாதாய்" கசப்பான பல உண்மைகளின் கூட்டு விம்பமாய் மனதில் இடம்பிடித்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயப்பிரசாந்தி ஜெயபாலசேகரம்

# அல் அஸூமத்தின் இரு நெடுஞ்சிறுகதைகள்



எண்ணிறைந்த இலக்கிய வடிவங்களைக் கொண்ட தமிழ் மொழியிலே தனக்கெனத் தனியிடத்தைப் பிடித்துள்ள புனைகதைகளும் கதை, சின்னக்கதை, குட்டிக்கதை, சிறுகதை, நெடுங்கதை, நெடுஞ் சிறுகதை எனப் பல்வேறு வடிவங்களைத் தாங்கி வெளிவந்துள்ளன, இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் புகழ் பெற்று விளங்கும் ஈழத்து எழுத்தாளர்களுள் ஒருவரான அல் அஸூமத் அவர்களின் இரு நெடுஞ் சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு குறித்து இங்கு நோக்கலாம்.

வவுனியா சென்று வந்தவன், எனக்காகப் படைக்கப்பட்டவர்களும் அவர்களுக்காகப் படைக்கப் பட்டேனும் என்னும் இரு நெடுஞ் சிறுகதைகளூடாகவும் இருவேறு பட்ட வர்க்கத்தவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளைப் பேசியுள்ள இவர் அவற்றினூடாக ஒட்டுமொத்த ஈழத்து மக்களின் வாழ்வியல் அவலங்களையும் பதிவு செய்யத் தவறவில்லை.

**வவுனியா சென்று வந்தவன்**

சோமசுந்தரம் என்பவனைக் கதையின் நாயகனாகக் கொண்டு நம்நாட்டு ஏற்றுமதித் துறையில் முதுகெலும்பாய்த் திகழும் மலையகத் தோட்டத் தொழிலாளரின் வாழ்வியல் அவலங்களை இக்கதையினூடே பதிவு செய்துள்ளார். சோமசுந்தரத்தின் குடியிருப்பு பற்றிய ஆரம்ப வர்ணனை மூலமே இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தினை தெளிவாக ஆசிரியர் எடுத்தியம்புகின்றார்.

" "எல்க்கடுவை" என்று பெயர் பெற்ற ஓர் ஊரைப்பற்றிய ஞானம் உங்களுக்கு உண்டா? தேயிலைத் தோட்டங்கள் நிறைய உண்டு. ஒரு குறுப்புக்கு பெயரே இதுதான். அதே பெயரில் ஒரு சிறு கடைமண்டியும் உண்டு. இந்தக் கடைமண்டியைப் பார்த்தால் கீழிருந்து பார்க்க வேண்டும். வள்ளி தினைப் புனம் காத்த அந்தரக்கொட்டில் மாதிரித் தோற்றம் அளிக்கும். இந்த ஊரை அறிந்தவர்கள் இலங்கையில் மிகக் குறைவுதான். ஏனென்றால் "அழுக்கடை" என்ற பெயரில் தான் இவ்வூர் பிரசித்தி பெற்றது."

இத்தகைய ஒரு தோட்டப்புறத்திலே வெறும் எட்டடியேயான காம்பறாவுக்குள் பத்துப் பன்னிரண்டு பேர் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் வயதானோருமாய் வாழ்கின்ற அவலத்தையும் அவர்களின் வாழ்வாதாரச் சிக்கல்களையும் பேசிச்செல்லும் ஆசிரியர் வழக்கம் போல மலையக இலக்கியங்களில் பதிவு செய்யப்படும் துரைமார், கங்காணிமாரின் சுரண்டல்களுக்கும் அப்பால் வேறொரு விதமான சிக்கல் குறித்து இங்கு சுட்டிக்காட்டுவது சிறப்பானதாகும்.

அதாவது "அக்கினி வருஷத்திற் பிரசவமாகியிருந்த அந்த வருஷத்தின் எரிவிளையாடல் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. கொளுத்தோ தெண்டமென்று கொளுத்திக் கொண்டிருந்த சூரியக்கோபத்தினால் தேயிலைகள் பாதி கருகியும் பாதி வாடியும் தொழிலாளர்களையும் அதே கதிக்குள்ளாக்கின. இதனால் உடல் வலு இன்னும் ஒட்டிக்கொண்டிருந்தவர்களும், அது இல்லாது போனாலும் அதிலே குருட்டு நம்பிக்கை கொண்டிருந்தவர்களும் தோட்டங்களை விட்டு ஏதாவது கிடைத்தாற் போதுமென்ற மனப் போக்கில் வேற்றிடங்களுக்குப் போகத் தொடங்கினார்கள்" என்கின்ற பகுதியினூடாக இயற்கையின் இரக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற செயலால் அன்றாட உணவுக்கே அல்லாடிய இம்மக்களின் துயரம் இங்கு பேசப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் வவுனியாவிற்குச் சென்ற சோமசுந்தரமும் அவனது நண்பனான பிடாரியும் அவன் போன்ற ஏனைய மலையகத் தொழிலாளிகளும் மாசிமலைக் கங்காணி என்கின்ற முதலாளியிடம் மாட்டிக்கொண்டு படும் துயரங்களை கிண்டலும் கேலியுமாகப் பதிவு செய்து அதனூடாக அம்மக்கள் வாழ்வதற்காக எதிர்நோக்கிய சிரமங்களும் அவர்களை ஏமாற்றிப் பிழைக்கும் முதலாளி வர்க்கத்தினரையும் வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டுக்காட்ட முயன்றுள்ளார்.

இவர்களது உழைப்பை எல்லாம் அட்டை போன்று கூடவே இருந்து உறிஞ்சி எடுத்துவிட்டு இறுதியில் அவர்கள் ஊதியத்தைக் கேட்கும் போது கள்ளத்தோணிகள், நாடற்றவர்கள் என பொலிசில் பிடித்துக் கொடுத்து பின்னர் தானே விடுவிப்பது போன்று விடுவித்து ஊரைநோக்கி அனுப்புகின்ற முதலாளிமாரின் குள்ளநரித் தனத்திற்கு அகிம்சையால் அல்ல வன்முறையால் தான் தீர்வு கிடைக்கும் என்பதை மாசிமலைக் கங்காணியைத் தாக்கிவிட்டு சோமசுந்தரம் தப்பிச்செல்வதன் ஊடாகக் காட்சிப்படுத்தும் அதே வேளை அந்நேரத்தில் அவனது உள்ளக்குமுறல்கள்,

" இப்புடிப் பொளைக்க வந்தவங்கள ஏமாத்திக் கொள்ளையடிக்கிறியே. நீயும் இந்தக் காட்டுக்குப் பொளைக்க வந்தவந்தானே? இந்தக் கொடுமய எங்களுக்குச் செய்யுறியே. ஆண்டவன் ஒன்னய சும்மா உட்றுவான்னு நினைக்கிறியா?... வேகா வெயில்ல நெத்தி வேர்வ நெலத்தில சிந்த பாடுபட்ற அரும ஒனக்குத் தெரியுமாடா தடிப்பயலே?... எங்க பசிக் கொடுமைல தான் நாங்க இங்க வர்றோம். ஆனா இங்க கங்காணிமாரோட பசிக்கொடும இல்லியாடா எங்களயெல்லாந் திங்கிது!...எங்க தோட்டங்கள்ல கொம்பனியுந் தொரமாருங் கொள்ளையடிக்கிறாங்க! இருந்தாலும் எங்களுக்கு எலும்புத் துண்டுகளயாச்சும் போடுறாய்ங்க! நீ?... எங்க எலும்பயே திங்கிறியே!...இப்பிடிக் கொள்ளையடிக்கிற நீ புளு வச்சித் தான்டா சாவ!...ஏம்புட்டு சல்லி எனக்குப் பெரிசில்லடா. அத நீயே பிச்சக்காசா வச்சிக்க! ஆனா நான் ஒனக்கொரு பாடம் படிப்பிக்காம போறதில்ல!.." என்கின்ற வார்த்தைகளாக வெளிவந்ததும் அதனால் மனமாற்ற முற்ற முதலாளியின் நிலையை இறுதியில் அவனது பணத்தை அவனிடமே சேர்ப்பித்து அவனை முதலாளியாக்கி தான் துறவு பூண்டு பரதேசியாகித் திரியும் காட்சியுடன் கதையை நிறைவுறுத்தியிருக்கும் பாங்கும் ஆசிரியரின் கற்பனைத் திறனுக்கும் எழுத்தாற்றலுக்கும் கட்டியம் கூறி நிற்கின்றன.

**எனக்காகப் படைக்கப்பட்டவர்களும் அவர்களுக்காகப் படைக்கப்பட்டேனும்**

ஒரு எழுத்தாளனை நாயகனாகக் கொண்டு நகரும் இக்கதை நமது நாட்டில் படித்தவர்களின் வாழ்வியல் அவலம் குறித்துப் பேசிச் செல்கின்றது. எமது நாட்டு அரசியல், கம்யூனிசம், இன,மத நல்லிணக்கம், ஆண் பெண் சமத்துவம், ஈழத்திற்கும் இந்தியாவிற்கு மான உறவுநிலை எனப் பலதையும் பத்தையும் கதை நகர்வுடன் பேசிச்செல்லும் இக்கதை சிறப்பாக கல்வி கற்றவர்கள், படித்த மத்தியதர வர்க்கத்தினர் எனப்படுவோரின் அன்றாட வாழ்வியல் அவலங்களையே அதிகம் எடுத்தியம்பி நிற்கின்றது. இக்கதையில் பேசுபொருள் என்பதற்குமப்பால் ஆசிரியரின் மொழியாளுமை வாசகர்களை அதிகம் கவரும் வகையில் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சான்றாக சிலவற்றை இங்கு நோக்கலாம்.

**கவித்துவம் கலந்த மொழிநடை**

"விழிப்புணர்ந்தேன். அற்றையைத் தொடக்கினேன். எனக்கு மீண்டும் ஒருநாள். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மறைநெறிகள் கூறியிருக்கிற எல்லாத் தேறுதல்களுக்கும், நாட்டின் ஒவ்வொரு நெறிமுறைகளுக்கும், என்னோடிருந்தே என்னைக் கொல்லும் நெஞ்சத்துக் கொலை வாளுக்கும் அடங்கி வாழ வேண்டிய நேற்றையைப் போன்ற ஓர் இன்று."

**கிண்டலும் கேலியும் நிறைந்த மொழிநடை**

"ஒரு நாள். ராணி. காலையில இவுங்க வந்தாங்க. "பட்டு சீலருக்கு. வாங்குறீங்களான்னாங்க. வாங்காட்டிப் போனாலும் பாக்காமயா விடுவா ஒங்க மாமி? "கொண்டாங்க பாப்பம்னா. மதுரையம்மா இந்தியாவ விரிச்சாங்க! பத்து நாளாச்சி. இன்னும் மூடல்ல"

**வித்துவ மொழிநடை**

"மளலைத் தமிளில் ஒரு பென்னாலும் ஆனாலும் செய்தி வளங்கப்பட்டுக் கொண்டிருந்தது" அதாவது இன்று தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் செய்தி வாசிப்போரால் தமிழ் கொல்லப்பட்டுக் கொண்டிருப்பதை தமிழ் எழுத்துப் பிழையினூடாகவே நாசூக்காக விளக்கியுள்ள பாங்கு பாராட்டத்தக்கதாகும்.

**வட்டார வழக்கு, சமூகக் கிளைமொழி**

உம்மா, ஒன்ன, தடி போடுதல், என்னா பலாய் படிச்சீக்காண்டு தெரியா முதலான சொல்லாடல்கள்.

இவ்வாறு மொழிநடைச் சிறப்பாலும் பலவித மான பேசுபொருளைக் கொண்டு நகர்ந்து செல்வதாலும் இந்நெடுஞ்சிறுகதை நாவலாக விரிந்திருக்கக் கூடாதோ என்கின்ற மன ஆதங்கத்தை வாசகருக்கு ஏற்படுத்தத் தவறவில்லை.

முடிவாக நோக்கும் போது அல் அஸ்மத் அவர்களின் இவ்விரு நெடுஞ்சிறுகதைகளும் ஈழத்து மக்களின் பல்வேறுபட்ட வாழ்வியல் அவலங்களையும் மிகச் சுவாரஸ்யமான மொழிநடையில் பதிவு செய்து உள்ளடக்கம், உருவம், உத்திநுட்பங்கள் என்கின்ற இலக்கிய வரைமுறைகளைச் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்பதைக் காணமுடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பீ, மலையாண்டீ!

தம்பீ, மலயாண்டி! தவறா நெனைக்காதே!
ரொம்ப நாளா நான் யோசிச்சுத் தாஞ்சொல்றேன்!
ஒங்க குடும்பத்ல ஒருத்தன்தான் நானும்னு
தங்க மனசோட, தம்பி, இதக்கேளு:
சம்பளத்த எடுத்தொடன சாராயங் குடிக்கப்போற.
அம்பதுக்கும் நூறுக்கும் அழகழகா ஷேட்டுவாங்கிப்
பொம்பளைங்க பாக்கணும்னு
போட்டுக்கிட்டுத் திரிஞ்சிவாற.
நம்பள்க்கிது லாபமின்னு நல்லாகொஞ்சம் யோசிச்சியா?
"என்னடாப்பா, கணக்கப்பிள்ளை
என்னென்னமோ ஒளர்றானே"ன்னு
எண்ணாம எண்ணிப்பாரு; எம்பேச்சு அப்பபுரியும்!
சிகிரெட்னா என்னான்னு சீந்தாத காலத்தில
சிகிரெட்டு யாவாரிங்க சிலுசிலுன்னு, கமகமன்னு
செஞ்சிவந்து எல்லாருக்கும் சும்மாவே குடுத்தாம்பா!
அஞ்சாறு பொகச்சப்புறம் அதுக்கே அடுமையாகி
இன்னைக்கு சிகிரெட்டு இல்லேன்னா ஐயோங்கிறோம்!
அன்னைக்கே இப்டித்தாம்பா அரசாண்ட வெள்ளக்காரன்
தோட்டத்து ஆளுங்களத் தோப்புக்கரணம் போடவைக்க
ஊட்டமான சரக்குன்னு ஒவ்வொரு தோட்டத்லயும்
சாராயம், கள்ளுன்னு சந்தியெல்லாம் தவறணையா
பாருபாரா. கட்டிவச்சிப் பழக்கத்த உண்டாக்கினான்!
அதக்குடிச்சி நம்பஜனம் அறிவழிஞ்சி, அடுமயாகிப்
பதப்பதச்சி ஒழச்சகாசப் பழாக்கிப் பாழாகி,
மறுபடியும் மறுபடியும் மலையேறிப் பாடுபட்டு
ஒருவழியுங் காணாம் ஓடாவே தேஞ்சாங்க.
நம்பள அழிக்கவந்த நாசகார போதைக்குச்
சம்பளமே பத்தாதே!... தம்பீ, வெளங்குதாப்பா?...
ஒங்க குடும்பத்தில் உள்ளதே நாலுபேரு.
எங்க குடும்பத்தில் இருக்கிறதும் நாலுபேரு.
நீங்க நாலுபேரும் நெதம்வேல செய்யிறீங்க
தூங்கவொரு கட்டிலிருக்கா? துப்பட்டி ஒண்ணிருக்கா?
இருவதாம் தேதிக்குள்ள எங்கெங்கயோ கடன்வேற!
இருநூறு வச்சாலும் எண்ணூறு சம்பளம்.
தங்கச்சி ஒருத்தியும் தலைதூக்கி நிக்கிறாளே!
தங்கத்தில ஏதாச்சும் தப்பித்தவறி உண்டாப்பா?
எனக்குஞ் சம்பளம் எண்ணூறு ரூபாதான்.
மணிக்கூடு, பண்டபாத்ரம், மரியாதயா நாலுசாமான்
எங்கவீட்ல இருக்குப்பா, ஏன்ஒனக்கு முடியாது?
திங்கவுமா, டீஷேட்டோட திரியவுமா கெடந்தோம்னா
யாருப்பா நம்பளையும் ஆளுங்கன்னு மதிப்பாங்க?
பாருப்பா கொஞ்சம் பட்டணத்து ஜனங்களையும்.
அறுநூறோ எண்ணூறோதான் அவுங்களுக்குஞ் சம்பாத்தியம்.
சிறுநீரு கழிக்கக்கூட சில்லறதான் வேணுமங்க!
வெறகு, தண்ணி, வீடு, வேலைக்குப் போகவர
செறகு மொளச்சாப்ல செலவுக அவுங்களுக்கு
இருந்தும் அவுங்கள்ளாம் எவ்வளவு நல்லாருக்கா?
இருந்தா அந்தப்புத்தி இந்தக்கஷ்டம் நமக்கேம்பா?...



சாராயம் வேணாங்கல்ல; டீஷேர்ட்டும் வேணாங்கல்ல;
ஆராய்ஞ்சி பாக்கச்சொல்றேன்; அப்பத்தான் புரியும்பா!.
வாழயடி வாழயாவே வாழாம கெட்டுட்டோம்.
நாளைக்காச்சும் வாழணும்னு நாமஎண்ணக் கூடாதா?
வேலைவிட்டு வந்தம்னா வேறவேலை இல்லியாப்பா?
நாலஞ்சி பேருசேந்து நல்லகாரியம் செய்யேலாதா?
லயம்லயமா போயிநின்னு, ராவுராவாக் குடிச்சிகிட்டு,
பயாஸ்கோப்பு பாத்துகிட்டுப் பாழாகிப் போனம்னா
எப்பத்தான் முன்னேறி எந்தப்பக்கம் நடக்கப்போறோம்?
துப்பரவா இருக்கணும்னா தூசியில் திரியலாமா?
நாலுகாசு இருந்தாத்தான் நம்பளயும் மதிப்பாங்க.
நாலுபேரப் பாத்துங்கூட நாமள்ளாம் திருந்தலேன்னா
நாலுகாலு ஜீவன்களும் நாமளும் ஒண்ணுதாம்பா!
காலம்போற போக்கப்பாத்துக் கவனமாப் பொழச்சாத்தான்
தோட்டத்து ஜனங்களுக்குத் தொல்லபோயி நல்லதாகும்.
போய்ட்டுவா, மலயாண்டி! புத்திகடன் குடுக்காத!

அல் அஸூமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் அஸூமத் பற்றிய சிறுதகவல்கள்

**பிறப்பு** : ஸ்ரீலங்காவின் மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை எனும் நகருக்கு இரு கி.மீ.அண்மையில் திக்கிரியா எனும் ரப்பர்த் தோட்டத்தில் 1942, நவம்பர் மாதம், 22 ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை (கார்த்திகைத் தீபத்தன்று) காலை ஏழரைக்குப் பிறப்பு.

**தந்தை:-** ராமன் தாயர் எனப்பட்ட பொன்னையா. கேரளத்தில் நெய்யாற்றிங்கரையைச் சேர்ந்தவர்.

**தாய்:-** தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த முத்தையாத் தேவருக்கும் சந்தனத்துக்கும் பிறந்த மாரியாயி. மாரியாயி இலங்கையிற் பிறந்தவர்.

**பெயர்:-** வேலாயுதம்.

**கல்வி நிலையங்கள்:-** ஆரம்பக் கல்வி - மந்தண்டாவளை ஆட்டுப்பட்டிப் பாடசாலை (அரசினர் தமிழ்க் கலைகள் கனிஷ்ட பாடசாலை), நிக்கக் கொட்டுவைத் தோட்டப் பாடசாலை, இறத்தோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (1952 வரையில்). பின்னர் மாத்தளை, கந்தசாமி சைவத் தமிழ்ப் பாடசாலை - இப்போதைய தேசிய இந்துக் கல்லூரி.

**கல்வித் தகைமை:-** சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (S.S.C.), 1959, கல்வி மொழி - தமிழ்

**செய்தொழில்கள்:-** ஆசிரியம், தேயிலைத் தோட்டத்து சூப்பர்வைசர், ஓட்டல், விசைச்சுருளி (Spring) செய்தல், அச்சுக் கூடம்.

**எழுத்துலக நுழைவு:-** 1959.

**எழுத்தாசான்:-** "நயினை ஆறாறே" எனும் நயினாதீவைச் சேர்ந்த ஆர். ஆர். அப்பாத்துரை அவர்கள். எங்கள் ஆசிரியர்மாருள் ஒருவர். 25.06.2009 இற் கனடாவிற் காலமானார்.

**ஈடுபாடுள்ள எழுத்துத் துறைகள்:-**
சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, விமரிசனம், மொழிபெயர்ப்பு.

**மேலும் ஈடுபாடுள்ள துறைகள்:-** இசைக் கருவிகள் மீட்டுதல் (:டோலக், தபேலா, புல்லாங்குழல்), ஓவியம்.

**எழுதிப் பத்திரிகை, சஞ்சிகைகளிற் பிரசுரமானவை:-** சிறுகதைகள் 60, நாவல்கள் 3, கவிதைகள் சில ஆயிரங்கள், குறுங்காவியங்கள் எட்டு, கட்டுரைகள் சுமார் முப்பது, நெடுங் கட்டுரைகள் 2 (வரவுக் வளமு..., யாப்பியலுரை)

**மேடைக் கவிதைகள்:-** ஏறக்குறைய 100.

**வானாலி:-** பல கவியரங்கங்கள், பேட்டிகள். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் தொடர்ந்து நான்காண்டுகள், புதிய கவிஞர்களுக்கான கவிதைப் பட்டறை ஒன்றைப் பொறுப்பெடுத்தும் செய்துள்ளேன்.

**தொலைக்காட்சி:-** பல கவியரங்கங்கள், பேட்டிகள், கலந்துரையாடல்கள்.

**எழுத்துலகப் பொது வெளியீடுகள்:-** கவிதைக்கான ஒரு காலாண்டேடு "பூபாளம்" எனும் பெயரில் நான்கு இதழ்கள் வெளிவந்தன. 1983 ஜூலைக் கலவரத்தோடு அது நின்றுபோனது, பின்னர் "பௌர்ணமி" எனும் பெயரில் ஒரு ரோணியோ சஞ்சியையும் "மேகம்" எனும் பெயரில் ஒரு சஞ்சிகையும் வந்து நின்று போயின.

**பரிசுகள்:-** பல சிறுகதைகளுக்கும் கவிதைகளுக்கும் முதற்பரிசுகளும் இரண்டாம் மூன்றாம் பரிசுகளும் ஆறுதற் பரிசுகளும் கிடைத்தன. எனது "விரக்தி" எனும் சிறுகதை, 1999இல் இலங்கையில் முதற் பரிசு பெற்று, பின்னர் புதுடெல்லிக் "கதா" அமைப்பினால் சிறந்த இலங்கைச் சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு "சார்க்" நாடுகளுக்கிடையிலான சிறுகதை மொழி பெயர்ப்பிற் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதற்குரிய சன்மானமாக இந்திய அளவீட்டில் ரூபா 2,000 அளிக்கப் பட்டது. ஆனால் அப் பணம் இன்னும் எனக்குக் கிடைக்க வில்லை என்பது ஓர் அழகான எழுத்துலக அனுபவம்!

**புனைபெயர்கள்:-** பொன். வேலாயுதம், சுடுகந்தை வேலாயு தம், சுடு வேலன், சுவே, வாணியன், மாத்தளையான், எல் அசோமட், அசோமட்டெலக்கோவ், மொ. அ. அப்துல் அஸீஸ், சாத்தன், அபூ முனாஃப், ராமபுத்திரன், பொன்மாரி, அ.பாவேந்தி என்பன. அல் அஸூமத் என்பதுவும் எனது புனைபெயரே. ஆனாலும் அதனை என் சொந்தப் பெயராகப் பதிவு செய்திருக்கிறேன்.

**எழுத்துலகக் கௌரவங்கள்:-**
1992இல் ஸ்ரீலங்கா முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நஜ்முஸ் ஸூஆரா விருதும்
2006இல் ஸ்ரீலங்காக் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் கலாபூஷணம் விருதும்
2009இல் இலங்கை முஸ்லிம் கலைஞர் முன்னணியால் இலக்கிய சாகரம் விருதும்
2011 இல் இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகத்தால் தமிழ்நாடு - காயல் பட்டினத்தில் தமிழ் மாமணி விருதும் தமிழியல் விருதினாலும்
இலங்கை வானொலி - கொடகே சகோதரர்கள் இணைந்த குழுவினராலும் கம்பன் கழகத்தினராலும் உதயணன் இலக்கிய விருதுக் குழுவினராலும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளும் வழங்கிக் கௌரவப்படுத்தப்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிவந்துள்ள நூல்கள்:-**

1. புலராப் பொழுதுகள் (நெடுங்கவிதை 1982. முஸ்லிம் எழுத்தாளர் தேசிய கவுன்சில் பரிசு பெற்றது).
2. மலைக்குவில் (கவிதைத் தொகுப்பு - 1987).
3. பிலால் (மொழிபெயர்ப்பு உரைநடை, 1988. மறுபதிப்புகள் - 1995 ஸ்ரீலங்கா, 2006, 2010 மெல்லினம் பதிப்பகம், தமிழ்நாடு, 2018 ஸ்ரீலங்கா).
4. கவிதைச் சரம் (1996. 483 கவிஞர்களின் 568 வானொலிக் கவிதைகள்)
5. வெள்ளைமரம் (சிறுகதைத் தொகுப்பு - 2001 அரச தேசிய சாகித்திய மண்டலப் பரிசும் சிரித்திரன் சுந்தர் நினைவுப் பரிசும் பெற்றது).
6. குரல்வழிக் கவிதைகள் 2009. (யாழ். இலக்கிய வட்டம் பரிசு பெற்றது.)
7. அறுவடைக் கனவுகள் (நாவல் 2010. தமிழியல் விருது பெற்றது).
8. ஆயன்னையம்மாதாய் (சிறுகதைகள் - 2012). (கொடகே தேசிய சாஹித்திய விருது பெற்றது).
9. இறைத்தூதர் முஹம்மத் (ஸல்.) அவர்களது காலத்தில் பெண் விடுதலை மொழி பெயர்ப்பு (பக்கம் 22 முதல் 398 வரை) 2015
10. யாம்பியலுரை - ஆய்வுக் கட்டுரை -2016, 2000.
11. அவள் பெய்கிறாள் - மலையாள மொழி பெயர்ப்புச் சிறுகதைகள் - 2016 (அரச இலக்கிய விருது பெற்றது)
12. வரவுக்கவிதைகள் வளமுற - ஆய்வுடனான ஒரு விளக்கம் - 2016
13. 14, 15 ,இஸ்லாமிய வரலாறு (மூன்று பாகங்கள்) - 2017 (சென்னை ரஹ்மதி அறக்கட்டளை)
16. உலகின் பேரொளி முஹம்மத் (ஸல்.) - சென்னை ரஹ்மத் அறக்கட்டளை நடத்திய உலகளாவிய கட்டுரைப் போட்டியில் இந்திய மதிப்பில் ரூபா ஒரு இலட்சம் பரிசு பெற்றது. - 2018
17. அமார்க்கவாசம் - நாவல் - 2020 (அரச இலக்கிய விருது பெற்றது)
18. பிலால் காவியம் - 2020.

**கையிலிருப்பவை:-**

பெருங் காவியம் 1 (ஒன்று தனித்தமிழில்), குறுங்காவியங்கள் 8, சிறுகதைகள் 32, நாவல் 1, கவிதைகள் சில நூறு, நபிக்குறள் (இன்னும் முற்றுப்பெறவில்லை. இதுவரையில் 2200 குறள்கள் இயற்றப்பட்டுள்ளன.), கவலைப் படாதீர்கள் (மொழிபெயர்ப்பு), நடைப்பா, குறு நாவல்கள் இரண்டு.



## கணக்குப்பிள்ளை புலம்புகிறார்

"ஜெனறல் கேப்பீ" யென்ற செல்லத்துப் பேரோடிங்கு
ஜென்மமிதை எடுத்துவிட்டேன், ஜெகமே! என்னைத்
திணறல் கேப்பீயென்று திக்கெட்டுங் கேட்கும்படி
திருவாய் மலர்ந்தருளித் திட்டு!

"வட்டார்யூ டூயிங்?" என்று வந்துகடுப் பார் "பீ.டி";
வருவார் அவர்போக எஸ்.டி.. பின்னர்
"வட்டார்யூ சேயிங்?" என்று வளைந்த சிவப்பெழுத்தில்
வணக்கம் கேட்டிடுவார் "புக்"கில்

"கோர்ஸ்லீ∴ப்ஸ் வெரிமச், அண்டு ஸ்டால்க்லீ∴ப்ஸ் ∴புள்வை?" என்ற
குறிப்புடனே ராக்கெட்டை அனுப்பும் "டீ. எம்."
"ஸார்"கள்பல போட்டென்ன "சம்திங்"வழி செய்தென்ன;
"டஸ்ட்"டாய் ஊதிடுவார் என்னை!

"டோட்டல் மிஸ் டேக்" என்றும் "தோட்டமுமேன் லொஸ்" என்றும்
தொகையாகக் கேட்டெழுதும் "சீ∴ப்"பும் சீராய்ச்
சாட்டையடித் தெண்டங்கள் தவறாது மாதமெலாம்
ஜமாய்த்திடுவார் நானென்ன செய்ய?

"கணக்குப்பிள்ளை நீதானோ கா" ணென்று தொழிலாளர்
கத்தியொடு முன்வந்தென் கழுத்தைத் தேட,
எனக்குப்பிள்ளை யாகினவர், என்மனைவி, சுற்றத்தார்
"ஏனிந்த வேலை, சீ" என்பர்!

கடுகடுக்கும் பீடி, எஸ்டீஸ், கட்டியனுப்பும் டீஎம்ஸ், ஆ∴பீஸ்
கிடுகிடுக்கும் ஸீஸீஸ் மற்றும் லேபரர்ஸ்
குடுகுடுக்கும் கணக்கனெனைக் குத்தியுயிர் கொல்வர்!
குருடனாம் எனைப்பார்த்துக் குரை!

முன்பிறப்பிற் செய்தவினை மூண்டுவந்தே என்னையொரு
முழுமுட்டாள் கேப்பீயாய் முடித்த துவோ?
மண்பிறப்பில் இனியோர்நாள் மலையுத்தி யோகஸ்தனாய்
மாறாமல் நான்வாழ வாழ்த்து!



பீ.டி. பெரியதுரை
எஸ்.டி. சிறிய துரை
டி.எம் - டீமேக்கர்
ஸீ.ஸீ பெரிய கிளாக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org